
புத்தம் புதிய பூங்காவன நாவல்

# ரமணிசந்திரன்

ரூ.25/-



அழகிய
மங்கையர்
நாவல்

# உண்மை அறிவாயோ வண்ணமலரே ?

உலகிலேயே மிக அதிகமானவர்கள் படிக்கும் தமிழ்நாவல்

ரமணிசந்திரன்

# உண்மை அறிவாயோ வண்ணமலரே?





காஃபியைப் பதமாக ஆற்றிக் கணவர் கையில் கொடுத்துவிட்டு, வேதவல்லி கேட்டாள், “என்னங்க மதியம் சாப்பிட வருவீர்களா?”

“ஊகூம். ஒன்பது மணிக்கு மேல் தொழிற்சாலைக்குப் போய்விட்டு, மதிய உணவுக்கு வருவதானால் தொழிற்சாலையைக் காரில் இருந்தபடியே சுற்றிவிட்டு வர வேண்டியதுதான். என்ன விஷயம்? இரண்டாவது தடவையாகக் கேட்கிறாயே! ஏதாவது வந்தாக வேண்டிய தேவை இருக்கிறதா?” என்று சுகவனம் பதில் கேள்வி கேட்டார்.

“ஐயோ, அப்படி இல்லைங்க. இந்தப் பக்கமாக வேலை என்றால் சாப்பிட வருவீர்களே, அப்படி நீங்கள் வந்தால், மதியத்துக்கு உங்களுக்குப் பிடித்த பதார்த்தமாக, ஏதாவது செய்யலாமே என்று நினைத்தேன், அவ்வளவுதான். பிள்ளைகளும் மூன்றரைக்கு மேல்தான் வருவார்கள். எனக்கு மட்டும் என்றால், காலையில் செய்ததில் மிஞ்சியதை வைத்துக் கொண்டு இருந்து விடுவேன். அதற்காக கேட்டேன்” என்று விளக்கியபடி கணவன் காஃபி குடித்து முடித்த காலி தம்ளரை கையில் வாங்கினாள் மனைவி.

"ஏ...ய், இதுதானே, வேண்டாம் என்கிறது! நாங்கள் யாரும் இல்லாவிட்டால், நீ மீந்ததை மட்டும் சாப்பிட்டுக் கொள்வாயாக்கும்? அப்படி இருக்கக் கூடாதும்மா! நீ இந்த வீட்டில் முக்கியமான ஆள் இல்லையா? உனக்காகவே, தனியே சமைக்கச் சொல்லலாமே! செய்ய வேண்டும். இந்த மாதிரி அரை குறையாக உண்கிற பழக்கமெல்லாம் அடியோடு மறந்து விட வேண்டும். தெரிகிறதா? ஏய், யாரங்கே? தேவானையா? இங்கே பார் தேவானை, அம்மாவுக்கு மதியத்துக்கு நல்ல சாப்பாடு செய்து கொடு. வேண்டாம் என்றால் விட்டு விடாதே! என்ன?" என்று பணித்தவருக்கு, அந்த தேவானை மலங்க விழித்ததைப் பார்த்து சிரிப்பு வந்தது.

ஃபைல்களை பார்த்தபடியே தட்டில் விழுந்ததை விழுங்கிவிட்டு செல்லும் முதலாளி, திடீரென்று சமையல் பற்றிப் பேசினால், அப்படித்தான் இருக்கும்! போகட்டும், ஆனால் வேதா இப்படி, இருப்பதை உண்டு இல்லாவிட்டால் சமாளிப்பது எல்லாம் கூடாது. அதெல்லாம் அவள் சிறு வயதோடு முடிந்துவிட்ட விஷயங்கள்! இப்போது அவள், இந்த வீட்டு எஜமானி! அந்தப் பதவிக்கு உரிய உரிமையோடும், மகிழ்ச்சியோடும் அவள் தலை நிமிர்ந்து வாழ வேண்டும்!

கையில் இருந்த காலித் தம்ளரை தேவானையிடம் கொடுத்து அனுப்பிவிட்டுக் கணவனைப் பார்த்தாள் வேதவல்லி.

மெல்லியதாக முறுவலித்து "என்னங்க செய்வது? ஐந்திலே வளையாதது, ஐம்பதிலே வளையுமா என்பார்கள். சிறு வயது பழக்கம் எல்லாமே, அப்படித்தான் போல!"

பெரியம்மாவுக்கும், பெரியப்பாவுக்கும் பெரிய மனது. அந்த அன்பினாலே, மகளோடு சேர்த்து என்னையும் வளர்த்துப் படிக்க வைத்தார்கள் என்றாலும், லீவுக்கு செல்லும் என் அப்பா வீட்டுப் பழக்கம்தானே, என்னதாக, என் மனதில் படிந்திருக்கும்? நீங்களும் என்னதான் அன்பைப் பொழிந்து இந்தப் பெரிய வீட்டில், இத்தனை வசதிகளையும் எனக்குச் செய்து கொடுத்திருந்தாலும், இல்லாமையில் வளர்ந்த என் தரித்திர புத்திக்கு, அனுபவிக்க தோன்றவே மாட்டேன் என்கிறது!" என்று சிறு வருத்தத்துடன் கூறினாள்.

"ஷ்! என்ன வார்த்தையெல்லாம் பயன்படுத்துகிறாய்? தரித்திர புத்தியா? என்னை மணந்து, மனைவியாக இருக்கிறவள், இது



போலெல்லாம் பேசலாமா? பிள்ளைகளுக்குத் தெரிந்தால் வருத்தப்பட மாட்டார்களா? அதிலும் மஞ்சரி தாங்கவே மாட்டாளே! பழசையெல்லாம் ஏன் நினைக்கிறாய்? அடியோடு மற! இன்றைக்கு நீ இந்த வீட்டு மகாராணி, விருப்பப்பட்டபடி உண்டு மகிழ்ந்து சந்தோஷமாக இரு! அதுதான் எனக்கு வேண்டும்!" என்று அவளைத் தட்டிக் கொடுத்து கூந்தலை வருடியவாறு, நிமிர்ந்து ஹால் சுவரில் பெரிதாக மாட்டியிருந்த மனைவியின் படத்தை சுகவானம் பார்த்தார்.

ஆமாம் மனைவி என்றால் அவள்தான், அவருடைய ஆருயிர்க் காதலி, உள்ளக் கோயிலிலே, இன்னமும் அவளுக்குத்தான் இடம்!

ஆறாண்டு இனிய இல்லறம், அழகு அழகாக இரண்டு குழந்தைகள். இறைவனுக்கே பொறுக்கவில்லை போலும்! யாராலும் மறுக்க, தடுக்க முடியாத, சக்தியால் அவரிடமிருந்து, அவளைப் பிரித்துக் கொண்டு போய்விட்டான்.

அவளுடைய பெற்றோர்தான், வேதா நல்ல பெண், ஒன்றுவிட்ட தங்கை என்பதால், அதே ரத்தம், பிள்ளைகளைப் பெற்றவள் போலப் பார்த்துக் கொள்வாள் என்று பிடிவாதம் பிடி,ந்து, வேதவல்லியை அவருக்கு கட்டி வைத்தார்கள்.

அவளிடம் குறைப்பட எதுவும் இல்லை. அவரும் அன்பாகத்தான் இருந்தார். குழந்தை கூட இருக்கிறது! ஆனாலும்...

யோசித்தவாறே விலகிச் சென்ற கணவனையே பார்த்தபடி, வேதவல்லி அசையாமல் நின்றாள்.

நல்லவேளையாக வாயிலில் படி இறங்குமுன் நினைவு வந்து, இளைய மனைவிக்குக் கையாட்டிவிட்டுப் போய் காரில் ஏறினார் சுகவானம்.

கார் கிளம்பிப் போன ஓசை அடியோடு தேய்ந்தபின், தேவானை ஹாலுக்குள் எட்டிப் பார்த்தாள்.

"அம்மா, வாளை மீனை என்ன செய்யட்டும்? குழம்பு வைத்துவிடவா?" என்று கேட்டாள்.

கன்னென்று, வேதவல்லியின் பதில் வந்தது. "அதுதான் வாங்கி விட்டாயே! அப்புறமென்ன? அவர் சொன்னதைக் கேட்டாயில்லையா? கொஞ்சம் புட்டும் செய்து வை!" என்று வெடுவெடுத்தவாறே திரும்பியவள், சற்றே தாமதித்து "மெள்ளமாகச் செய்து நாள் முழுக்க வேலையை இழுத்து விடாதே, எனக்கு வெளியே போக வேண்டும்!" என்று அதட்டலாக மொழிந்துவிட்டு.

வேகமாகப் படியேறிச் சென்றாள்.

எஜமானியின் உத்திரவை நிறைவேற்ற, தேவானையும், சமையலறையை நோக்கி விரைந்தாள்.

காரில் தொழிற்சாலையை நோக்கி செல்லும்போது, சுகவானத்தின் இதயத்தில் கழிவிரக்கம் நிறைந்திருந்தது.

எல்லாப் பெண்களையும் போல, வேதாவின் மனதிலும் எத்தனையோ ஆசைகள் துளிர்த்து, கிளைவிட்டு, செழித்து வளர்ந்துதான் இருந்திருக்கும்! அந்தக் கனவுகளில் இரண்டாம் தாரமாக ஒருவனை மணப்பது, அவனுடைய இரு மக்களுக்குத் தாயாக இருந்து வளர்ப்பது எல்லாம் அடங்கியிருக்க வாய்ப்பே இல்லை.

ஆனாலும், அப்படி ஒரு பொறுப்பை ஏற்று, எவ்வளவு சிறப்பாக நடத்துகிறாள்.!

சொல்லப் போனால், மூத்த மகள் மஞ்சரி, சித்திக்காக உயிரையும் விடுவாள், அவ்வளவு பாசம்!

வேதவல்லியும் அப்படித்தான், செல்லம், கண்ணு என்பது தவிர, மஞ்சரியின் பெயர் கூட, அவளுக்கு நினைவிருக்கிறதோ, என்னவோ?

விதியின் செயலை யாரால் அறிய முடியும்? பின்னொரு காலத்தில் அவளே தாயாக இருந்து தன் மக்களை வளர்க்கப் போகிறாள் என்பதால்தான், சிறு வயதில் இருந்தே தேவகிக்குத் தன் ஒன்றுவிட்ட தங்கை வேதவல்லி மீது அவ்வளவு அன்பு தோன்றியிருக்குமோ?

சிறு வயதில், கோயில் விழாவுக்காகக் கிராமத்துக்குப் போன ஒரு சமயம், சாப்பிட்ட பிறகு, பழம் சாப்பிட சொல்லித் தாயார் கொடுத்த ஆப்பிளைத் தூக்கிப் போட்டுப் பிடித்தவாறே முன் கட்டுக்குச் சென்ற தேவகிக்கு அங்கே கண்ணில் ஏக்கத்துடன் நின்று பார்த்துக் கொண்டிருந்த வேதவல்லியின் முகம் மனதில் பதிந்தது.

சின்னவளின் ஏக்கம் நிறைந்த பார்வை பதிந்திருந்தது அவளது கையில் இருந்த ஆப்பிள் மீது!

"வேண்டுமா?" என்று தேவகி கேட்க, ஆவலில் விழிகள் விரிந்தபோதும், "இல்லை..." என்று கைகளை பின்னே கோத்துக் கொண்டு, எழும்பாத குரலில் பதிலளித்தாள் வேதவல்லி.

அவ்வளவு ஆசையையும் அடக்கிக்கொண்டு, அவள் மறுத்த விதம் தன்னை மிகவும் பாதித்துவிட்டதாக, தேவகி கணவரிடம்



பலமுறை கூறியிருக்கிறாள்.

"வாங்கித் தின்றால், யாரும் திட்டுவார்கள் என்ற பயம் போல, ஒட்டிக் கிடந்த வயிறும், எலும்பெடுத்த முகமும் வயிற்றுக்கே சரியாகக் கிடைப்பது இல்லை என்று பறைசாற்றின. பாட்டியும் அப்படித்தான் என்றார்களா? அவளை, அந்த மாதிரி விட்டுவிட்டுப் போகக் கூடாது என்று தோன்றிவிட்டது. என்ன சொல்லி கூட்டிப் போவது? தாத்தாவுடைய தம்பி வழிப் பேத்தி, உறவு என்பதால் சொந்தத்திலேயே ஒரு துணை போல இருக்கட்டும் என்று, கூடவே கூட்டிப் போய்விட்டோம். படிக்கவும் வைத்தோம். லீவுக்குப் போய் வருமுன் ஒரு சுற்று மெலிந்து போவாள், அக்கா, அக்கா என்று பாசமாக இருப்பாள்"

காலப்போக்கில், ஊரிலிருந்த பெரியவர்கள் மறைந்து, ஒரு கொள்ளை நோயில், வேதவல்லியுடைய குடும்பமே அழிந்தபோது, அவள் மட்டும் சென்னையில் தேவகி வீட்டில் இருந்ததால் உயிர் தப்பினாள்.

அதனாலோ என்னவோ, அந்த வீட்டுக்காக ஆன மட்டும் உழைத்தாள் எனலாம்.

கொஞ்சம் கஷ்டப்பட்டு மஞ்சரி பிறந்தபோது, வீட்டுக்கும் மருத்துவமனைக்கும் அலைந்து, மூட்டு வலியால் கஷ்டப்பட்ட பெரியன்னைக்கு கஷ்டமே இல்லாமல், பம்பரமாகச் சுழன்று, அத்தனை வேலைகளையும் பார்த்துக் கொண்டாள்.

எப்போதுமே வேதாவிடம் பிரியம் உள்ளவள் தேவகி. குழந்தையோடு கணவன் வீட்டுக்கு வரும்போது, வேதவல்லியையும் கூடவே கூட்டி வந்தாள்.

வேதாவுக்கு ஏற்றாற்போல ஒரு பையனைப் பார்க்கும்படி, சுகவனத்திடம், மாமனாரும் சொல்லியிருந்தார். செலவு போட்டுத் திருமணம் செய்து கொடுக்கும் எண்ணம் அவருக்கு.

சுகவனமும், சேல்ஸ் பிரிவில் ஒரு பையனைப் பார்த்து வைத்து, அவனைப் பற்றித் தெளிவாக விசாரித்துக் கொண்டுதான் இருந்தார். சம்பளம் போக, விற்பனைக்குக் கமிஷன் வரும் என்பதால், உழைத்தால் சீக்கிரம் உயர்வான் என்று எண்ணினார்.

ஆனால், அது பற்றிப் பேச எண்ணும் சமயத்தில்தான், தேவகிக்கு ரஞ்சனி உருவாகி, கருப்பையில் ஏதோ பிரச்சினை ஏற்பட்டு, படுக்கையிலேயே இருந்து... அப்படிக் கவனித்தும் கூட, குழந்தை

பிறந்ததும், தேவகி மறைந்துவிட, எதிர்காலத் திட்டங்கள் எல்லாமே தலைகீழாகிப் போயின.

இரண்டு குழந்தைகளையும் வேதவல்லி பாசத்தோடு பராமரித்த விதத்தைப் பார்த்துவிட்டு, மாமனாரும் மாமியாருமே, அவளையே மருமகனுக்கு மணமுடிக்க முனைந்தார்கள்.

அவர் தயங்கியபோதும், அக்கா மக்களோடு கூடவே இருப்பதே சொர்க்கம் என்றாளாம் வேதவல்லி.

மணமான பிறகும், தேவகி பெற்ற பிள்ளைகளுக்கு எந்தக் குறையும் இல்லாமல் கருத்தோடு கவனிப்பதில் அவள் ஒருபோதும் குறை வைக்கவில்லை.

அவரிடமும், அதிகம் எதிர்பார்க்கவில்லை. அவரது இதயத்தில் தேவகிக்கு அடுத்த இடமே அவளுக்கு என்றதையும், அவள் இயல்பாகவே ஏற்றுக் கொண்டாள்.

சுகவனத்துக்கு, வீட்டில் பிரச்சினையே எழவில்லை. பதினைந்து ஆண்டுகள், போன விதம் தெரியாமல், கடந்து போயின.

குடும்பத்தில் மட்டும் சின்னவள் ஒருத்தி, மஞ்சரி, ரஞ்சனியோடு ஒத்துப் போகும் விதமாக, அபரஞ்சி என்ற பெயரில் வந்து சேர்ந்தாள்.

சற்றுத் தாமதமாக பிறந்ததால் இருக்கலாம். தமக்கைகள் இருவருக்குமே, அவள் செல்லம்! அபிக்குட்டி! என்று அழைத்துக் கொஞ்சுவார்கள்.

அவளும் எப்போதும் மான் குட்டி போலத் துள்ளிக் குதித்துக் கொண்டு அலைவாள்.

பெற்றவளை விடவும், அவளுக்கும் அக்காமாரிடம்தான் ஆசை! அதிலும் மஞ்சுவை விட்டுப் பிரியவே மாட்டாள்! அவளும் அப்படித்தான்.

வேதவல்லி அதிலும் தலையிட்டதில்லை. அவரவருக்குத் தேவைப்பட்ட உணவு, வீட்டுப் பராமரிப்பு, தோட்டம் என்று அவளது கவனத்தில், யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல், எல்லோருக்கும் உதவியாக சத்தமின்றி, அவளது வாழ்வு ஓடிக் கொண்டிருந்தது.

ஆனால், இது அவளுக்குப் பிடித்தமானதுதானா?

இத்தனை ஆண்டுகள் கழித்து. இந்தக் கேள்வி உள்ளத்துள் எழவும், சுகவனம் சற்றுத் திகைத்துப் போனார்!

பட்டினி உட்பட, ஏழ்மையை அறிந்தவள் என்பதால், இதுவே அவளுக்கு, சொர்க்கமாகவும் தோன்றிவிட்டது போல!



மற்றபடி தனக்காக மட்டுமாக, ஒரு பதார்த்தம் செய்யச் சொல்லி உண்ணக் கூட, அவளுக்குத் தோன்றவில்லையே!

இருப்பதற்குள் வாழ்வதும், அதிலேயே திருப்தியடைவதும், அவளுக்கு இயல்பாக இருக்கலாம்.

எப்போதேனும், ஏதேனும் ஆசைகள் தோன்றினாலும், நமக்கெதற்கு என்று, அதை அடக்கிக் கொண்டிருப்பாளோ என்று தோன்றவும், சுகவனத்துக்கு ஒரு மாதிரி இருந்தது.

தனக்கு என்று, வேதவல்லி எதையுமே அவரிடம் கேட்டது கிடையாது.

தீபாவளி போன்ற பண்டிகை நாட்களுக்குக் கூட, மஞ்சரி பிடிவாதமாக வாங்கும் பட்டுதான். அதைக்கூட, அவள் விரும்பிக் கேட்டு வாங்கியது கிடையாது.

ஆனால், பிள்ளைகளுக்கு நல்லதாகத்தான் வாங்குவாள்.

மஞ்சரிக்கு பதினெட்டு வயதான பிறகு, திருமணமாக வேண்டிய பெண். அவ்வப்போது கையில் காசு மொத்தமாகச் சேருகிற நேரம், ஏதாவது நகைகள் வாங்க வேண்டும் என்று கேட்டிருக்கிறாள்.

அப்படி அவர் கொடுத்த பணத்திலும், பிள்ளைகள் மூவருக்குமாக வாங்குவதை மூன்று பேருக்குமாகவே வாங்கும்படி அவர் சொன்ன பிறகே, அப்படி வாங்கி வைப்பாள்.

அப்போதும், வேதவல்லி தனக்கென்று எதையும் விரும்பியது, கேட்டது கிடையாது.

தேவகி அந்த மாதிரி நிறைய ஆசைப்படுவாள். வேண்டும் என்று கணவரிடம் கேட்பாள். ஆனால், கேட்பதை உடனே வாங்கித்தர கூடாது என்று அவரிடமே வாக்கு வாங்கியிருந்தாள். வந்த விரைவிலேயே அந்த ஆசை போய்விட்டால், அப்புறம் அந்த பொருளை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று காரணமும் சொல்வாள்.

அதுதாண்டி நிலைத்த ஆசைகளை, அவர் கட்டாயமாக நிறைவேற்றுவார்.

ஆனால், ஆசையே இல்லாமல், இப்படி ஒரு தியாகியாக வேதவல்லி இருந்திருக்கிறாளே!

ஒருவேளை ஒன்றிரண்டு ஆசைகள் தோன்றியிருந்தாலும், தனக்கென்று எதையும் எண்ணாது, பிறருக்காகவே வாழும் தன் வழக்கப்படி, தோன்றும்போதே, வேதா அதைக் கிள்ளி

எறிந்திருப்பாள்!

தன்னலமே இல்லாத தியாகியாக ஒருத்தி கிடைத்தால், நல்லதாகப் போயிற்று என்று அவளைப் பற்றிய கவலையே இல்லாமல் வசதிகளை அனுபவித்துக் கொண்டு வாழ்வதுதான் மனித இயல்பு போலும். மற்றவர்கள் இருக்கட்டும், தொட்டுத்தாலி கட்டிய கணவர், அவருமே அப்படித்தானே இருந்துவிட்டார்!

சே! இப்படியெல்லாம் யோசிக்காமல், இத்தனை ஆண்டுகளைக் கழித்து விட்டாரே!

எதற்கும், வீட்டுக்குத் திரும்பிப் போன பிறகு, ஏதேனும் வேண்டுமா என்று, வேதாவிடம் கேட்டு, அவள் விரும்புவதைச் செய்து கொடுக்கவேண்டும் என்று முடிவெடுத்த பிறகே, நிம்மதியாகத் தொழிலைப் பற்றி, அவரால் யோசிக்கவே முடிந்தது!

வழக்கமாகத் தொழிற்சாலைக்குச் செல்லும்போது, தொழிலில் அன்று செய்ய வேண்டிய விஷயங்கள் பற்றி, அதே யோசனையாக இருப்பார். ஆனால், அன்று மனைவி பற்றிய சிந்தனை, முன்னதைப் பின்னே தள்ளிவிட்டது.

அதன் விளைவு, விரைவிலேயே தெரிந்து போனது.

ஒரு புது டீலிங் தொடர்பாக, சம்பந்தப்பட்ட நிறுவனம் பற்றி யோசித்து முடிவு சொல்வதாகச் சொல்லியிருந்தவர், பொது நிர்வாகி வந்து கேட்கும் போதுதான், அது பற்றிய ஆலோசனையைத் தொடங்கியிருந்தார்.

நிர்வாகி, தலைமைக் கணக்கரோடு சேர்ந்து, புது நிறுவனம் தந்திருந்த கணக்கு வழக்குகளை, அவசர அவசரமாக ஆராய்ந்தார். மேலோட்டமாக எல்லாம் சரியாகவே தோன்றியபோதும், நிறுவனம் தர வேண்டிய தொகைகளுக்கு இன்னொரு நம்பகமான உத்திரவாதம் அவருக்குத் தேவைப்பட்டது. முக்கியமாக அவர்கள் கணக்கு வைத்திருக்கும் பாங்க், அவர்களுக்காக எந்த அளவுக்கு காரண்டி கொடுக்கும் என்று தெரிய வேண்டியிருந்தது.

இது, அந்தப் புது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை ஆராய்வது ஆகும். பாங்க், அவர்கள் பக்கம் சாய்கிறவர்களாக இருந்தால், மிகவும் நயமாக, விஷயத்தைக் கையாள வேண்டும். கூடவே, அந்த நிறுவனம் பற்றிய இன்னும் பல விவரங்களையும் கட்டாயம் அறிந்தாக வேண்டும்.

யோசித்துவிட்டு, இதைத்தானே நேரில் போய்ப் பார்ப்பதாகச்



சொல்லி, இங்குள்ள அவசர வேலைகளை முடித்துக்கொண்டு, சுகவனம் அந்தப் பாங்கை நோக்கிக் கிளம்பிச் சென்றார்.

பொதுவாக, இந்த ஏரியாப்பக்கம் சுகவனம் அதிகம் சென்றது இல்லை. நகரின் பழைய பகுதி என்பதால், விரிவடைய இடமற்ற குறுகிய தெருக்கள்.

அவரது சற்றுப் பெரிதான கார் உள்ளே செல்வது, மிகவும் கடினமாக இருந்தது. சென்டிமீட்டர் சென்டிமீட்டராக வண்டி நகரவும் பொறுக்க மாட்டாமல் பக்கத்துத் தெரு எதிலாவது பார்க் செய்து, அவர் கூப்பிடும்போது வரச்சொல்லி டிரைவரிடம் பணித்துவிட்டுக் காரை விட்டு இறங்கி பாங்க்குக்கு, சுகவனம் நடந்தே சென்றார்.

பாங்கை அடைந்து உள்ளே அவர் சென்றபோது, கார் இன்னமும் இரண்டு கட்டிடங்கள் பின்தங்கியே இருப்பதைக் காணவும் அவருக்குச் சிரிப்பு வந்தது.

நல்ல முடிவு எடுத்தோம் என்று தன்னைத்தானே தட்டிக் கொடுத்துக் கொண்டு, பாங்க் உள்ளே சென்றார்.

நல்லவேளையாக, பாங்க் நிர்வாகி இலகுவாகப் பேசி பழகுகிறவராக இருந்தார், உபசாரங்களும் செய்தார்.

தன் தேவை பற்றி சுகவனம் காரண காரியத்தோடு எடுத்துச் சொல்லவும், தானே போய் விவரங்களை வாங்கி வருவதாகச் சொல்லி, வெளியே சென்றார்.

நடந்து வந்ததில் லேசாக காய்ந்திருந்த தொண்டைக்கு இதமாக இருக்கவே, உபசரிப்பின்போது தரப்பட்ட பழச்சாறை மெல்ல அருந்தியபடி, அந்தப் பாங்கைச் சுற்றிலும் சுகவனம் பார்வையை ஓடவிட்டார்.

பாங்கைப் பொறுத்தவரையில், வேலை விறுவிறுப்பாகவே நடந்து கொண்டு இருந்தது. எங்கேயும் வேலை தயங்கி நிற்கவோ, அலுவலர்கள் கடுமுகம் காட்டவோ இல்லை என்று காணவும் அவருக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இங்கே தொழில் செய்தால், தொழிலும் வளரும், தொழிலோடு சேர்ந்து பாங்க்கும் இணைந்து வளரும்.

இந்தப் பகுதியில் எதையேனும் தொடங்க வாய்ப்பிருக்கிறதா என்று பழச்சாறை அருந்தியவாறே யோசித்தவரின் கண்களில், லாக்கர் அறைக்கதவு மெதுவே திறக்கப்படுவது, தெளிவாகத் தெரிந்தது.

லாக்கர் அறையை விட்டு வெளியே வரவே, அந்தப் பெண்ணுக்கு மனமில்லை போலும்! உள்ளே பார்த்தபடியே, பின்புறமாக அடியெடுத்து வைத்து, கதவைச் சாத்திவிட்டு, மெல்லத் திரும்பினாள்.

கவனம் குவிந்துக் கொண்டிருந்த பானம், சட்டென அவருக்குப் புரையேறியது.

நல்லவேளையாக, அருந்திக் கொண்டிருந்ததில் கடைசிச் சில துளிகளே!

அவசரமாக உச்சந் தலையில் தட்டி, தொண்டையைச் செருமிச் சீர்படுத்திக் கொண்டு கூர்ந்து பார்த்தால் நிச்சயமாக அந்தப் பெண், அவருடைய மனைவி வேதவல்லியேதான்!

இவள் எங்கே இங்கே? அதுவும் பாங்க்கின் லாக்கர் அறையில்?

தலை சுற்றியது, அவருக்கு!



## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 2

சற்று நேரம் எதையும் யோசிக்க முடியாமல், சகவனத்தின் மூளை சற்று மரத்துப் போயிற்று.

அந்தக் கண்ணாடித் தடுப்பு அறைக்குள் அவரைக் கண்டுவிட்டு, வேதவல்லி அவருடன் பேச வந்தால், என்ன செய்வது? அவளோடு என்ன பேசுவது, அவளிடம் என்ன கேட்பது என்று, அவருக்குச் சுத்தமாக எதுவுமே தோன்றவில்லை.

அப்படி அவரைப் பார்த்து அவள் வந்துவிட்டால் என்று அவரது நெஞ்சு படபடக்கையிலேயே, இந்த மானேஜர் கேபினின் கண்ணாடித் தடுப்புகளின் வழியே வெளியே நன்றாகப் பார்க்க முடிந்தபோதும், வெளியே இருப்பவர்களுக்கு, உள்ளே இருப்போரின் தோற்றம், மசமசவென்று தெளிவற்றுத்தான் தெரியுமே தவிர, யாரென்று கண்டுபிடிக்க முடியாது. அந்த ரகக் கண்ணாடி இது என்பது அவருக்கு நினைவு வர, படபடப்பு சற்றே அடங்கியது.

ஆனால், ஏதோ குற்றம் புரிந்து அகப்பட்டுக் கொள்கிறவர் போல, அவளைப் பார்க்க, அவருக்கு ஏன் படபடக்க வேண்டும்? தப்பு செய்தவள், வேதவல்லிதானே?

ஆனால், அவள் செய்தது, நிச்சயமாகத் தப்புதானா?

மனைவி தனக்குத் தெரியாமல், தன்னிடம் அனுமதி பெறாமல்,



வீட்டுக்கு வெளியே காலடி எடுத்து வைக்கக் கூடாது என்று எண்ணுகிற அளவு பழமைவாதியோ, கொடுமைக்காரரோ அல்ல, அவர்.

ஆனால் வேதா வெளி வந்தது, அந்த பாங்க்கின் லாக்கர் அறைக்குள்ளிலிருந்து!

அவரது குடும்பத்தினருக்கு, இந்த பாங்கில் பணக் கணக்கே கிடையாது.

லாக்கரும் அவர் அறியக் கிடையாது.

சொந்தமாக லாக்கர் இல்லாதபடி, அவருடைய மனைவி அந்த லாக்கர் அறைக்குள்ளிலிருந்து வந்து, இப்படி கதவைச் சாத்த வாய்ப்பும் இல்லை.

இது வங்கிகளில் நடைமுறையில் இருக்கும் சத்தியமான உண்மை!

குடும்பம் தவிர வேறு ஒன்றும் அறியாத, குடும்பத்துக்காகவே உயிர் வாழும் சர்வ பரித்தியாகி என்று, மனைவியை முழுசாக நம்பியிருந்தாரே!

உண்மையில் வேதவல்லி அப்படி அல்லவோ? மற்றபடி இங்கே அவள் என்ன செய்கிறாள்?

மனம் அலைப்புற உணர்ச்சியற்று மனைவியை வெறித்திருந்த சகவனத்தின் கண்களில் உயிரோடு கூர்மையும் வந்தது.

நிச்சயமாக, வேதவல்லிக்கு, இது புதிய இடம் அல்ல! ஆண்டாண்டு காலமாகச் செய்து பழக்கம் போல, லாக்கர் அறையில் இருந்து வெளியே வந்தவள், உரிய அதிகாரியிடம், அவளது பெட்டக சாவியைக் கொடுத்து, நோட்டுப் புத்தகத்தில் கையெழுத்திடுவதை மானேஜர் அறையிலிருந்து, அவரால் தெளிவாகப் பார்க்க முடிந்தது!

ஆக, வேதவல்லியின் நடவடிக்கையில் ஏதோ மர்மம்... விரும்பத் தகாத மர்மம் இருக்கிறது!

கிளம்பும்போது, உணவுக்கு வீடுவருவீரா என்று வேதா கேட்டுத் தெளிவுபடுத்திக் கொண்ட சம்பவம், அவர் முன் படம்போல விரிந்தது.

வரமாட்டார் என்று நிச்சயப்படுத்திக் கொண்டிருக்கிறாள். அந்த இடைஞ்சல் இல்லை என்று உறுதி படுத்திக் கொண்டு, இங்கே கிளம்பி வந்திருக்கிறாள்!

அதுவும், இந்த வேலை சில பல ஆண்டுகளாகவே நடப்பது

என்பதும் நன்றாகவே தெரிகிறது!

அவரது தொழிலுக்கோ, குடும்பத்துக்கோ தொடர்பே இல்லாத இந்த இடத்தில் இருக்கும் பாங்க்! கடவுளே!

இல்லை, இல்லை. இதற்கு ஏதாவது விளக்கம் இருக்கும். வேதாவே சொல்லுவாள், சீக்கிரமாகவே, வேதவல்லி, அவரிடம் எதையும் மறைக்க மாட்டாள்!

சுகவனம் கேட்ட விவரத்துக்காகச் சென்றிருந்த பாங்க் நிர்வாகி வேறு, சுகவனத்தின் இதயத் துடிப்பை இன்னமும் அதிகமாக்கினார்!

திரும்பி வரும்போது வேதவல்லியைப் பார்த்ததும் நின்று, வாயெல்லாம் பல்லாக அவளிடம் இரண்டு வார்த்தை பேசி, அவளுக்கு விடை கொடுத்து, அனுப்பிவிட்டே வந்து சேர்ந்தார்.

அதற்கும் மேலாக "வீட்டுப் பெண்கள் என்றால் இப்படி இருக்க வேண்டும். பல ஆண்டுகளாக, இந்த வங்கிக் கிளையின் வாடிக்கையாளர். அவ்வப்போது ஒரு நகைப் பெட்டியோடு வருவார்கள். லாக்கரில் வைப்பார்களே தவிர, அதிலிருந்து எடுத்துப் போவதே கிடையாது. இப்போது இரண்டு ஆண்டுகளாகத்தான், லாக்கருக்குள் இருக்கும் நகை குட்டி போடாது. ஆனால் அதே பணத்தை டெப்பாசிட் செய்தால் வட்டி என்று ஒரு குட்டியும் கிடைக்கும் என்று எடுத்துச் சொன்னேன். இப்போது அந்த அம்மாவின் டெப்பாசிட் தொகையே சில லட்சங்கள் இருக்கின்றன. குடும்பத்துப் பெண்கள் இப்படி இருந்தால், கணவனுக்குக் கவலையே இருக்காது" என்று சிலாகிக்க வேறு செய்தார்!

கவலையே இப்போதுதான் என்று கலங்கியது, சுகவனத்தின் உள்ளம்.

பைசாக் கணக்கு வரை ஒப்புவிக்க வேண்டும் என்று, அவர் மனைவியைக் கேட்டது கிடையாது. ஆனால், பொதுவாக வேதா சொன்ன செலவுக் கணக்கின்படிப் பார்த்தால், அவர் கொடுத்த பணம் முழுதுமே செலவாகியிருக்க வேண்டும்!

ஆயிரமோ இரண்டாயிரமோ மிஞ்சினாலும், அடுத்த மாதத்துக்கு, இவ்வளவு போதும் என்று குறைத்தே வாங்கிக் கொள்வாள்!

அப்புறம், நகை வாங்கவும், சேமிப்பதற்கும் பணம் எங்கிருந்து வரும்? அதுவும் சில ஆண்டுகளாகத் தங்கம் விற்கும் இந்த விலையில்!

அப்போதும், மனைவியைச் சந்தேகிப்பது கூடாது என்று,



வேதவல்லிக்கு ஏதேனும் நியாயமான வழியில் பணம் வரக்கூடுமோ என்று, ஒவ்வொரு வழியாக சுகவனம் ரொம்பவும் யோசித்துப் பார்த்தார்.

பிறந்த வீடு என்று எந்த உறவுமே அவளுக்குக் கிடையாது. சொத்து பத்து எதையும் விட்டுப் போயிருப்பார்களோ என்று எண்ணிப் பார்க்கக்கூட வழியில்லாமல், வீடு முதல் அத்தனையையும் விற்று, வாங்கினவன் இரக்கத்தில், அங்கேயே ஓர் ஓரமாக ஒண்டியிருந்த குடும்பம் அது.

வேறு... இந்த வீட்டின் பழ மரங்களைக் குத்தகை என்று ஏதாவது... என்று யோசித்தாலும், அழகுக்கும், ஆசைக்குமாக மட்டிலுமே வைத்திருந்த மரங்கள்! அவை மூலமாகப் பெரிய தொகைகள் வர வாய்ப்பே கிடையாது!

வீட்டு அங்கத்தினரை, முழுமையாக நம்ப வேண்டும் என்ற கொள்கை உள்ளவர், சுகவனம். ஆனால் இப்போது அவருக்கு அதற்கு வழியில்லாது போயிற்று!

வீட்டுக்குள் நம்பிக்கை வேண்டும் என்றால், வீட்டுக்குள் ஏமாற்று வேலையும் இருக்கக் கூடாது அல்லவா?

தன்னைத் தானே நம்பாதது சந்தேகம்என்பார்கள். இப்போது முழு உரிமையோடு குடும்பத்தை நடத்திய மனைவியிடமே நம்பிக்கை குறையவும், சுகவனம் படாதபாடு பட்டுப் போனார்.

உள்ளத்தில் தோன்றிவிட்ட ஐயம் அவரைச் சும்மா இருக்கவும் விடவில்லை. வேதவல்லி செய்த எல்லாவற்றிலும் சந்தேகம்.

சந்தேகம் வலுக்கவும், வெளியே காட்டிக் கொள்ளாமல், சிலதை சரிபார்க்கத் தொடங்கினார்.

வீட்டுச் செலவு கணக்கு, வேதா சொன்ன அளவு இருக்க வாய்ப்பில்லை என்று புரிந்தது. பாதாம், முந்திரி, நெய், அசைவங்கள்.. எதுவும் அவள் சொன்ன அளவில் வீட்டில் பயன்படுத்தப்படவில்லை! மாதாமாதம் இதிலேயே எவ்வளவு சுருட்ட முடியும்?

எதிர்பாராத லாபம் வந்ததைப் பிள்ளைகளுக்கு நகை செய்யுமாறு வேதாவிடம் கொடுத்திருந்தார். சமீபத்தில்தான் வாங்கியது. வீட்டிலேயே 'ஸேஃபி'ல் வைத்திருந்ததை எடுத்துப் பார்த்தார்.

மூத்த மகள்களுக்குச் செய்திருந்தது, கொடுத்த பணத்துக்கு உரிய பெறுமானம் உள்ள நகைகள் இல்லை என்று, அவருக்கு தோன்றியது. பார்க்கப் பெரிதாக தோன்றியபோதும், கையில் தூக்கிப்

பார்த்தால், எடை மிகவும் குறைவு என்று நிச்சயமாகத் தெரிந்தது!

ஆனால், அதேசமயம் வேதா பெற்ற மகள், அவருடைய சின்ன மகளுக்குச் செய்தது, அளவில் சின்னதாக தோன்றியபோதும், தங்கத்தை உருட்டி வைத்திருந்தது.

இவளைப் போய் முழுதாக நம்பினாரே! ஒரேடியாகக் கணவன் கண்ணை மூடிவிட்டதாக எண்ணினாளா? மற்றபடி, இந்த எடை ஏமாற்று வேலை செய்யத் துணிவு வந்திராது.

அவரும்தான், அன்று செய்து வந்தபோது, அந்த நகைகளைத் தூக்கிப் பார்க்கவே இல்லையே! மூன்று மக்களும் அணிந்து காட்டியபோது, மனம் பூரித்ததோடு சரி!

ஆனால், ஒரு தொழிலைத் தொடங்கி வளர்த்தவர், இந்தப் பெரிய இடத்தை வாங்கி, வசதியாக வாழத் தக்கபடி வீட்டைக் கட்டியவர், கடைசிவரை ஒரு முட்டாளாகவே இருந்து விடுவார் என்று, வேதவல்லி எப்படி எண்ணினாள்?

இப்போது தனக்கென்று பணம், நகை ஆசை மட்டும்தானா? அல்லது, அதற்கு மேலும் போய் அன்பு, பாசம், எல்லாமே முழுவதுமே அற்றுப் போய்விட்டதா?

சகவனத்துக்குத் தெரிந்தாக வேண்டியிருந்தது. உடல் நலத்தில் சில சிறு பிரச்சினைகள் இருந்ததால், இந்த விவரம் விரைவிலேயே தெரிய வேண்டியிருந்தது.

அன்று வீட்டுக்குத் திரும்பி வரும்போதே, சகவனம் சற்று வாட்டமான முகத்தோற்றத்துடனே இருந்தார்.

பெரியவர்கள் இருவரும் அவரவரின் கல்லூரிப் பாடங்களில் மூழ்கி இருக்க, வழக்கம்போலச் சின்னவள் அபி, தந்தையைக் கண்டதும் அவரிடம் ஓடி வந்தாள்.

"அப்பா!" என்று கையைப் பற்றிக் கொண்டு குதித்தவள், அவரிடம் வழக்கமான எதிரொலியைக் காணாமல் "என்னப்பா?" என்று கவலையுடன் கேட்டாள்.

"ஒன்...றும் இல்லைடா..." என்றவாறே, அவர் சோர்வாக சோபாவில் சாய, வேதவல்லி விரைந்து வந்து, அக்கறையோடு நெற்றியைத் தொட்டுப் பார்த்தாள்.

"என்னங்க, தலை ஏதும் வலிக்கிறதா? சூடாக காஃபி கொண்டு வரட்டுமா?" என்று கரிசனத்தோடு கேட்டாள்.

'உச்'சுக் கொட்டினார் சகவனம் "மனசு சரியில்லாததற்குக் காஃபி



என்ன பரிகாரம் செய்யக் கூடும்" என்றார் அலுப்புடன்.

அந்தப் பெரிய ஹாலின் ஓரமாக கிடந்த நீண்ட மேஜையில் ஆளுக்கொரு பக்கமாக அமர்ந்து கல்லூரிப் பாடங்களைச் செய்து கொண்டிருந்த மூத்த இரு பெண்களும், திடுக்கிட்டுத் தந்தையைத் திரும்பிப் பார்த்தனர்.

இளையவள் புருவம் சுளித்து "ஏன்ப்பா, மனசு சரியில்லை?" என்று அங்கிருந்தே கேட்க, மூத்தவள், எழுந்து வந்து, தந்தையின் அருகில் அமர்ந்தாள்.

கையைப் பற்றி "என்னப்பா விஷயம்? எதனால் மனது சரியாக இல்லை? பிரச்சினை எதுவானாலும் சொல்லுங்கள்ப்பா. நாம் சேர்ந்து சரி பண்ணி விடலாம்" என்றாள் திடமான குரலில்.

"அதுதானே? வாய்விட்டுச் சொன்னால்தானே, ஏதாவது செய்ய முடியும்? சொல்லுங்கள்? என்ன பிரச்சினை?" என்று தானும் வினவினாள் வேதவல்லி.

சற்றுத் தயங்கி "சொல்லி விடுவேன். அப்புறம் யாரும் ரொம்ப அதிர்ந்து போகக் கூடாது! அந்த அளவுக்குத் தைரியமாக இருப்பீர்கள் என்றால்... அப்போதுதான் சொல்ல முடியும்" என்றார் சகவனம்.

"கொஞ்சமோ, நிறையவோ, நீங்கள் விஷயத்தைச் சொன்னால்தானேப்பா, அதிர்ச்சி எப்படிப்பட்டது என்று கணிக்க முடியும்?" என்றாள் இரண்டாவது மகள் ரஞ்சனி.

"அப்பா உங்களுக்கு உடம்புக்கு ஒன்றுமில்லையே?" என்று பயந்த குரலில் கேட்டாள் மூத்தவள் மஞ்சரி.

சின்னவள், அப்படியே அவர் மீது சாய்ந்து அணைத்து, அவளது ஆதரவைக் காட்டினாள்.

அந்த பிஞ்சு முகத்தை லேசாக வருடிவிட்டு, ஒரு பெருமூச்சுடன் சகவனம் சொன்னார் "இந்த ரூபாய் மதிப்பு சரிந்ததால், பெரும் பிரச்சினைம்மா. தொழிலில் பயங்கரச் சிக்கல். சுருக்கமாகச் சொல்வதானால், அடியோடு முழுகாமல் இருப்பதற்கு, நிறைய பணம் தேவை. பல லட்சக் கணக்கில்!" என்றார் தெளிவாக.

வினாடி கூடத் தாமதிக்காமல், வேதவல்லி, தாலியோடு கூட அணிந்திருக்கும் இன்னொரு சங்கிலியையும் கை வளையல்களையும் கழற்றிக் கணவர் அருகே வைத்தாள் "இன்னும் இரண்டு நெக்லஸ்களும், வளையல்களும், உங்கள் அலுவலகப் பக்கத்து பாங்கில் இருக்கின்றன. அவ்வளவையும் எடுத்துக் கொள்ளுங்கள்.

எல்லாமே நீங்கள் கொடுத்தவைதானே? உங்களுக்கு உதவாமல், வேறு எதற்கு?" என்றாள் குரலில் உணர்ச்சியோடு!

"ஐயோ!" என்று சட்டென எழுந்து, வேதவல்லியின் நகைகளை எடுத்து, அவள் கையிலேயே திணித்துவிட்டு, மஞ்சரி தந்தையிடம் திரும்பினாள்.

"அப்பா, என் நகைகள் எல்லாம் லாக்கரிலும் வீட்டிலுமாகச் சும்மாதானே கிடக்கின்றன? அத்தனையையும் எடுத்துக் கொள்ளுங்கள் அப்பா. சித்தியினதைக் கழற்ற வேண்டாம். இந்த நகைகள் முழுவதையும் அணிந்தால்தான், மங்களகரமாக, அவர்களது சேலைக்குப் பொருத்தமாகத் தெரிகிறது" என்றாள்.

"பேசுவதைப் பார்!" என்று மூத்த மகளின் கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள் வேதவல்லி "உன் ஜீன்சுக்கு நகை பொருத்தம் இல்லை என்றாலும், வளர்ந்துவிட்ட பெண்களின் நகைகளைத் தொடக்கூடாதுடா, செல்லம்! சீக்கிரமே, இன்னொரு வீட்டுக்குப் போக வேண்டியவள்! நம் நாட்டில், அதற்குப் பணமும் நகை கட்டாயமாகத் தேவைப்படும் பாஸ்போர்ட்டுகள்! அதனால்.." என்று பெரிதாகப் பேசத் தொடங்கினாள் சித்தன்னை.

ஆனால் பெரியவளின் பேச்சில் குறுக்கிட்டு "அப்படி யார் வீட்டுக்காவது போகிற காலம் வந்தால், அப்போது அதைப் பற்றிப் பார்க்கலாம். ஆனால் அப்படிப் பார்க்கத் தேவையே இராது! ஏனென்றால், நான் உங்களை விட்டுப் போகவே மாட்டேன்!" என்று புன்னகையோடு கூறி, சிறிய தாயின் கையைப் பற்றி முத்தமிட்டாள், மஞ்சரி.

"அட என் கண்மணி!" என்று அவளை அணைத்துக் கொண்டு, கணவனைப் பார்த்து பெருமையாகச் சிரித்தாள் வேதவல்லி "இந்தப் பைத்தியக்காரப் பெண் பேசுவதைப் பாருங்கள்! அசட்டு பிசட்டு என்று என்னமாய் உளறுகிறாள்! பார்த்துக் கொண்டே இரு. உன் திருமணம் 'ஜாம் ஜாம்' என்று சிறப்பாக நடந்து, நீ மாப்பிள்ளை வீட்டுக்குக் கிளம்புகிறபோது, எங்களைப் பற்றிய நினைவே உனக்கு இராது!" என்று உரிய வார்த்தைகளால், சிற்றன்னை பெண்ணைக் கொஞ்சினாள்.

"அதெல்லாம் மாட்டவே மாட்டேன்..." என்று மகள் சுகவனத்துக்கு நெஞ்சு கலங்கிப் போயிற்று. அவர்தான், இவளை முழுக்க நம்பினார் என்றால், மூத்த மகள், அவரை விட மோசமாக இருக்கிறாளே!



உள்ளத்திலே பகையும், உதட்டிலே நகையுமாக பழகும், இந்த வஞ்சகியை விட்டுப் பிரிய மாட்டேன் என்றல்லவா சொல்கிறாள்!

இருக்கிற நிலையில், பொறுப்பேற்றுப் பார்க்க வேண்டிய பெண் ஆனால், அவருக்கே, இப்போதுதானே ஞானோதயம் ஆகியிருக்கிறது! இவள் சிறு பெண், இருக்கட்டும். சீக்கிரமே மகளைத் தயார்ப்படுத்தி விட வேண்டும். அதுவரை கடவுள் போட்டு வைக்க வேண்டும்!

நெஞ்சப் படபடப்பை அடக்க முயற்சி செய்தவாறே, "என்னவோ, என் பிரச்சினைக்குத் தீர்வு சொல்வதாகக் கூறிவிட்டு, அந்த எண்ணமே இல்லாமல், இரண்டு பேரும், வேண்டாத வழியில் ஓடுகிறாக் போகிறீர்களே!" என்றார் சுகவனம் அலுப்பாக.

"ஆமாம், பெரும் பணம் வேண்டும் என்றீர்களே! அதற்குத்தான் என் நகைகள் முழுவதையும் எடுத்துக் கொள்ளுங்கள் என்றேனேப்பா" என்றாள் மஞ்சரி இலகுவாக.

பெயருக்குக் கூட மறுத்துப் பேசாமல், முகத்தில் கவலையைக் காட்டி, வேதவல்லி பேசாமல் பார்த்திருக்க, "அது சரி வராதும்மா. வேறு ஏதாவது, யாராவது சேர்த்து வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டார்.

மஞ்சரி ஆச்சரியமாய் நோக்க, ரஞ்சனியின் முகம் சிவந்தது "வேறென்ன? நான் வெளிநாடு போய் மாஸ்டர்ஸ் பண்ணுவதற்காகச் சேர்த்து வருகிறேனில்லையா? அந்தப் பணத்தைக் கேட்கிறார் அப்பா. முக்கி முக்கி, நான் ஒரு லட்ச ரூபாயைக் கூட எட்டவில்லையேப்பா! அதை வைத்து என்னப்பா செய்வீர்கள்?" என்று எரிச்சலோடு, மறுப்பையும் காட்டி வினவினாள்.

"ஐயோ, நான் அதைக் கேட்கவில்லை, கண்ணு! அதெல்லாம் யானைப் பசிக்குச் சோளப்பொரிதான். யாரிடமாவது, ஒரு பத்து லட்சம் ரூபாய், பணமாக இருந்தால், சமாளித்து விடலாம். பெரிதாக வாங்கி, வெளியே எல்லாம் அணிந்து சென்ற நகைகளை விற்றால், குடும்பத்துப் பெயர் கெட்டு விடும். ஆனால் என்ன செய்வது? வட்டிக்கு வாங்கி சமாளிக்க வேண்டியதுதான்! வட்டி! ஒரு வருஷத்திலேயே முதலின் அளவுக்கு வளர்ந்துவிடும்! கணக்குப் பார்த்தால்" என்று ஒரு நீண்ட பெருமூச்சு இழுத்துவிட்டார், தந்தை!

பேசியபடியே, பார்வையைச் சுழற்றியபோது, அப்பாவி போலப் பார்த்துக் கொண்டு இருந்த வேதவல்லியின் முகத்தைப் பார்த்ததுமே, சுகவனத்தின் நெஞ்சு கொதித்தது.

என்ன திண்ணக்கம்! வாய்ப்பு கொடுத்தும், விரலை அசைக்கக் கூட மனமில்லாமல், சிலை போலச் சும்மா உட்கார்ந்திருக்கிறாளே!

இவளைப் போய் என்னமாக நம்பிவிட்டார்! அல்லது... ஒருவேளை, பிறகு தனியாகச் சொல்வாளோ?

இரண்டு நாட்கள் விருந்தாளியாகக் கழித்தபின் அந்த நப்பாசையும் மடிந்து போயிற்று.

அது மட்டுமல்ல, மஞ்சரியிடம், வேதாவின் கொஞ்சலும் குலாவலும் கூட, மிக அதிகமாக ஆவதையும் அவரால் காண முடிந்தது.

காரணம் கண்டுபிடிப்பது பெரிய காரியம் அல்ல. பெண் தானாக அத்தையை வற்புறுத்தி, அவளது நகைகளைக் கொண்டு பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளும்படிச் செய்ய வேண்டும்.

அதற்கேற்றபடி, மஞ்சரியும் இருமுறை பேசவும், இப்போது அவளுக்கு ஒரு திருப்பந்தான் முக்கியம் என்று எண்ணிய சுகவனம், அது அவ்வளவு எளிதான காரியம் அல்ல என்று, உடனே உணர்ந்தார்.

முதலில், பல நாள் கஷ்டமான வேதவல்லியைக் காட்டிக் கொடுக்க, அந்த பாவத் தீர்வாகி ஒத்துக் கொள்ள வேண்டும். அன்றும், யாரோ என்று அவளிடம் பாராட்டிப் பேசினாலே தவிர, அந்த வாடிக்கை போய்விடக் கூடும் என்றால், வாய் திறந்திருக்க மாட்டாள். நீண்ட நாள் வாடிக்கை என்று பெருமை காட்டவே சொன்னது. அந்த வாடிக்கையை இழக்க அவள் விரும்ப மாட்டாள்.

அது மட்டுமல்ல, இந்த விஷயத்தை வெளி கொண்டு வர சுகவனத்துக்கே விருப்பமில்லை. முக்கியமான காரணம், அவருடைய மூன்றாவது மகள் அபிக்குட்டி!

பத்து ஆண்டுகளாக, அக்காக்களின் செல்லத்துக்கு உரியவளாக வளர்ந்த சிறுமி! அவர்களைப் பார்த்து பெற்றவளைச் சித்தி என்றே அழைப்பவள். இப்போது தாயின் பிழையால், மூத்த பெண்கள், அவளையும் வெறுத்துவிட்டால்?

இந்த விஷயத்தைச் சோதித்துப் பார்ப்பதற்கு பெற்ற தகப்பனாருக்கு விருப்பமில்லை! விளைவு எதிர்மறையாகிப் போனால், சின்னப் பெண்ணை போலவே, அவராலும் தாங்க முடியாது.

பெற்றவளின் சுயரூபம் வேறு என்று தெரிந்த பிறகு, பெரிய பெண்களின் அன்பும் அக்கறையும், அபிக்குட்டிக்கு மிகவும் தேவை



என்று, தந்தை அபிப்ராயப்பட்டார்.

அதிலும் மூத்த பெண்ணின் பாரம்தான் நினைக்கக் கூடியது! அடுத்தவள், இங்குள்ள படிப்பு முடிந்ததும் நிச்சயமாக வெளி நாட்டுக்கு பறந்து விடுவாள்! அதன்பிறகு இந்த மண்ணுக்குத் திரும்புவாள் என்றும் சொல்வதற்கில்லை. அதற்கேற்ற வாழ்வை, அவளுக்கு அமைத்துக் கொடுப்பதும், அவரது கடமையே.

பெற்ற பெண்களின் வாழ்வும், பாடுபட்டு வளர்த்த தொழிலும், பார்த்துக் கட்டிய வீடும் என்ன கதியாகும் என்ற சஞ்சலம் சுகவனத்தைத் தூங்க விடாமல் பாதித்து. உடல் நலத்தையும் கெடுத்தது.

மெல்லியதான கவலையோடு, வைத்தியரிடம் கலந்து ஆலோசித்தபோது, சில உணவுக் கட்டுப்பாடுகளோடு, மன அமைதியும் தேவை என்றார்.

முன்னது எளிதே, ஆனால் பொங்கு மாங்கடலாகத் தவித்த மனதிற்கு அமைதியை எப்படித் தருவது?

வெகுவாக சிந்தித்து சுகவனம் அதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடித்தார்.

பொறுப்பையும், உரிமையையும் தகுதியுள்ள ஒருவரிடம் கொடுத்துவிட்டால்?

அப்படித் தகுதியுள்ளவன் என்று ஒருவனை, அவர் கண்டுபிடித்து அழைத்து வந்தால், அவன் வந்த நேரம், விதம் எதுவுமே சரியில்லாது போயிற்று.



## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 3

அன்று மூத்த மகள் மஞ்சரியை அழைத்து, "உனக்குத் திருமணம் செய்யலாம் என்று இருக்கிறேன்" என்று சுகவனம் கூறியபோது, அவள் அதை லேசில் நம்புவதாக இல்லை.

"என்னப்பா, கிண்டல் செய்கிறீர்களா? அதற்கான வயதும் ஆகவில்லை! என் படிப்பும் முடியவில்லை., அதற்குள் திருமணமா? முட்டாளடிக்க, இன்று எப்ரல் முதல் தேதி கூட இல்லையே!" என்று வியப்பும் வேடிக்கையுமாக கேட்டாள் பெண்.

தந்தையின் முக்கிய நோக்கம், மனைவியின் மனதை அளப்பது

அல்லவா?

ஓரக்கண்ணால் வேதவல்லியைப் பார்த்தவாறே "விளையாட்டு இல்லையம்மா. நிஜமாகத்தான் சொல்லுகிறேன். அப்பாவுக்கும் வயதாகிறது..." என்றவரை குறுக்கிட்டு, "நான், வயது ஆகவில்லை என்றது, எனக்குப்பா!" என்று சிரித்தாள் மஞ்சரி. "நீங்கள் தாராளமாக இன்னும் இரண்டு கூடக் கட்டலாம்! ஆனால், ஒன்று! சித்தி அனுமதிக்க வேண்டும்! என்ன சித்தி, நீங்கள் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கண்களில் யோசனையோடு பேச்சைக் கவனித்துக் கொண்டு நின்ற சிறிய தாயை, வம்புக்கு இழுத்தாள்.

இந்த யோசனையின் பின்னே, இதில்வரக்கூடிய லாபம் பற்றிய கணக்கு ஓடுகிறது என்பது புரிந்ததால், சுகவனத்தின் மனம் கடுத்தது.

"ஷ் என்னம்மா நீ? நான் சீரியசாகச் சொன்னால், விளையாடுகிறாயே!" என்று வருத்தப்பட்டுப் பேசினார். "உன் வயதில், உன் அம்மாவுக்கு நீ பிறந்து விட்டாய். தெரியுமா? வேண்டுமானால், உன் சித்தியிடமே கேட்டுப்பார்!"

"கேட்பதென்னப்பா? அப்படி சீக்கிரமாக மணமுடித்ததன் விளைவுதான், அவ்வளவு சீக்கிரமாக, அம்மா மறைந்ததே, இல்லையாப்பா? ஏதோ எங்கள் அதிருஷ்டம், ஒரு நல்ல சித்தி கிடைத்தது. ஆனால், எல்லா ஆட்டோ ரிக்ஷாக்களிலும், பின்னால் எழுதியிருக்கிறதே, பெண்ணுக்கு திருமண வயது, இருபத்தொன்று என்று! நீங்கள் படித்தது இல்லையாப்பா? பாவம். எழுத்தைப் படிக்கத் தெரியாத குற்றம்!" என்று மேலும் நகைத்தாள், மஞ்சரி!

"ச்சு, என்னம்மா? சொல்லச் சொல்ல கேட்காமல், என்ன வேடிக்கைப் பேச்சு?" என்று அலுத்துக் கொண்டார் பெற்றவர்.

"ஐயோ, நிஜமாகத்தான் சொல்லுகிறீர்களா, அப்பா? அதுபோல நான் நினைக்கவே இல்லையே! கொஞ்ச நாட்களாகச் சற்று டல்லாக இருந்தது மாறி, இப்போதுதான் பழைய மாதிரிப் பேசுகிறீர்கள் என்று எண்ணினேனே! மெய்யாகவே, திருமணத்துக்கு என்னப்பா அவசரம்?" என்று கேள்வி கேட்டாள் பெண்.

"அது..." என்று தொடங்கியவருக்கு இயல்பான தோற்றத்தின் பின்னே, வேதவல்லியின் உடல் இறுகுவதை நன்று அறிய முடிந்தது.

இப்படி எத்தனையெத்தனை சின்னச் சின்ன விஷயங்களில் இவளை இனம் கண்டு கொண்டிருக்கலாம்! கடவுளாகப் பார்த்து கண் முன்னே காட்டுமுன்னே சந்தேகப்படவே தெரியாமல் இருந்து.



விறுவிறுப்பான விற்பனையில்
எழுத்தரசி
ரமணிசந்திரன்
எழுதிய
நாவல் லீடர்
தேனினும்
இனிய
தெவிட்டாத
நாவல்



விட்டாரே! ஆனால், எல்லோரும்தான் நடிக்கலாம்!

புன்னகை புரிந்து "வீட்டில் ஒரு விசேஷமே இல்லாமல் எத்தனை ஆண்டுகள் கடந்து விட்டன? வீடே இயந்திர கதிக்குப் போய்விட்ட மாதிரி இருக்கிறது! திருமணம் என்றால், எத்தனையோ சந்தோஷமான வேலைகள்! வீட்டைப் புதுப்பிப்பது, நகை துணிமணி வாங்குவது..."என்று அவர் குதூகலமாக அடுக்குகையில் மகள் குறுக்கிட்டாள்.

"போங்கப்பா! தொழிலில் பெரிய பிரச்சினை என்று சொல்லிப் பத்து நாட்கள் ஆகவில்லை, நகை, துணி என்று செலவுக் கணக்கு போடுகிறீர்களே!" என்று ஆட்சேபித்தாள்.

வேதாவின் கண்களில் ஒரு வேகமான கணக்கிடலைக் கண்டுவிட்ட சுகவனம், அவளும் யோசனையாக நோக்கவும், "எல்லாப் பிரச்சினையும், போயே போச்சே! ஒரு தொழில்துறை நண்பர், சமயத்தில் பெரிய ஆர்டர் கொடுக்கவே, கடன் கிடன் எதுவும் வாங்காமலே, சமாளித்து, லாபமும் கண்டாயிற்று. அதனால்தான், எனக்கு இந்த ஐடியா வந்ததே!" என்றார் தந்தை.

"என்ன பொல்லாத ஐடியா? அப்படி லாபம் மிஞ்சிப் போனால், தொழிலைப் பெரிதாக்குங்கள். அதை விட்டு..."

"தொழிலைப் பெரிதாக்குவதா? இருப்பதையே பார்ப்பது சிரமமாக இருக்கிறது என்று இராப் பகலாக வேலை செய்கிறார் உன் அப்பா" என்று முதல் முதலாக வாய்திறந்து பேசித் தடுத்தாள் வேதவல்லி.

அதாவது, அவருக்காகத்தான் தடுக்கிறாளாம்! திருமணம் என்றால், எவ்வளவோ சுருட்டலாம்! தொழிலில் முதலீடு செய்தால், அது முடியுமா? இருடி, இதைக் கொண்டே உனக்கு ஆப்பு வைக்கிறேன்!

உள்ளூரக் கருவியபடி, சுகவனம் சொன்னார் "சித்தி சொல்வது ரொம்பவும் சரிதான் கண்ணு! இதையே என்னால் சரியாகக் கவனிக்க முடியாததால்தான், உனக்குத்திருமணத்தைச் செய்து, உரிமையுள்ள ஒருவனிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, நிம்மதியாக இருக்கலாம் என்பது, என் திட்டம்! சமயம் பார்த்து, ஒரு நல்ல பையனும் கிடைத்திருக்கிறானா? அதனால், என்னளவில், முடிவு பண்ணிவிட்டேன்!"

அடக்க மாட்டாமல் வேதவல்லியின் முகத்தில் தெரிந்த அதிர்ச்சியே, அவரது திட்டம் சரியானது என்பதை, சுகவனத்துக்கு



உணர்த்தியது. வெளி ஆள் வந்து நோண்டத் தொடங்கினால், அவளுக்கு ஆபத்துதானே? அஞ்சி நடுங்கட்டும்!

ஆனால், உள் நடப்பு எதுவும் தெரியாத மகள், அதைக் கெடுத்தாள்.

"என்னப்பா நீங்கள், நான் படிக்க வேண்டும்! அப்பாவிடம் சொல்லுங்கள் சித்தி!" என்று வேட்டைக்காரனிடமே மான் உதவி கேட்டது.

வேதாவும் சந்தோஷமாக உதவிக்கு வந்தாள் "என்னங்க மஞ்சம்மா சொல்வது சரிதானே? இருபது வயது, இப்போதுதான் நிரம்பி இருக்கிறது. சின்னப்பிள்ளை! அதற்குள், என்ன திருமணம்? கொஞ்ச நாள் போகட்டுமே!" என்று மூத்தாள் மகளுக்காகப் பரிந்து வந்தாள்.

பரிவா, இது?

சுள்ளென்று பொங்கிய ஆத்திரத்தை அடக்க மாட்டாமல் "என் மகளுக்கு நல்லது செய்வாய் என்றுதான், உன்னை மணந்ததே, அவளுக்குக் கெடுதல் செய்வதற்காக அல்ல!" என்று கோபமாகப் பேசி, இரு பெண்களையும் அதிர வைத்துவிட்டார் அவர்!

சுகவனம் யாரிடமும் கடுமையாகப் பேசுகிறவர் அல்ல. அவருக்குப் பிடிக்காதது எதுவும் நடந்தாலும் என்னம்மா.... என்று அழுத்த குரலில் கூறுவதோடு முடிந்துவிடும்.

பொதுவாகப் பிள்ளைகளிடம் பேதம் காட்டாமல், வேதவல்லி நன்றாகப் பார்த்துக் கொள்வதாகத் திருப்தியோடு இருப்பதாகத்தான் நடந்து கொள்வார். எனவே, எதிர்பாராத விழுந்த இந்த வார்த்தைகள் மற்ற இருவருக்குமே, பெரும் திகைப்பை ஏற்படுத்தியது!

இந்த மாதிரி வெளிக்காட்ட எண்ணாத, சுகவனமுமே, சற்று பதறித்தான் போனார். ஆனால், சொன்ன வார்த்தையை மாற்ற முடியாதே!

முதலில் சமாளித்துக் கொண்டவள், வேதவல்லிதான்.

முதலில் சமாளித்துக் கொண்டு "ஐயோ, என்ன இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு "ஐயோ, என்ன வார்த்தை சொல்லுகிறார், பாரேன் மஞ்சு! அக்காவின் மக்களை என் மக்களாக எண்ணி வளர்த்ததற்கும், மகளாக நினைத்துப் பரிந்து பேசியதற்கும், என்ன பரிசு கொடுத்து விட்டீர்கள்? கடவுளே! நான் பட்ட பாட்டுக்கெல்லாம், என் ஜென்மத்துக்கும் இந்த வார்த்தை போதுமே!" என்று ஏங்கி அழத் தொடங்கினாள்.

அவளைத் தாயாகவே எண்ணி வளர்ந்திருந்த பெண்ணுக்கு, இந்தக் கதறலைத் தாங்க முடியவில்லை.

சட்டென முன்வந்து சிற்றன்னையை அணைத்துக் கொண்டு "என்னப்பா இது? நினைத்தது நடக்கவில்லை என்றால், நீங்கள் கூடவா, இப்படி நியாயமற்றுப் பேசுவீர்கள்? அம்மாவையே அறியாத எங்களுக்கு அம்மாவாகவே வாழ்ந்தவர்களை நோகடித்து விட்டீர்களே!"என்று தந்தையை சாடியவள், மற்றவளைச் சமாதானப்படுத்தினாள்.

நீங்கள் அழாதீர்கள் சித்தி! மகளின் திருமணம் என்று, அப்பா நிறையக் கற்பனை செய்து கொண்டு வந்திருப்பார். நீங்களும், அப்பாவிடம் எதையும் மறுத்துப் பேசியது இல்லையா? இப்போதும் ஒத்துப் பேசுவதையே உங்களிடம் எதிர்பார்த்து வந்தவருக்குப் பெரும் ஏமாற்றமாகி விட்டதில் யோசியாமல் விட்ட வார்த்தைகள், பெரிதாக எண்ணாமல் மறந்து விடுங்கள்!" என்று தேற்றினாள்.

தன் கண்டுபிடிப்பைக் காட்டிக் கொள்ளாமலே காரியம் சாதிக்க எண்ணி இருந்து'ம், தன்னை மீறி வாயை விட்டுவிட்ட சுகவனத்துக்கும், மகளின் பேச்சில், அவருக்குச் சாதகமாக ஒரு வழி கிடைத்தது.

உடனே அருகில் வந்து, வேதவல்லியின் கையைப் பற்றி தட்டிக் கொடுத்தார் "ஆமாம் வேதா, மஞ்சு சொன்னதுதான் சரி! நேற்றிலிருந்து, இதே கற்பனையில் இருந்தேனா? ஒருநாளும் என் பேச்சை மீறாத நீயும் மறுத்துப் பேசவும், அனல் அடிப்பது போல் கோபம் வந்து, ஏதோ உளறிவிட்டேன். பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் மன்னித்துவிடு!" என்று பணிந்தே பேசி, சமாதானம் செய்தார்.

ஏற்றுக் கொண்டவள் போல வேதா லேசாக முறுவலிக்கவும், உடனேயே பேச்சை மாற்றி "ஆனால், ரொம்ப அருமையான பையன், வேதா. இப்போது விட்டால், மறுபடியும் இவன் போலக் கிடைப்பது அரிது! பார்த்தால், நீயே சொல்லுவாய். உன் பெண்ணுக்கு என்றே பிறந்தவன், உடனே திருமணத்தை நடத்தி விடுங்கள் என்று. அந்த மாதிரி வரன்! என்ன? ஒரு நாள் வரச் சொல்லுவோமா? நீயும் பார்த்துவிட்டு, அபிப்பிராயம் சொல்லேன்!" என்று தாஜாப் பண்ண, வேறு வழியின்றி அவளும் தலையாட்டினாள்.

வெறுமனே பார்ப்பதிலேயே திருமணம் நடந்து விடவா



போகிறது? அதுதான் நினைத்தபடி வளைப்பதற்கு, மஞ்சரி இருக்கிறாளே!

ஆனால் சுகவனத்துக்குத் தன் தேர்வில் மிகுந்த நம்பிக்கை இருந்தது.

சசாங்கனின் தோற்றத்தில், பழகும் விதத்தில், தொழில் செய்யும் விதத்தில், எல்லா வகையிலும் அவனிடம் ஒரு மதிப்பு ஏறிக்கொண்டே போயிற்று. அவனை ஒரு தரம் பார்த்துவிட்டால், மகளும் தலையாட்டி விடுவாள் என்று உறுதியாக நம்பினார்.

அதுபோலத் தன் மகளின் அழகு, அறிவு, குணத்திலும், அவருக்கு ரொம்பவே பெருமை உண்டு.

இருவரையும் பற்றி எண்ணிப் பார்க்கப் பார்க்க, அந்த ராமர் சீதைக்குப் பிறகு, இவர்களைப் போலப் பொருத்தமான ஜோடி இருக்கவே முடியாது என்றே எண்ணினார்.

அதிலும், மகளுக்குத் திருமணம் செய்வது என்று அவர் முடிவெடுக்கவும், ஒரு நல்ல ஆர்டரோடு சசாங்கன் வரவும், அது கூடக் கடவுளின் செயலாகவே, அவருக்குத் தோன்றியது.

அவரது தேவை, அப்படி எண்ண வைத்ததோ, என்னவோ?

விழுப்புரத்தில் பெரிய அசெம்பிளிங் யூனிட் அவன் குடும்பத்துக்குச் சொந்தம். வழக்கமாக, ஆர்டர் கொடுப்பதற்கு. நிர்வாகத்தில் பெரிய நிலையில் உள்ள யாராவது வருவார்கள். இப்போது சென்னையிலும் ஒரு கிளையைத் தொடங்கும் யோசனை ஒன்று தோன்றவே, அது தொடர்பான வேலைகளோடு, இதையும் வாரிசான அவனே ஏற்று வந்திருந்தான்.

இது நல்லதற்கு அல்லாமல், வேறு என்ன, என்று சுகவனத்தின் மூளை கேட்டது.

சசாங்கனைப் பார்த்து பழகிய அளவில், தொழில், குடும்பம் இரண்டையுமே, அவனை நம்பி ஒப்படைக்கலாம் என்று, அவருக்கு நிச்சயமாயிற்று.

குறுகிய காலப் பழக்கம் என்பதால், உடனடியாகத் தன் எண்ணத்தை அவனிடம் வெளிப்படையாகச் சொல்ல, அவருக்குத் தயக்கமாக இருந்தது. ஆனால், தன் அழகிய மகளை ஒரு தரம் பார்த்துவிட்டால், அவனுக்குப் பிடித்துப் போகும் என்பதில் அவருக்கு ஐயமில்லை.

அப்படி பிடித்துப் போன பிறகு, அவனிடமோ, அவனுடைய

பெரியவர்களிடமே திருமணம் பற்றிப் பேசுவதும் எளிதாக இருக்கும். அப்படிப் பேசும்போது நோக்கமும் எளிதாகக் கைகூடும் என்று கருதி, அவனை வீட்டுக்கு வருமாறு அழைத்தார்.

சசாங்கன் புதிய தலைமுறையைச் சேர்ந்தவன். வேலையை வேலையோடு நிறுத்திக் கொள்ளாமல், சகஜமாகப் பழகுவது, தொழிலை வளர்க்கும் என்று படித்தவன்.

எனவே, வேலை முடிந்ததும் நேரே போய் ஹோட்டல் அறையில் அடைந்து கிடப்பதற்குப் பதிலாக சுகவனத்தோடு, அவரது வீடு வரை செல்வது, அவனுக்கு பிடித்தமாகவே இருந்தது.

அத்தோடு, அன்றைய நிலையில், தனிமை அவனுக்கு உகந்ததாகவும் இல்லை. தேவையற்ற உரையாடல்களைத் தவிர்ப்பதோடு புதிய மனிதர்களைப் பார்த்து பழகுவது, மிகக் குறைந்த பட்சமாகப் பார்த்தாலும், நல்ல அனுபவம்தானே?

அதிலும், சுகவனம் கௌரவமானவராகத்தான் தெரிகிறார்.!

ஆளுக்கொரு விதத்தில் சந்தோஷமாகவே சுகவனத்தின் குடிலை அடைந்தால், அங்கே ஒரு சிறு களேபரம் நிகழ்ந்து கொண்டு இருந்தது.

தந்தையின் காரை கண்டதும், இரண்டாவது மகள் ரஞ்சனி காரை நோக்கி ஓடி வந்தாள்.

அவரோடு கூட வந்த விருந்தாளியைச் சற்றும் கண்டு கொள்ளாமல், அப்பா உடனே இங்கே வாருங்கள், சீக்கிரம்?" என்று அவசரமாக அழைத்தாள்.

"என்னம்மா? இவர்... என் இரண்டாவது பெண், சசாங்கன்..." என்று தொடங்கியவதைத் தடுத்து "அதை, அப்புறம் பார்க்கலாம்ப்பா, அங்கே. உங்கள் அருமைப் பெண், கையைக் காலை உடைத்துக் கொள்ளாமல் தடுத்து இறங்கச் செய்யுங்கள். நான் சொன்னால், அவள் கேட்பதே இல்லை, சீக்கிரமாக வாங்கப்பா!" என்று தந்தையின் கையைப் பற்றி இழுத்தாள், அவள்.

மகள் இழுத்த வேகத்திலும் பேச்சிலுமாக "கையை... காலை..." என்று திகைத்தவர், "ஒரு நிமிஷம், சசாங்கன்... இதோ வந்து விடுகிறேன்" என்று அவனிடம் கூறிவிட்டு, பெண்ணோடு சென்றார் சுகவனம்.

வீட்டின் பக்கவாட்டில் இருந்தது, அந்தக் கொடுக்காபுளி மரம். அதில் பாதி உயரத்தில், ஒற்றைக் கையால் மரத்தைப் பிடித்துக்



கொண்டு நின்றாள் அவருடைய மூத்த மகள், மஞ்சரி.

மரத்தில் ஏறுவது, இறங்குவது எல்லாம் மூத்தவளும் சின்னவளும் அவ்வப்போது செய்வதுதான் என்றாலும், இன்று அவருக்கு கொஞ்சம் ஒரு மாதிரி இருந்தது.

வந்திருப்பவன் என்ன நினைப்பான்?

ஏற்றாற்போல் இரண்டாவது மகளும் கை நீட்டித் தமக்கையைக் காட்டி "பாருங்கப்பா, கொஞ்சமாவது, நிலைமை உணர்ந்து நடக்கிறாளா? ஏதோ பறவைக் குஞ்சு கீழே விழுந்து விட்டதாம். இவள் எடுத்து, அதன் கூட்டிலே விடப் போகிறாளாம்.! கீழே விழுந்து கை ஒடிந்தால் அந்தப் பறவையா வந்து வைத்தியம் பார்க்கப் போகிறது? எல்லாம் இந்த அபியால் வந்தது. எல்லாம் அந்தப் பழத்துக்காக! ரொம்ப நல்ல பிள்ளை மாதிரி மஞ்சுவைக் கூட்டி வந்து, அந்தக் குருவியைக் காட்டி, அதைக் கூட்டில் வைக்கச் சொல்லிவிட்டு, அப்புறமாகக் கையோடு கொஞ்சம் பழமும் பறித்து வரச் சொல்லுகிறது! அவளையும் கண்டித்து வையுங்கள்ப்பா!" என்று படபடத்தாள் ரஞ்சனி.

"அதெல்லாம் இல்லையப்பா!" என்று கிரீச்சிட்டாள், சின்னக் குட்டி "பாவம் அந்தக் குஞ்சு. அதை வைக்க எப்படியும் ஏறும்போது, கொஞ்சம் பழமும் பறிக்கலாம்தானே? அதுதான்ப்பா சொன்னேன்!" என்று விளக்கம் கொடுத்தாள் சின்னவள்.

"எல்லாம் பொய்! என்னமோ, இந்தப் பழங்களுக்காக மரத்தில் ஏறியதே இல்லை போலப் பேச்சைப் பாருங்கள்! அந்தக் கண்ணராவிப் பழம் வேண்டுமானால், ஒரு வேலையாளை ஏறிப் பறிக்கச் சொல்லுவதுதானே? அதற்கு, இவளே குரங்கு மாதிரி மரத்தின் மேல் ஏறி... பார்க்கிறவர்கள் இவளை என்னவென்று நினைப்பார்கள்? அந்தஸ்து காப்பாற்றத் தெரிய வேண்டாம்? முதலில் அந்த மரத்தை வெட்டச் சொல்லுங்கப்பா" என்று பொரிந்து கொட்டினாள், இரண்டாமவள்.

"அப்பா, வெட்டாதீங்கப்பா!" என்று கத்தினாள் சின்னவள்

"இன்றைக்கு இது. அப்புறம் மாங்காய்க் காலத்தில் மாமரம். இந்தக்கா சொல்லுக்கிறாள் என்று வீட்டுத் தோட்டதையே காலி பண்ணி விடாதீங்கப்பா. இதுக்கு மரத்தில் ஏறப் பயம். அந்தப் பொறாமையிலே, உளறுது" என்றாள் கடைசிப்பெண்.

"போடீ முட்டாள்! பழம் கிடைக்கிறது என்று அக்கா மேலே மேலே

போகிறாள், பார், விழுந்து காலை கையை உடைத்து கொண்டால், அப்போது தெரியும். உனக்கென்ன? பழம் கிடைத்தால் போதும்! அப்பா! அக்காவை இறங்கச் சொல்லுங்கள்!" என்று ரஞ்சனியின் குரலில் அண்ணாந்து பார்த்த சுகவனத்துக்கும் பயமாகத்தான் இருந்தது.

ஆனால், மகளை அதட்டவும் அஞ்சினார். மெல்லிய கிளை ஒன்றை வளைத்துப் பழத்தைப் பறித்துக் கொண்டிருந்தவள், அவரது குரலில் கவனம் கலைந்து விழுந்துவிட்டால்?

"மஞ்சக்கா ஒன்றும் விழ மாட்டாள்!" என்று சின்னவள் சொல்லும்போதே "அக்கா ஜாக்கிரதை" என்று பல இளங்குரல்களின் கோரஸ் கேட்க, அவர் கலக்கத்துடன் பார்க்கும்போதே, கையில் பற்றியிருந்த கிளை வளைந்து சரிய, பறித்த பழங்களைப் போட்டு வைத்த பையை விடாமல் சமாளிக்க முயன்ற மஞ்சரி, நிலை தடுமாறி சரியலானாள்.

"ஐயோ!" என்று சுகவனம், நெஞ்சை அழுத்தியபடி கண்களை இறுக மூடிக் கொண்டார். மகள் விழுவதைப் பார்க்கும் அதிர்ச்சியில் இதயம் நின்றுவிட்டால், அப்புறம் அவளுக்கு வேண்டிய சிகிச்சைக்கு யார் ஏற்பாடு செய்வது?

ஆனால், அவர் அஞ்சியதை போல 'தொப்'பென்று மரத்திலிருந்து மகள் விழும் சத்தம் கேட்கவில்லை.

அதற்கு முன்பே, பலமுறை மரத்தில் ஏறி இறங்கிய பழக்கத்தில் இடைப்பட்ட மரக்கிளைகளில் சரிந்தும் வழுக்கியும் விழுகிற வேகத்தை லாகவமாகக் குறைத்துவிட, அதற்கு வாய்ப்பில்லாத அடிமரப் பகுதிக்கு அவள் வந்தபோது, ஒரு நெடியவன், அவளுக்கு எளிதாகக் கை கொடுத்து இறக்கி விட்டிருந்தான்.

கண்ணைத் திறந்து பார்த்த சுகவனத்துக்கு, மகள் அடி படாமல் தப்பித்ததற்காக மகிழவா, அல்லது இந்த மாதிரி நிலையில் சசாங்கன் மகளைப் பார்க்க நேர்ந்ததே என்று கவலைப்படவா என்று ஒன்றும் புரியாமல் கையைப் பிசைந்தார்.

நியாயத்துக்கு, விழுந்து விடாமல், உதவியவனுக்கு, மஞ்சரி நன்றிதான் செலுத்த வேண்டும்.

ஆனால், ஏதோ பெரிய வேடிக்கையைக் கண்டுவிட்டவன் போல, இலகுவாக நின்று பார்த்த அந்தப் புதியவனிடம் அவளுக்கு எரிச்சல்தான் ஏற்பட்டது!



இன்னமும் தன் கரம் அவனது பிடியில் இருப்பதை உணர்ந்து, வெடுக்கென விடுவித்துக் கொண்டு, "தாங்க்ஸ்" என்று முகத்தைத் திருப்பிக் கொண்டு போனாள், அவள்.

செல்லும்போதே, அவளுள் ஏதோ குறம்பியது. இவனை... இந்த நெடியவனை, அவள் எங்கோ பார்த்திருக்கிறாளோ? பொருத்தமற்ற இடத்தில்?

"கையில் மரம் சிராய்த்திருக்கிறது! துடைத்து மருந்திட வேண்டும்" என்று அவன் சொன்னதைக் கேளாதவள் போல, விரைந்து சென்று மறைந்தாள் மஞ்சரி.

நிச்சயமாக, இந்தக் குரலைக் கேட்டிருக்கிறாள்! எங்கே?

முகத்தைச் சரியாகப் பார்த்திராவிட்டாலும், அவனது உயரமும் நிமிர்வும்... அந்தக் குரலும்... யார் இவன்?

மனம் அதிலேயே உழன்றபோதும், திரும்பி அவனைப் பார்த்துத் தெரிந்துகொள்ளும் விருப்பமின்றி, நேராக வீட்டினுள்ளே சென்றுவிட்டாள், மஞ்சரி.

அவள் ஓரளவு எதிர்பார்த்தது போலவே, சற்று நேரத்தில், அவளுடைய தந்தை, அவளைத் தேடி வந்தார் "என்னம்மா இது..." என்று சொல்லத் தொடங்கியதை "அப்பா, ப்ளீஸ்!" என்று தடுத்து நிறுத்தினாள் பெண்.

அவர் மறுபடியும் பேசுமுன் "நீங்கள் விருந்தாளியோடு
வரும்போது, மரத்தின் மேல் நின்று போஸ் கொடுத்தற்கு. சாரிப்பா.
ஆனால், நான் இன்றுதான் நம் மரத்தின் மேல் ஏறினேன் என்று
கிடையாதே! நல்ல விருந்தாளியாக, அந்த ஆள் ஹாலில்
உட்கார்ந்திருந்தால் பிரச்சினையே கிடையாதே! அதை விட்டு
அங்கே வந்து... ச்சு! போகட்டும். தேவானையிடம் அன்னாசி ஜூஸ்
அனுப்பச் சொன்னேனே. வந்ததா?" என்று கேட்டாள்.
"உன் சித்தி எங்கே?"
"மாங்காடு போவதாகச் சொன்னார்கள், என்னப்பா? அதுதான்
ஜூஸ் எல்லாம் அனுப்பி விட்டேனே! இன்னும் என்ன பிரச்சினை?"
என தந்தையின் முகத்தில் சஞ்சலத்தைப் பார்த்துவிட்டு கேட்டாள்
பெண்.
"அது... மஞ்சம்மா, அன்றைக்குச் சொன்னேனே... அந்த
பையன்..." என்று அவர் தயக்கத்துடன் கூறி முடிக்குமுன்னே, முகம்
சிவக்க "ஓஹோ! மாப்பிள்ளை மனிதர் பெண் பார்க்க

வந்திருக்கிறாரோ?" என்று ஆச்சரியப்பட்டாள் மகள்.

"அப்படி இல்லையம்மா" என்று தணிந்து பேசினார் தந்தை. "நீ பார்க்கத்தான், அவரை இங்கே அழைத்து வந்தேன். அவரிடம் திருமணம் பற்றி நான் பேசவே இல்லை. உனக்குப் பிடித்தால்தான் மேலே பேசுவது என்று, முதலில் அவரை வீட்டுக்கு அழைத்து வந்தேன்!" என்று சுகவனம் விளக்கவும், மகளின் கோபம், அப்படியே அடங்கிப் போயிற்று.

பாவம், தந்தை! வீட்டை, கண்களைக் காட்டிப் பெருமைப்படலாம் என்று அழைத்து வந்திருப்பார்! அவளானால், மரத்தின் மேலே நின்று... தடுமாறி விழ வேறு செய்து... பாவம், இந்த அப்பா! அசடு வழிய நேர்ந்திருக்கும்!

"ஸாரிப்பா!" என்று தந்தையிடம் வருத்தம் தெரிவித்தாள், மஞ்சரி.

"சரி. எழுந்து, முகத்தைக் கழுவிக்கொண்டு, வந்து எங்களோடு பேசிக் கொண்டிருக்கலாம் அல்லவா?"

"அப்பா... எனக்கென்னவோ..." என்று அவள் தயங்கியபோது, "நீ மட்டும் இல்லையம்மா. அபிக்குட்டி அங்கேதான் இருக்கிறாள். ரஞ்சியும் வருவதாகச் சொன்னாள். நீயும் வந்தால்... வாயேன், கண்ணு! வந்த விருந்தாளியோடு, சாதாரணமாக நாலு வார்த்தை பேசுவதில் என்ன இருக்கிறது? வாம்மா!" என்று கெஞ்சலாக அழைத்தார் பெற்றவர்.

இதுதான். இந்த அப்பாவிடம் எதையும் மறுக்க முடியாது! பெற்றவராக இருந்த அதிகாரம் பண்ணாமல் இப்படி தழைந்து போகும்போது, எப்படி எதிர்த்துப் பேச முடியும்?

திருமணம் வேறு விஷயம் என்றாலும்... அவனை எங்கே பார்த்திருப்பாள்?

எளிதாகத் தீரக் கூடிய விஷயம். அவனை நேரில் பார்த்துப் பேசினால், தானாக நினைவு வந்துவிட்டுப் போகிறது!

தந்தையிடம் சம்மதமாகப் புன்னகை செய்து, அவரை அனுப்பிவிட்டு, வேகமாக முகம் கழுவி, மரமேறியதால் நலுங்கியிருந்த டாப்பை மட்டும் மாற்றிக்கொண்டு, கீழே ஹாலுக்குச் சென்றாள்.

தேவானையை அழைத்து ஏதாவது சிற்றுண்டி கொண்டுவரச் சொல்லலாமா என்று யோசித்துவிட்டு, வேண்டாம் என்று விடுத்தாள்.



பெண் பார்க்கும் சடங்கின் பாவனை கூட வந்துவிடக்கூடாது!

ஹாலை நெருங்கும்போதே, எல்லோரும் உரக்கச் சிரிக்கும் சத்தம் கேட்க, மஞ்சரி தயங்கி நின்றாள்.

அபி சிரிப்பதில் ஆச்சரியமில்லை. ஆனால், அளந்து புன்னகை செய்யும் ரஞ்சி கூடச் சத்தமாகச் சிரிக்கிறாளே!





பேசிக் கொண்டிருந்தவன், விருந்தாளிதான்.

ஏற்கனவே கொண்டு வந்து வைக்கப்பட்டிருந்த பிஸ்கட் தட்டைப் பார்த்ததும் மஞ்சரிக்கு லேசாக எரிச்சல் வந்தது. ஆனால், சாதாரண விருந்தோம்பல், இதில் எரிச்சல் படக்காரணமும் இல்லை.

ஒரு கணம் தாமதித்து, மஞ்சரி கவனித்தபோது, தனது சிறு வயதில், அவர்கள் வீட்டு மரத்தில் வந்து சிக்கிக்கொண்ட காற்றாடியை, வீரமாக மரத்தின் மீது ஏறி, மிகுந்த கவனத்துடன் கிழியாமல் பத்திரமாக எடுத்துவிட்டு, அதன் பிறகு கால் தடுமாறி விழுந்து, கிழிந்து கந்தலாகிப் போன கற்றாடியோடு தரையை அடைந்த கதையை, நகைச்சுவை ததும்ப, அவன் விவரித்து கொண்டிருந்தான்.

மற்றவர்கள் பயந்து நிற்க, மகா வீரமாக மரத்தில் ஏறியதாகட்டும், காற்றாடி கிளைகளில் சிக்கிக் கிழந்து விடாமல் நூல் சிடுக்குகளைப் பிரித்து எடுத்ததாகட்டும், எல்லாம் ரொம்ப கவனத்துடன்தான் செய்தேன். மற்றவர்கள் எல்லோரும் செய்வதற்கு அஞ்சியதை, எவ்வளவு இலகுவாக நடத்திவிட்டோம் என்று கர்வம் வந்துவிட்டது! மிதப்புடன் அவர்களை ஒரு பார்வை பார்த்துவிட்டு, அடுத்த அடி எடுத்து வைத்தால், வைப்பதற்குக் காலின் கீழ் மரமுமில்லை. அடுத்த கையால் எட்டிப் பிடிப்பதற்கு மரத்தில் கிளையும் இல்லை!

"... அந்தரத்தில் மிதப்பது போன்ற உணர்வு, ஒரு சில வினாடிகள்தான்! ஏதோ ஏ ஏ என்று பலர் கத்தும் சத்தம் கேட்டுக் கண்ணைத் திறந்து பார்த்தால், நிஜமாகவே காற்றில்தான் மிதந்து கொண்டு இருந்தேன். உங்கள் அக்கா மாதிரி, மற்ற கிளைகளில் சரிந்து வழுக்கி, விழுகிற வேகத்தைக் குறைக்கும் சமயோசித புத்தியும் இல்லையா..."

ஆக, அவன் மரமேறிய புராணத்தின் தொடர்ச்சிதான் படிக்கப் படுகிறதாக்கும்!

"..... அவ்வளவு கஷ்டப்பட்டுப் பிடித்த கற்றாடி, கண்முன்னே கிளைகளில் மாட்டிக் கிழிவது மட்டும்தான், கண்ணுக்குத் தெரிந்தது. பிறகு 'நச்'சென்று ஒரு சத்தம். அப்புறம் நான் கண்ணை விழித்துப் பார்த்தது, மருத்துவமனையில்தான்; கால் எலும்பில் ஒரு முறிவு, பக்கவாட்டில் இடித்ததில் தலை தோளில், ஆழ் ஒரு கிழிசல். எல்லாம் சரியாகி வீடு வந்து சேரக் கிட்டத்தட்ட ஒருமாதம் ஆயிற்று! அத்தோடும் கதை முடியவில்லை, நன்றாகக் குணமான பிறகு, இனியொரு தரம் இப்படி மடத்தனமாக அடிபட்டு, மற்றவர்களைக் கலங்கச் செய்வாயா என்று, என் தாத்தா கைத்தடியால் என் முதுகில் வெளுத்துக் கட்டினார், பாருங்கள்! நினைத்தால் இன்னமும் வலிக்கிறது! ஸ்ஸ்..." என்று அவன் முதுகைத் தொட்டு வலிப்பது போல நடிக்கவும் எல்லோரும் மறுபடியும் நகைத்தனர்.

சிரிப்புக்கிடையே "ஆக, நீங்கள் ஒரு தரம் மரம் ஏறிய கதை ஒரு வழியாக முடிவுக்கு வர, ஒரு மாதத்துக்கும் மேலே ஆயிற்றாக்கும்?" என்று கேட்டாள் ரஞ்சனி.

இந்த உம்மணாமூஞ்சி, என்ன இலகுவாக ஒரு புதியவனிடம் பேசுகிறாள் என்று மஞ்சரி நினைக்கும்போதே, "ஊஹூம் அப்போதும் முடியவில்லை!" என்றுரைத்து, மறுபடியும் எல்லோரது கவனத்தையும் கவர்ந்தான் அவன்.

தன்னை மீறிய ஆவலுடன் மஞ்சரியும் பார்க்க "அடுத்த ஒரு மாதம், என் அப்பாவின் கட்டளைப்படி, மரமேறும் பயிற்சி எனக்கு அளிக்கப்பட்டது. உலகத்திலேயே, ஆள் வைத்து மரமேறி இறங்கப் படித்த பெருமை எனக்கு மட்டும்தான் உரியதாக இருக்கும் என்று நினைக்கிறேன்" என்று அவன் சொல்ல, மீண்டும் ஒரு சிரிப்பலை பரவியது.

மகள் இன்னும் வரவில்லையே என்றோ, அல்லது அவள் வந்து விட்டதை உணர்ந்தோ, சுகவனம் அறை வாயில் புறமாகத் திரும்புவதைக் கண்டு, மஞ்சரி அவசரமாக ஹாலுக்குள் காலடி எடுத்து வைத்தாள்.

சுகவனத்தின் முகம் மலருவதைக் கண்டதும் திரும்பிப் பார்த்த சசாங்கன், புன்னகையோடு எழுந்து "ஹாய்" சொன்னான்.

அதற்குள் ஓடி வந்து தங்கையின் கையைப் பற்றிக் கொண்டு



அபாரஞ்சி "அக்கா, இந்த அங்கிள் மரத்திலே இருந்து விழுந்து காலே முறிந்துவிட்டதாம். பிறகு டீச்சர் வைத்து மரம் ஏறப் படித்தாராம்!" என்று உற்சாகத்துடன் அறிவித்தாள்.

"போச்சுடா!" என்றான் சசாங்கன் "என் பெயரே, ஆசிரியர் வைத்து மரமேறப் படித்தவன் என்று ஆகிவிடும் போல இருக்கிறதே!" என்றான் சோகமாக. ஆனால் முதலில் இதைச் சொல்லுங்கள் கை சிராய்ப்புக்கு மருந்து போட்டீர்களா? சில்வரெக்ஸ் நல்லது" என்றான் பார்வை முழங்கைப் பக்கம் பாய.

சருமத்தில் ஏற்பட்ட சிறு குறுகுறுப்பை அடக்க முயன்றபடி, "இது மூலிகை வைத்தியம். குட்டியாய், சூரியகாந்திப் பூ மாதிரி நீளக் காம்புள்ள பூவுடன் இது மூலிகைச் செடி. காட்டுச் செடியாய் எல்லா இடங்களிலும் கிடக்கும். அதன் இலையைப் பறித்து சாறைத் தடவினால், தழும்பே இல்லாமல் குணமாகிவிடும். அதுதான் தடவியிருக்கிறேன்" என்று பதில் சொன்னாள் அவள்.

"ஓ! தழும்பு இல்லாமல் குணமாகி விடுமா? பரவாயில்லையே..." என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே அபி குறுக்கே புகுந்தாள்.

"நான் இவ்வளவு நேரம் யோசித்தேன், அங்கிள். நீங்கள் சொன்ன மாதிரி, அவ்வளவு நீளப் பேர் வைத்து, யாரையும் கூப்பிட முடியாது. என்னைக் கூட அபி என்று குட்டிப் பெயரால்தான் கூப்பிடுவார்கள். அக்கா 'மஞ்சு' அது 'ரஞ்சி'க்கா. அப்படி, உங்களை எப்படிக் கூப்பிடுவார்கள்" என்று அவளது வயதுக்கேற்ற வெகுளித்தனத்துடன் வினவ, சசாங்கன் அதற்குப் பதில் சொல்ல, பேச்சு வேறு திசையில் சென்றது.

இவனை எங்கே பார்த்தோம்? பார்த்தால் சட்டென்று மறக்கக் கூடிய முகமாகவும் இல்லையே என்று மஞ்சரியின் உள் மனது யோசித்துக் கொண்டே இருந்தபோதும், உரையாடல் எங்கேயும் தடைபட்டு நிற்கவில்லை என்பது, அவளுக்கு வியப்பாக இருந்தது.

வீட்டுத் தலைவரோடான தொழில் தொடர்பு காரணமாகவே அவரது வீடு வரை வந்தபோதும், அதைப் பற்றியே பேசி, மற்றவர்களை சசாங்கன் போரடிக்கவில்லை.

முக்கியமாக அபியுடன் ரொம்பக் கலகலப்பாகப் பேசியவன், ரஞ்சனியின் குறிக்கோளான வெளிநாட்டுப் படிப்பு பற்றிய கேள்விகளுக்கும் உரிய பதில்களையும், உதவிகரமான

குறிப்புகளுடனேயே தெளிவாகத் தெரிவித்தான்.

அதிலிருந்து அவன் சென்ற நாடுகள் பற்றிப் பேச்சு வளர்ந்தது.

எந்தப் பேச்சும் முடிவுக்கு வரும் அல்லவா?

சிலரைப் போல, அநாகரீகமாக கையைத் திருப்பி மணியைப் பார்த்துக்கொண்டே பேசவில்லை என்றாலும் "அப்போது... நான் கிளம்புகிறேன்" என்று அவன் எழுந்தபோது, சுமார் ஒரு மணி நேரம் கடந்து போயிருந்தது.

பரவயில்லையே. ஒரு சில இளைஞர்களைப் போலக் கள்ளப் பார்வை பார்க்காமல், அசடு வழியாமல், நேர்ப் பார்வையோடு இயல்பாக அவன் உரையாடிய விதம், நன்றாகத்தான் இருந்தது என்று மஞ்சரிக்குத் தோன்றியது.

"இருந்து இரவு சாப்பிட்டுவிட்டு போகலாமே!" என்று சுகவனம் அழைத்ததும், அதுதான் சாக்கு என்று உட்கார்ந்து விடாமல், "இல்லை சார் போனதே தெரியாமல், சுமார் ஒருமணிநேரம் ஆகியிருக்கிறது. இந்த நேரத்தில், எல்லோரும் என்னென்ன செய்வதாக இருந்தீர்களோ? விருந்தோம்பலுக்காக, எல்லோரும் இங்கேயே இருக்கும்படி நேர்ந்துவிட்டது, சாரி" என்று சிறு முறுவலுடன் சாரங்கன் வருத்தம் தெரிவித்த விதத்தில் "எதற்கு சாரி? அப்பாவோடு நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்நேரம்தான், இது. இப்போது நீங்களும் கூட இருந்தீர்கள், அவ்வளவுதான்" என்று மஞ்சரியே சமாதானம் சொன்னாள்.

"அது மட்டுமல்ல, நான் வெளிநாடு செல்லும்போது பயனாகக் கூடிய எத்தனையோ நல்ல நல்ல குறிப்புகள் சொன்னீர்களே! அதற்கு நன்றி சொல்ல வேண்டியவர்கள், நாங்கள்!" என்றாள் ரஞ்சனி.

"உங்களை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது அங்கிள். அடிக்கடி வர வேண்டும்" என்றாள் அபி.

சந்தோஷமாகச் சிரித்து "கட்டாயமாக!" என்றான் சாரங்கன். "எனக்கும் உங்கள் குடும்பத்தை மிகவும் பிடித்திருக்கிறது" என்று சிறுமியின் கன்னம் தட்டிச் சொன்னவன், நிமிர்ந்து சுகவனத்தைப் பார்த்து "மெய்யாகத்தான் சார்! ஹோட்டலில், தனிமையில்ரொம்பவும் போரடித்துப் போயிருப்பேன். அதிலிருந்து என்னைக் காப்பாற்றினீர்கள். அதுவும்... ஓர் உண்மையைச் சொன்னால், தப்பாக நினைக்க மாட்டீர்களே சார்? உங்கள் மகள்களை அருமையாக வளர்த்திருக்கிறீர்கள்! உடை, பேச்சு, பாவனை எதிலுமே, செக்கே



பிக்கேத்தனம் இல்லாமல், ஒரு சிறந்த கண்ணியம் தெரிகிறது. கூட அமர்ந்து பேசுவதே சுகமாக இருக்கிறது" என்றவன், மஞ்சரி வேகமாக ஏதோ சொல்ல வாய் திறக்குமுன் தானே தொடர்ந்து பேசினான். "இதை வெறும் பாராட்டாகச் சொல்லவில்லை சார்! யாருடைய பாராட்டுக்கு பதிலாகவும் சொல்லவில்லை. என் மனதில் தோன்றியதை, அப்படியே சொன்னேன். உங்கள் மனைவியைப் பார்த்திருந்தால், அவர்களிடமும் இதையே தெரிவித்திருப்பேன். ஆடை, அணிமணிகள் எல்லாம் அருமையாகத் தேர்வு செய்திருக்கிறார்கள், பிரமாதம்!" என்றான்.

சுகவனம் லேசாக முறுவலிக்க "ஐய்யோ, தப்பு!" என்றாள் அபாரஞ்சி, "எங்கள் சித்தி சேலைதான் கட்டும். எங்கள் டிரஸ் எல்லாம், மஞ்சக்காதான் வாங்குவாள். இது கூட, அக்கா வாங்கினதுதான்" என்று தன் உடையைக் காட்டி பெருமையடித்தாள்.

சாரங்கனின் கண்கள் லேசாக இடுங்கவும், பெண்கள் மூவருக்குமே வேதவல்லி சித்தி என்று அவன் நினைப்பது மற்ற எல்லோருக்குமே புரிந்தது. ஆனால் அபியின் முன்னிலையிலேயே அவளைப் பிரித்துப் பேச மனமின்றி, பெரியவர்கள் மூவருமே அவனைத் திருத்துவதைத் தவிர்த்தனர்.

"அக்காவுக்கு டிரஸ் சென்ஸ் அதிகம். அதனால் நாங்கள் யாரும் அதில் தலையிடுவதே இல்லை!" என்று ரஞ்சனி, ஆடைகள் பற்றிய பேச்சைத் தொடர்ந்தாள்.

"ஆனால், நாங்கள் வாங்குவதை சித்தியும் எப்போதும் ஒத்துக் கொள்வார்கள். வேண்டாம் என்று சொல்லவே மாட்டார்கள்" என்று சிற்றன்னையைத் தாங்கிப் பேசினாள் மஞ்சரி.

"மறுக்கும்படியாக நீங்கள் வாங்கவில்லையோ என்னவோ?" என்று அவன் மறைமுகமாகப் பாராட்ட, அவள் முகத்தில் தன்னை மீறிப் புன்னகை மலர்ந்தது.

"பார்த்துத்தேர்வு செய்யத்தான், இப்போது நிறைய இடங்கள் இருக்கின்றனவே! வெளியே இருக்கும் துணி கடைகள் போதாது என்று ஏகப்பட்ட மால்கள்! அவைகளிலும் பல ரெடிமேடு ஆடைக் கடைகள்! கொஞ்சம் தேடினால், நம் தேவைக்கு எப்படியும் கிடைக்கும்" என்றாள் மஞ்சரி.

"ஓ! அப்போது, அபியின் உடையை ஃபீனிக்ஸ் மாலில் வாங்கியிருப்பீர்கள்! சரியாகச் சொன்னேன்தானே? அங்கே ஒரு

கடையில், இதேபோலப் பார்த்தேன். பிடித்தது என்று கேட்டால், பெரியவர்களுக்கு இல்லை என்று விட்டார்கள். சார், விட்டால் இப்படி ஏதாவது பேச்சு நீண்டு கொண்டே போகும் என்று தோன்றுகிறது! நான் இன்றைய வேலையைப் பற்றித் தலைமை நிறுவனத்துக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். ஓகே, பை பீப்புள்! ஒரு மாலை நேரம் இதமான சந்தோஷத்துடன் கழிந்தது. எல்லோருக்கும் நன்றி! வருகிறேன்" என்று அதற்குமேல் நில்லாமல், கிளம்பிப் போய்விட்டான்.

எல்லோரும் ஆளுக்கொரு பக்கம் பைபை சொன்னதில், மஞ்சரியின் மௌனம், யாராலும் கவனிக்கப்படாமலே போயிற்று.

அதேபோலச் சத்தமின்றியே தன் அறைக்குள் சென்று, படுக்கையில் தொப்பென்று அமர்ந்தாள் அவள்.

இதைவிடப் பெரிய கல்லை, அவளது உச்சந்தலையிலேயே வேறு யாராவது போட முடியாது!

அந்த சசாங்கனை அவள் எங்கே பார்த்தாள் என்று நினைவு வந்துவிட்டது!

திரைப்படம் பார்ப்பது போல, மிகவும் தெளிவாக!

அவனைப் பார்த்தது, அவனே சொன்ன அதே பீனிக்ஸ் மாலில்தான்.

கடையும், அவன் சொன்னதேதான்.

ஆனால், அப்போது அவள், அங்கே எதையும் வாங்கியிருக்கவில்லை. வாங்குவதற்காகப் போயிருந்தாள், கூட இரண்டு தோழிகள் வேறு.

நடுத்தரமான கடை அது. அபியின் இடைப்பட்ட வயதுக்கு ஏற்ற உடைகள், அங்கேதான் நிறையக் கிடைக்கும்.

சிநேகிதிகளோடு வெளியே போனால்கூடத் திரும்பி வரும்போது, தனக்கு ஏதாவது இருக்கிறதா என்று அபி ஆசையாகத் தேடுவாள். அவள் முகத்தில் ஏமாற்றத்தைக் காணப் பிடிக்காத மஞ்சரியும், எப்போதுமே அவளுக்கு எதையாவது வாங்காமல் வீடு திரும்புவது இல்லை.

அன்றும் அப்படித்தான் அந்தக் கடைக்குச் சென்றிருந்தாள்.

ஆனால், கடை வாயிலில் நின்று பார்த்தால், அத்தனை சேல்ஸ் பெண்களும் ஒரே இடத்திலேயே நின்றார்கள்... ஊகும் நிற்கவில்லை. "அங்கே நின்று "அதை எடு. இதைக்காட்டு" என்று ஏவிக்



கொண்டிருந்த ஒருவன், அந்த சசாங்கன்தான், அவனது சொல்லுக்குப் பம்பரமாகச் சுழன்று கொண்டு இருந்தார்கள்.

"முதலில் இதையெல்லாம் பில் போடுங்கள்" என்று அவன் காட்டிய ஆடைகளே நிறைய இருந்தன.

அதற்கு மேல் "அந்த பொம்மை அணிந்திருப்பது போல, அதே அளவில்... இதோ, இந்தப் பக்கம் மாட்டி வைத்திருப்பது கூட..." என்று அவன் காட்டிய உடைகள், அப்படி ஒன்றும் கௌரவமாக அணியக்கூடியவை அல்ல.

ஏன்? இதை அணிந்திருக்கும்போது குனிந்தால் அசிங்கமாகத் தெரியாதா என்று நினைத்தது கூட அவளுக்கு நினைவிருக்கிறதே! ஏன்? இவனைப் போல உயரத்தில் நின்று பார்க்கும்போதும் அப்படித்தான்!

இப்படிக் கண்டதை எல்லாம் வாங்கிக் குவிக்கிறவன் இருக்கும்போது, ஓர் உடை வாங்கப் பத்து விதமாகப் யோசிக்கிற அவர்கள் பக்கம், விற்பனை ஆட்கள் யாரும் எட்டிக் கூடப் பார்க்க மாட்டார்கள். அதனால், மாலில் வேறு பக்கம் சுற்றிவிட்டு, மறுபடியும் வரலாம் என்று போனார்கள்.

அன்று அவனது முழுமையான முகத்தோற்றத்தை அவள் பார்க்கவில்லை.

கவுண்டரை நோக்கி நின்ற அவனது பக்கவாட்டுத் தோற்றம்தான்... அதுகூடச் சற்றே திரும்பியிருந்த முகத்தின் கன்னம் காதோடு, அடர் சிகையும், உயரமும்தான்.

அதுவுமே, சற்று சிறந்த படைப்பாக மனதில் பதியக் கூடியதே! அதிலும் வீணா "நான் கிட்டே போய் அவனை நன்றாகப் பார்த்துவிட்டு வருகிறேன்!" என்று வேறு வழிந்தாளே!

பார்கவி வேறு சொன்னாள் "இந்த மாதிரிப் பணக் கணக்கே பாராமல் ஆடை அணிமணிகள் வாங்கித் தருகின்ற கணவன் கிடைத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!" என்று பெருமூச்சு விட்டாள்.

"போங்கப்பா! அவன் ஆர்டர் பண்ணிய துணிகளைப் பார்த்தால், ஒழுங்கான ஆளாகவே தெரியவில்லை. அவனைப் பற்றிப் பேசி, நேரத்தை வீணாக்குகிறீர்களே!" என்று மஞ்சரி அதட்டிய பிறகுதானே அவனைப் பற்றிய பேச்சே நின்றது!

இப்போது, அவனே அவள் வீட்டுக்கு வந்து, மகா உத்தமன் போல,

கண்ணியம் பற்றிப் பேசுவதா? அந்த உடைகளை வாங்கும்போது, அவனது இந்தக் கண்ணியம் எங்கே போயிருந்தது?

அப்படியானால், அவனது பேச்சு இச்சகப் பேச்சு! ஏதோ ஆதாயம் காரணமாக, தானும் உத்தமனே என்று காட்டும் விதமாக, இந்த மாதிரிப் பேசியிருக்கிறான்!

உலகம் சின்ன உருண்டைதான். அவனது பேச்சினாலேயே ஒருத்தி, அவனைக் கண்டுகொள்வாள் என்று அவன் எதிர்பார்க்கவில்லை!

குடும்பம் முழுதும், அவனோடு எப்படி சகஜமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள் என்று நினைக்கையில் மஞ்சரிக்கு அவமானமாக இருந்தது.

அப்பாவோ, அதற்கு மேலும் போய்விட்டார்! அதற்காகத்தான் இப்படிக் கலகலப்பாகப் பேசினானா? ஆனால் திருமணம் பற்றி அவனிடம் பேசவே இல்லை என்று தந்தை சொன்னாரே!

எப்படியோ? இதற்குமேல் இவனோடு கல்யாணமாவது, மண்ணாங்கட்டியாவது?

இரண்டே வாரங்களுக்கு முன், யாரோ ஒரு பெண்ணுக்கு டஜன் கணக்கில் ஆடைகளை வாங்கிக் குவித்தவன், அதுவும் ஒரு மாதிரி மாடல் உடைகளையும் கூடத் தயக்கமே இல்லாமல் வாங்கிய ஒருவன், அவளுக்குக் கணவனா?

நிச்சயமாக நடக்காது!

மாங்காடு வரை போய் வந்த வேதவல்லியும், இன்னொரு விதமாக, அதையே சொன்னாள்.

அவள் மாங்காட்டு அம்மன் கோயில் வரை சென்றதே, அவளுடைய முதல் கண்மணி மஞ்சுவுக்காகத்தானாம்.

முன்தினம், மகளது மணம் பற்றிப் பேசும்போது சுகவனம் பேசியது, அவளை மிகவும் வருத்திவிட்டதாம்.

இந்தப் பையனோடு கல்யாணப் பேச்சை எடுக்குமுன்னரே, வீட்டில் இப்படி குடும்பத்தில் பூகம்பம் ஏற்படுகிறதே, இது பெண்ணுக்கு நல்லதுதானா என்று, விரதம் இருந்து, அருள்வாக்கு கேட்கப்போனாளாம். "போய் கேட்ட பிறகோ, ஏன்தான் போனோமோ என்று ஆகிவிட்டது செல்லம்" என்றாள் வருத்தத்துடன்.

"இனிமேல் போகாதீர்கள், சித்தி. சும்மாவே, அப்பாவுக்கு இதெல்லாம் பிடிக்காது. விரதம் வேறா? இப்போது எதையேனும்



சாப்பிட்டீர்களா? இல்லையா? நான் போய் எதையாவது செய்து எடுத்து வரட்டுமா?" என்று எழுந்தாள் பெண்.

கண்களில் எரிச்சல் போல ஒரு பாவம் தோன்றி, உடனே மறைய "அங்கேயே சாப்பாடு போட்டார்கள். அவர் சொன்ன அருள்வாக்குதான், என் பசியையே போக்கிச் சாப்பிட விடாமல் செய்துவிட்டது!" என்று மறுபடியும் பேச்சை, மஞ்சரியின் திருமணத்துக்குக் கொண்டு வந்தாள் வேதா.

அப்படி என்னதான் சொன்னார் என்ற அமுத வார்த்தைகளைப் பெண்ணின் வாய் மூலமாகக் கேட்க விரும்பினால், அது புரியாமல் அவள் வேறே ஏதோ உப்புப் பெறாத விஷயம் பற்றிப் பேசி, வளவளத்தாள்!

தன் எதிர்காலம் பற்றிய கவலையே இல்லாமல், இப்படி ஒரு மடச்சியா?

"அவசியமே இல்லாமல் போயிருக்கிறீர்கள், சித்தி! எனக்கு மேல் படிப்பு படிக்க வேண்டும். அதற்கு, இன்னும் இரண்டு ஆண்டுகள் ஆகும்! இப்போது மேலே என்ன எடுக்கலாம் என்று அதுதான் என் யோசனை எல்லாம். உங்களுக்கு என்ன தோன்றுகிறது, சித்தி? இன்டீரியர் டெக்கரேஷன் படிக்கலாமா? அல்லது...

"போடி பைத்தியம். இரண்டு வருஷம் உன் அப்பா விட்டு வைத்தால்தானே? அவர்தான் மாப்பிள்ளையே பார்த்துவிட்டார் போல இருக்கிறதே! என்னவோ, எல்லா விதத்திலும் பொருத்தம் என்றாரே! அப்படியானால், அவன் அழகாகவும் இருப்பான். அவனைக் காட்டியே உன்னை மயக்கி விடுவார்"

ஓ! அதற்காகத்தான், அப்பா, அவனை வீட்டுக்குக் கூட்டி வந்தாரோ?

ஆனால், என்னதான் அவனை விடவும் பேரழகன் வந்தாலும், குணம் கெட்டவனை அவள் மணப்பாளா?

நினைத்ததை சிற்றன்னையிடம் அப்படியே சொன்னாள். "சித்தி, அந்த சசாங்கன் உலகப் பேரழகனாகவே இருந்தாலும், வெறும் தோற்றத்தில் நான் மயங்கிவிட மாட்டேன்! இது நிச்சயம்!" என்றாள் சூளுரைப்பது போல!

சரியாகச் சொன்னாய் என்று தட்டிக் கொடுத்த சிற்றன்னை, உடனே புருவம் சுருக்கி யோசித்தாள் "என்ன பெயர் சொன்னாய்மா? சசாங்கனா? சொந்த ஊர் விழுப்புரமா? ஐய்யோ! அவன் ரொம்பப்

பொல்லாதவன் ஆயிற்றே! திருமணப் பத்திரிகையெல்லாம் கொடுத்த பிறகு, பணத்துக்காக, கல்யாணத்தை நிறுத்தியவன் ஆயிற்றே! அவனையா, உன் அப்பா தேர்ந்தெடுத்தார்? வீட்டுச் சொத்து முழுவதையும் உறிஞ்சி விடுவானே!" என்று பதறினாள் வேதவல்லி!

## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 5

மஞ்சரி நம்ப மாட்டாத திகைப்புடன் சிறியதாயைப் பார்த்தாள்.

அந்த சசாங்கன், குணம் அவ்வளவு சரியில்லை என்று, அவளே முடிவு செய்திருந்தாள். பெண்கள் விஷயத்தில் பலவீனம்!

அவனது உடையும், உடை, ரோலக்ஸ் கைக்கெடிகாரம் 'ஃபீனிக்ஸ்' மாலில் அவன் அந்தத் துணிகளை வாங்கிக் குவித்த வேகம்! எல்லாமே, பணக்காரத்தனத்தை எடுத்துக் காட்டியது!

பணம் இருப்பதால், தானாக வந்து ஒட்டிக்கொண்ட ஒருத்தியின் திறமையே காரணமாக இருக்கலாம் என்று சாக்கு கூட, மஞ்சரி கண்டு பிடித்திருந்தாள்.

ஆனால், இப்போது ஏற்கனவே அவனிடம் சொந்தமாகவே பணம் இருந்தும், இன்னும் அதிகப் பணத்துக்காக அழைப்பிதழ் வரை வந்துவிட்ட திருமணத்தை நிறுத்துகிறவன், எவ்வளவு கொடியவனாக இருப்பான்! அப்படி எத்தனை கோடிகள் கேட்டிருப்பான்?

அப்படிப் பணத்துக்காகத் தன் வீட்டுத் திருமணம் நின்றால், அப்பா தாங்குவாரா? சும்மாவே, தொழில் பிரச்சினை. இப்போதுதான் சரியாகி இருக்கிற நிலைமை வேறு!

சே, என்ன அசட்டுத்தனமாக யோசித்துக் கொண்டிருக்கிறாள்! சசாங்கனைத்தான், முதலில் இருந்தே அவள் திருமணம் செய்து கொள்வதாகவே இல்லையே!

ஆனால், அப்பாவுக்குத் தொழில் முறைத் தொடர்பு இருக்கிறது! அதிலும் எச்சரிக்கை மிக அவசியமே! ஒரு தப்பான வழியில் பணம் சேர்க்க விரும்புகிறவன், எல்லாவற்றிலும் அப்படித்தானே இருப்பான்?

சிறியதாயிடம் அவசரமாகத் திரும்பி, "சித்தி, இந்தத் திருமணப் பத்திரிகை விஷயம் உண்மைதானா என்று நிச்சயமாகத் தெரியுமா,



சித்தி? அப்பாவிடம் சொல்லித் தொழில் விஷயத்தில் அந்த சசாங்கனிடம் ரொம்பக் கவனத்தோடு இருக்கச் சொல்ல வேண்டும்! இன்னும்" என்று திட்டமிட்டவளை, வேதவல்லி தடுத்து நிறுத்தினாள்.

"இவ்வளவு நாள் கழித்தும் அப்பா குணம் தெரியவில்லையே! தொழில் விஷயம் எல்லாம் அவராகப் பார்த்துச் செய்ய வேண்டியது. அதில் நாம் தலையிட்டால், அவருக்குப் பிடிக்காது. தனக்கு தெரியாதா என்று கோபப்படுவார். ஆனால் திருமணம் உன் சொந்த விஷயம். பிடிவாதமாக முடியாது என்றால், அவரால் ஒன்றும் செய்ய முடியாது. ஏனென்றால், அந்த அருள் வாக்குக்காரர்..." என்றாள் வேதவல்லி.

"அந்த ஆள் என்ன வேண்டுமானாலும் சொல்லிவிட்டுப் போகட்டும். அதை விடுங்கள், சித்தி. ஆனால் அப்பா தொழிலில் ஏமாந்து விடாமல் பார்ப்பதுதானே, ரொம்பமுக்கியம்? அதனால்தான், விஷயத்தைச் சொல்லி..."

"அய்யோ! என் பேரை எடுக்காதே, சும்மா, இந்தச் சிறு வயதில் திருமணமா என்று, உனக்குப் பரிந்ததற்கே என்ன கோபமாகப் பேசினார்! இதற்கு மேல் இந்த விவரம் வேறு நான்தான் சொன்னேன் என்றால், அவ்வளவுதான்! அப்புறம், நான் ஆறு குளம் பார்த்துப் போக வேண்டியதுதான்"

"சேச்சே, என்ன வார்த்தை சொல்லுகிறீர்கள், சித்தி! அதற்கெல்லாம் அவசியமே இராது! முதலில் சசாங்கன் விஷயம் உங்களுக்கு நிச்சயமாத் தெரியுமா என்று சொல்லுங்கள். அதற்கு மேல் உங்கள் பேர் வராமல் நாம் பார்த்துக் கொள்ளலாம்" என்றாள் மஞ்சரி.

எப்படியும் சசாங்கனின் பணத்தாசை பற்றித் தந்தையிடம் எச்சரிப்பதுதான், அவளுக்கு முதன்மையாகப் பட்டது. எனவே, சிற்றன்னையிடம் அதை தெளிவுபடுத்திக் கொள்ள நினைத்தாள்.

அத்தோடு, நிஜமாகவே அவன் இன்னொரு பெண்ணை மணக்க இருந்தவன்தானா என்றும், அவளுக்கு நிச்சயமாகத் தெரிய வேண்டியிருந்தது.

ஒருத்தியை மணக்கச் சம்மதித்தவன், இன்னொருத்திக்கு எண்ணற்ற உடைகள் வாங்குகிறவன், மூன்றவதாக இங்கேயுமா? அப்படியென்ன மதனகாமராஜன் அவன்?

தன் பெயர் இதில் வரவே கூடாது என்று பெண்ணிடம் உறுதிமொழி வாங்கிக் கொண்டு வேதவல்லி விவரம் சொன்னாள்.

கணவனதுடைய தொழில் தொடர்பான சில கூட்டங்களில், ஏதாவது ஒருநாள், எல்லோரும் மனைவியோடு வந்து கலந்து கொள்வது உண்டு. அப்படிச் செல்லும்போது பழகியவர்களோடு, இன்றுவரை வேதவல்லி நல்ல உறவை வளர்த்துக் கொள்வாள்.

"அப்பாவுக்காகத்தான், மஞ்சம்மா. குடும்பத்தோடு பழகிவிட்டால், தொழிலில் ரொம்பக் கறாராக இருக்க மாட்டார்கள் பார்! அப்படிப் பழகியதில் விழுப்புரத்துக்கார குடும்பம் ஒன்று உண்டு. இங்கே சென்னையில் வசிக்கிறவர்கள். அவர்கள் வீட்டில்தான், சசாங்கனின் திருமண அழைப்பைச் சில நாட்களுக்கு முன் நான் பார்த்தேன். சசாங்கன் என்ற பெயர், அவ்வளவாக நடைமுறையில் இல்லாதது. அழைப்பும் அழகாக இருக்கவே, எடுத்துப் பார்த்தபோது. திருமணம் நின்ற விவரம் சொன்னார்கள். நீயும், அதே பெயரைச்சொன்னாயா? எனக்குத் தலையில் இடி விழுந்த மாதிரி ஆகிவிட்டது" என்றாள் வருத்தத்தோடு.

ஓரளவு தனக்கும் அப்படித்தான் என்று மஞ்சரிக்குத் தோன்றியது அவனோடு பேசும்போது, எவ்வளவு இயல்பாகப் பேச முடிந்தது!

ஆனால், எப்படியும் இப்போது திருமணம் கூடாது என்று முடிவு செய்திருந்ததால், இதில் வருத்தப்பட ஒன்றும் இல்லை! ஆனால் தந்தையை எச்சரித்தே ஆக வேண்டும்!

இரு பெண்களுமாக யோசித்து ஒரு கதை தயாரித்தார்கள், நிறைய மெய்தான்.

வேளச்சேரி ஃபீனிக்சில் தோழிகளோடு சசாங்கனை அரைகுறையாகப் பார்த்தது நிஜம். அவனைப் பற்றித் தோழிகள் பேசியது உண்மை. அவர்களில் ஒரு தோழி, அவனைப் பற்றிப் பிறகு அறிந்து வந்து, அப்புறமாக மஞ்சரியிடம் தெரிவித்தாள் என்பது, கற்பனை. அவன் பணம் கேட்டுத் திருமணத்தை நிறுத்தினதும், நிஜம். ஆனால் அதைச் சொன்னது, தோழியுடைய உறவினர் என்பது, கதை.

"அப்பாவிடம் பொய் சொல்லுவதா என்று, ஒரு மாதிரி வயிற்றுக்குள் பிசைகிறது, சித்தி" என்றாள் மஞ்சரி.

உணர்ச்சியற்று அவளை நோக்கிவிட்டு "என்ன செய்வது? மருந்து குடிக்கப் பிடிக்காத குழந்தை மாதிரி, உன் அப்பா. மருந்தை



இனிப்பான தேனில் கலந்து குழந்தைக்கு கொடுப்பது போல, உண்மையை இப்படிக் கற்பனையோடு சேர்த்துப் பின்னி, அவரிடம் தெரிவிக்க வேண்டியிருக்கிறது. எல்லாம், அவரது நன்மைக்காத்தானே, ஓர் ஏமாற்றுக்காரனிடம் அவர் பணத்தை இழக்காமல் காப்பாற்றுவதற்காகத்தானே, சொல்லப் போகிறாய்? இதில், வயிறு கலங்குவதற்கு என்ன இருக்கிறது? சந்தோஷம்தானே பட வேண்டும்?" என்று வேதவல்லி நீளமாகப் பேசவும், மஞ்சரிக்கு அப்படித்தானோ என்று தோன்றியது.

"ஆனால் ஒன்று, அந்த சசாங்கன், ரொம்பவும் சாமர்த்தியமாகப் பேசுகிறவன் என்கிறார்கள். இதற்கும்கூட, இட்டுக்கட்டி, ஏதாவது கதை சொல்லி, நம்ப வைக்க முயற்சிப்பான். அதில் அப்பாவும் நீயும் ஏமாந்து விடக் கூடாதே என்பதுதான், என் கவலை!"

"நானா, ஏமாறுவேன் என்கிறீர்கள்? இத்தனை ஆண்டுகளில் என்னைப் பற்றி நீங்கள் அறிந்தது, இவ்வளவுதானா?" வருத்தமும் கோபமுமாக மஞ்சரி வினவவும் வேதவல்லி, "அப்படி இல்லைடாக் கண்ணு!" என்று கொஞ்சிக் குலவி, அவளைச் சமாதானம் செய்தாள்.

"பார் உனக்கோ பருவ.. வந்து ஒரு மாதிரி வயது! அவனோ, ஆள் நன்றாக இருப்பதோடு நடிப்பில் கை தேர்ந்தவன்! அப்பாவுக்கும் அவனை உறவினன் ஆக்கிக் கொள்வதில் எத்தனையோ வசதிகள்! எல்லாம் சேர்த்து உன் கண்களை மூட வைத்து விடுமோ என்ற கவலை எனக்கு! அதைத்தான் சொன்னேன்!" என்றாள் வேதவல்லி.

"அந்த மாதிரி முட்டாள் நான் அல்ல சித்தி! ஒருநாளும் அப்படி மாறவும் மாட்டேன்" என்று உறுதியான குரலில் பெண் கூறவும், மற்றவள் ஒருவாறு நிம்மதி அடைந்தாள்.

அன்று அபி தூங்கப் போய், ரஞ்சனியும் பாடம் நிறைய இருக்கிறது என்று சென்ற பிறகும், சுகவனம், திருமணப் பேச்சை மகளிடம் எடுத்தாரில்லை.

சற்றே யோசித்த வேதவல்லிக்கு, ஒருகணம் வயிறு காந்தியது!

இவருடைய மகள்களைத் தாயாக இருந்து வளர்ப்பதற்கு, ஒரு பெண் வேண்டும். ஆனால் அவரது திட்டத்தை ஒரு தரம் தட்டிப் பேசியதாலேயே, அவள் முன்னிலையில் மகளின் திருமணம் பற்றிப் பேச மாட்டாராக்கும்!

அப்படியே இருக்கட்டும்! இவர் என்னதான் தலைகீழாக நின்றாலும், இவருடைய மகள், இனியும் இந்தத் திருமணத்துக்குச்

சம்மதித்துவிடுவாளா, பார்க்கலாம்!

அவன் இருந்து பார்ப்பதென்ன? அவர் தனியாகவே அனுபவிக்கட்டும்!

தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு அவனும்கூட உட்கார்ந்திருந்தால்தான் தெரியும் என்பதில்லையே! என்னாயிற்று என்று ஒரு வார்த்தை கேட்டால், அந்த அரடு, அத்தனையையும் ஒப்பிக்கப் போகிறது.

வாய் முன்னே கையை வைத்து, சற்று உரக்கவே, வேதவல்லி ஒரு கொட்டாவியை வெளியேற்றினாள். சற்றுக் கூடுதல் சோம்பலாகவே காட்டி உடம்பை சோம்பல் முறித்த வண்ணம் "விரதம் இருந்து, கோயிலுக்குப் போனதாலோ, என்னவோ எனக்கு ஒரே அசதியாகத் தூக்கம் வருகிறது! செல்லம் நீ படுக்கச் செல்லும்போது, எல்லா ஸ்விட்சும் அணைத்திருக்கிறதா என்று மட்டும், பார்த்துவிடும்மா! நீயும், ரொம்ப நேரம் டீவி பார்த்துக் கண்ணைக் கெடுக்காமல், சீக்கிரமாகத் தூங்கப் போய்விடு, கண்ணா! இரண்டு பேருக்கும் குட்நைட்டுப்பா..." என்று இன்னொரு கொட்டாவியிலேயே, பேச்சை முடித்துவிட்டு, படுக்கப் போனாள், அவள்.

"சித்திக்கு என் மீது ரொம்பப் பிரியம், இல்லையாப்பா?" என்று மெல்ல நடந்து சென்ற சிற்றன்னையை அன்போடு பார்த்தபடி மஞ்சரி கூறினாள்.

வீட்டு லாக்கரில் இருக்கும் எடை குறைவான நகைகள், சுகவனத்துக்கு நினைவு வந்தன.

கடைசி மகளுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுக்கும் வரை, இந்தப் பொய்களுக்கு, நாலும் ஒத்து ஊதித்தான் ஆக வேண்டும் போல!

"ம். பிறந்ததில் இருந்து வளர்க்கிறாளில்லையா? வளர்த்த பாசம்! அதிருக்கட்டும். சசாங்கன் பற்றி நீ என்னம்மா நினைக்கிறாய், ஆள் நன்றாக இருக்கிறார்தானே, நன்றாகப் பழகவும் செய்கிறார்... உனக்கு பிடித்திருக்கிறதுதானே?" என்று ஆவலாக... மிக ஆவலாகக் கேட்டார்.

இவருக்குக் கடுமையான ஏமாற்றத்தைத் தர வேண்டியிருக்கிறதே என்று, மஞ்சரிக்கு உள்ளூர வருத்தம்தான். இத்தகைய தோற்றப் பொலிவுள்ளவன், இவ்வளவு மட்டமானவனாக இருக்க வேண்டுமா என்று, அதுவும் வருத்தமாகத்தான் இருந்தது.



ஆனால், என்ன செய்வது. அழகான பாம்புதானே, ஆளை கொல்லும் விஷயத்தையும் வைத்திருக்கிறது! அழகாக இருக்கிறதே என்று, அதைத் தூக்கிக் கொஞ்சவா முடியும்?

ஒரு பெருமூச்சில் சோர்வை உதறிவிட்டு, "அப்பா, நான் ஒன்று சொன்னால், அதிர்ச்சி அடையாமல், பொறுமையாகக் கேட்க வேண்டும்" என்று தொடங்கினாள் பெண்.

முதலில் சுகவனத்தால் எதையும் நம்பவே முடியவில்லை.

சசாங்கன் தோற்றப் பொலிவு உடையவன், அவனைப் பற்றி மகளுடைய தோழி தவறாகச் சொல்லுவானேன்?

இதற்கு வேறு ஏதேனும் விளக்கம் இருக்கும். மற்றபடி, அவருக்கா மனிதர்களை எடை போடத் தெரியாது என்று எண்ணும்போதே, பதினைந்து ஆண்டுகளுக்கும் மேலாக மனைவியாக வாழ்கிறவளையே, அவர் தானாகக் கண்டுபிடிக்கவில்லையே. தற்செயலாக அந்தப் பாங்கிற்குச் செல்லவில்லை என்றால், இன்னமும் அவளை நம்பிக்கொண்டுதானே இருந்திருப்பார் என்ற எண்ணம் தோன்றி, அவரது தன்னம்பிக்கையை அடியோடு அழித்தது.

அதேசமயம், மகளும் அப்படித்தானே, இன்னும் சிற்றன்னையிடம் உயிராக இருப்பவள்தானே என்று தோன்ற, அதேபோல, சசாங்கன் விஷயத்தில் அவளது கணிப்பும் தவறாக இருக்கலாம் என்று, சிறு நம்பிக்கையும் வந்தது.

ஆனால், எதையும் சீக்கிரமே நன்கு தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும் என்று எண்ணமிடும்போதே, நெஞ்சுக்குள் ஏதோ அழுத்துவது போல உணர்ந்தார் அவர்.

இல்லை, எதையும் தள்ளிப் போடக் கூடாது. உடனே செய்ய வேண்டும்!

மருத்துவரின் ஆலோசனைப்படி, சட்டைப் பையிலேயே எப்போதும் வைத்திருக்கும் மாத்திரையை எடுத்து வாயில் போட்டுக் கொண்டு சற்று நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

நல்லவேளை! முதல் தடவை மருத்துவரிடம் போனதுமே, உயிலை எழுதிவிட்டார். கொஞ்சம் சேர்க்க வேண்டும் அவ்வளவே!

ஆனால், சின்ன மகளின் மீது உள்ள பாசத்தால், சில விஷயங்களை, அவரால் மிகத் தெளிவாக எழுத முடியவில்லை.

அதனால்தான், குடும்பத்தைச் சரியான வழியில் நடத்திச் செல்லத்தக்க திடமான துணை ஒன்று, மகளுக்கு வேண்டும் என்று

அவர் நினைத்ததே. மற்றபடி, அவளது படிப்பு முழுதாக முடிந்திராத அந்த சிறு வயதில், அவளுக்கு மணமுடிக்க அவர் எண்ணியிருக்க மாட்டார்.

அதிலும், மஞ்சரி மேல் படிப்பு படிக்க ஆசை கொண்டிருந்ததும், அவருக்குத் தெரியும் என்பதால், பெண் கேட்டு வந்த சிலரைக் கூட "சின்னப் பெண், அவள் படிப்பு முடிக்கட்டும்" என்று திரும்பியும் அனுப்பியிருக்கிறார்.

ஆனால், வேதவல்லியைப் பற்றிய உண்மை, எல்லாவற்றையும் மாற்றிவிட்டது.

தொடர்ந்து தெரிய வந்த அவரது உடல்நிலை விரைந்து முடிவெடுக்க உந்தியது.

மஞ்சரி கெட்டிக்காரிதான். தைரியாலியும் கூடத்தான். ஆனால் அவரைப் போலவே, பாசத்தின் முன் கோழை! சிறியதாயிடம் உயிரையே வைத்திருந்தாள். வேதாவைப் பற்றித் தவறாக நினைக்கக்கூட அவளால் முடியாது.

ஆனால், பெண்களின் அன்னை பாசத்தைவிடப் பெரிதாக இருக்கக் கூடியது கணவனிடம் ஏற்படக் கூடிய அன்பு.

மனவலிமை உள்ள ஒரு நல்லவனை அவளுக்குக் கணவனாக்கினால் அவனது துணையில் மஞ்சரிக்குமே கண் திறக்கக்கூடும். திறக்கும்!

கணவன் துணையோடு தொழில் குடும்பம் இரண்டையுமே, உரிய விதமாக, அவள் கவனித்துக் கொள்வாள்!

இந்த ஆசையும் நம்பிக்கையுமாக, சகவனம் மகளுக்கு மாப்பிள்ளை தேடலானார்.

சசாங்களைப் பார்த்ததும், தேடப் போன மூலிகை காலில் சிக்கிய மாதிரி... அதை விடவும், கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்த மாதிரி என்பார்களே, அது மிகவும் சரியாக இருக்கும். அந்த மாதிரி, அவர் உணர்ந்ததும், அதனால்தான்.

ஆனால், அவரது தேர்வு தவறோ என்ற எண்ணம், அவரை அதிரச் செய்துவிட்டது! உடம்பையே பாதிக்கும் அளவுக்கு!

மருந்து வேலை செய்யத் தொடங்கவும், நெஞ்சில் அழுத்தம் மறைந்து இயல்புக்கு வந்தது. படுத்து தூங்கிவிட்டு, அவர் செய்ய நினைத்ததை, மறு நாள் பார்க்கலாம் என்று எண்ணியவருக்கு, ஏனோ அப்படி விடவும் பிடிக்கவில்லை.



நன்றே செய், அதையும் இன்றே செய் என்று பிறரிடம் அவர் கூறுவது உண்டு. இன்று, அது அவருக்குரிய பாடம்.

மனமா? அல்லது, அதுதான் உள்ளுணர்வா?

மணியைப் பார்த்தால், ரொம்பவும் தாமதம்தான். ஆனால், உள்ளுணர்வு உந்த, அவர் செல்ஃபோனை எடுத்து எண்களை அழுத்தினார்.

தூங்கத் தொடங்கியிருப்பான் போல! ஒரு முழு ரிங் போன பிறகே, அவன் செல்ஃபோனை எடுத்ததே.

அழைத்தவர் யார் என்று கண்டதும், சசாங்கன் உடனே திரும்பக் கூப்பிட்டான்.

சோர்வுடன் தன் மொபைலைக் கீழே வைக்கப் போனவருக்கு, சசாங்கனே கூப்பிடவும், புத்துயிர் வந்தது போல ஆயிற்று.

ஆறுதல் பெருமூச்சுடன், இந்த நள்ளிரவில் அவனை அழைத்துத் தூக்கத்தைக் கெடுத்ததற்காக முதலில் மன்னிப்புக் கேட்டார்.

"அதை விடுங்கள், சார். காரணம் இல்லாமல் இப்படிக் கூப்பிட மாட்டீர்கள் என்று எனக்கு நிச்சயம். சொல்லுங்கள் சார், இப்போது நான் உங்களுக்கு என்ன செய்யக்கூடும்? என்ன விஷயம்?" என்று ஓர் அவசரத்துடன், ஆனால் தெளிவாகக் கேட்டான் சின்னவன்.

ஒருகணம் தயங்கிவிட்டு, அவனிடம் சகவனம் ஒரு கேள்வி கேட்டார்.

அவன் பதிலில் ஆறுதலுற்றவராக அவர் மேலும் சில கேள்விகளைக் கேட்டார்.

சசாங்கன், அவரது எல்லாக் கேள்விகளுக்கும் பதில் சொல்லி விடவில்லை. சிலவற்றுக்கு, அவை பிறரைப்பற்றிய ரகசியம்... எக்காரணம் கொண்டும், அந்த விஷயம், ஒரு வார்த்தை கூட, அவன் மூலமாக வெளிவராது, என்று அழுத்தம் திருத்தமாகக் கூறி முடித்துவிட்டான்.

இரண்டாவது முறையாக அவனிடம் கேட்கக் கூட, அவரால் முடியவில்லை. அந்த அளவு அழுத்தம். ஆனால் அதற்காக, அவர் அவனை நம்பவில்லையோ என்றால், அப்படியில்லை என்று சர்வ நிச்சயமாக, சொல்லிவிடலாம்!

அவனிடம் முழு நம்பிக்கையே, அவருக்கு இப்போதுதான் வந்தது எனலாம். எதையாவது சொல்லிப் பூசி மெழுகாமல், மறுப்பையே அழுத்தமாகச் சொன்னானே!

மேலும் சற்று நேரம் அவனிடம் பேசி முடித்தார்!

அதன்பின், சற்று நேரம் அவரது லாப்டாப்பை வைத்துக் கொண்டு வேலை செய்தார்.

செய்த வேலையைச் சரிபார்த்தபின், லாப்டாப்பில் பதிவு பண்ணி வைத்திருந்த படங்களைப் பார்க்கலானார். மூன்று மகள்களின் அன்று வரையிலான வளர்ச்சியும் அதில் இருந்தது.

முதல் மனைவி தேவகியின் படம் அங்கங்கே வைத்திருப்பார்.

"நீ மட்டும் போகாமல் இருந்திருந்தால்..." என்று பெருமூச்சு விட்டார்.

சகவனத்தின் அலுவல் அறையிலேயே ஒரு படுக்கையும் உண்டு. இரவில் அதிக நேரம் வேலை செய்தால், அங்கேயே படுத்து உறங்கி விடுவார்.

அன்றும் அதுபோலவே படுத்துக் கொண்டார்.

மேஜைமேல் இருந்த தேவகியின் படத்தை கையோடு எடுத்துச் சென்று, அதைக் கையில் வைத்துப் பார்த்தபடியே சரிந்து படுத்தவர், காலையில் எழவில்லை.



## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 6

மஞ்சரிக்கு தாங்க முடியாத அதிர்ச்சியோடு வேதனையும் அதிகமாக இருந்தது.

முன்தினம், தந்தை கடைசியாகப் பேசிவிட்டு, போனது அவளோடுதான்.

அந்த சசாங்கனை அவள் மறுத்ததுதான், அவரது மறைவுக்குக் காரணமாக இருக்குமோ என்று எண்ணி எண்ணிக் குமைந்தாள்.

ஆனால், இதை யாரிடம் சொல்வது?

நிற்காமல் பெருகிய அவளது கண்ணீரைப் பார்த்துவிட்டு, தன் துயரத்தை ஒதுக்கி வேதவல்லி அவளைத் தேற்ற முயன்றபோது, அவளிடம்தான், மஞ்சரி மனம் உடைந்து, தன் பிழையை,... பிழை என்று அவள் நினைத்ததைச் சொல்லிப் புலம்பினாள்.

ஆனால் வேதவல்லி கண்டுபிடித்த காரணம் வேறு.

சசாங்கன் மிகவும் நல்லவன், மகளுக்குக் கணவனாகத் தகுந்தவன் என்று ரொம்பவும் நிச்சயமாக, சகவனம் எண்ணியிருந்தார். வீட்டுக்கு



வந்து அவன் பழகிய முறையும், மகள்கள் அவனோடு கலகலப்பாகப் பேசியதும் கூட, அவருக்கு அதையே உறுதிப்படுத்திவிட்டது.

ஆனால் அவன் எப்படிப்பட்ட அயோக்கியன் என்று தெரிய வரவும், இவனுக்குப் போய் பெண்ணைக் கொடுக்க இருந்தோமே என்று, அதிர்ந்து போனார்.

அவரது உயிரைக் குடித்தது, அந்த அதிர்ச்சியே தவிர, மகள் அவனை மறுத்தது அல்ல! இந்தக் குடும்பம் தலைவரை இழந்து துன்புறக் காரணம், அந்த சசாங்கனே என்று வேதவல்லி தெளிவாக எடுத்துச் சொன்ன பிறகுதான், மஞ்சரி கொஞ்சம் தெளிந்தாள்.

"ஆண் பிள்ளை இல்லாத வீடு, இங்கே என்ன சுருட்டலாம் என்று, ஆளாளுக்குப் பிணம் தின்னிக் கழுகுகள் போல வருவார்கள், பார்! இவனும் வருவான்" என்று ஆரூடம் சொன்னாள், சிற்றன்னை.

மஞ்சரி மௌனமாக இருந்தாள்.

சசாங்கன் ஏற்கனவே ஒரு தரம் வந்து விட்டிருந்தான். சகவனம் இறந்த செய்தி தெரிந்ததுமே, வந்து அவளிடம் வருத்தம் தெரிவித்தவன், அவரது இறப்பு தொடர்பான பல வேலைகளைத் தன் பொறுப்பாக ஏற்றுச் செய்திருந்தான்.

அதனாலேயே திடுமென மறைந்தாலும், சகவனத்தின் இறுதிக் கிரியைகள், தடையற்று நடந்திருந்தன.

அதிலும் சசாங்கன் தோன்றாத் துணையாக ஒதுங்கியிருந்தே வேலைகளை நடத்தியது வேறு, அவளுக்கு ஓர் ஆறுதலாக இருந்தது.

மற்றபடி, சும்மாவே குற்ற உணர்ச்சியில் துடித்துக் கொண்டிருந்தவளுக்கு, அவனிடம் இது பற்றிப் பேசும்படியும் நேர்ந்திருந்தால், தாங்கியிருக்கவே முடியாது!

எல்லாம் முடிந்த பிறகு, அவனுக்கு நன்றி சொல்வதோடு, அவன் செலவு செய்த தொகை என்னவென்று கேட்டு, அதை திருப்பிக் கொடுத்துவிட வேண்டும் என்று மட்டும் எண்ணியிருந்தாள்.

சிற்றன்னைக்கும், இவை அனைத்தும் தெரியும் என்றுதான், மஞ்சரி இதுவரை எண்ணியிருந்தாள். ஆனால், அவளது பெரிய இழப்பில், வேறு எதையுமே அவளுக்குக் கவனிக்கத் தோன்றவில்லை போலும், பாவம் என்று, இப்போது தோன்றியது.

தாலி கட்டிய கணவரை, வாழ்வின் பாதியையே அல்லவா, இழந்திருக்கிறாள்! வேறு நினைவு வராமல் போனதில் ஆச்சரியமே

கிடையாது!

ஆனால், இந்த நிலையிலும், மஞ்சரியின் அதிகக் கண்ணீரைக் கண்டுபிடித்து அவளுக்கு ஆறுதல் சொல்ல வந்தாளே! இப்படி ஒரு சிற்றன்னை கிடைக்க, மஞ்சரியும், ரஞ்சனியும் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

கூடவே, இப்போது சசாங்கனைப் பற்றிய மனோபாவம், மஞ்சரிக்கு மாறிப்போனது.

சோழியன் குடுமி சும்மா ஆடாது என்று ஒரு பழமொழி உண்டு. அதன்படி, சசாங்கன் இந்த வேலைகளை இழுத்துப்போட்டுச் செய்வதற்கும், ஒரு காரணம் இருக்கவேண்டும்! அது என்னவாக இருந்தாலும், அவளுக்கோ, அவளுடைய குடும்பத்துக்கோ நல்லதாக இராது!

பத்தாம் நாள் காரியம் ஆனதும், உயிலைப் படிக்கவென்று குடும்ப வக்கீல் எல்லோரையும் அழைத்தார்.

என்ன பெரிய உயில்? தொழிற்சாலையும், இந்த வீடும் ஊரில் நிலங்களும், ஊர் நிலங்களை, எப்போதும் போல ஒன்றுவிட்ட சித்தப்பா பராமரித்து, ஒரு பங்கை அனுப்புவார்.

தொழிற்சாலை நிர்வாகத்தை, பொது நிர்வாகியோடு, சேர்த்து, சித்தி பார்த்துக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறாள். அவ்வப்போது அப்பா தொழில் பற்றி நிறையச் சொல்லியிருப்பதால், தன்னால் முடியும் என்பது, சித்தியின் நம்பிக்கை.

"இப்படி ஒரு நிலைமை வரக்கூடும் என்றுதான், தொழில் பற்றி, அப்பா என்னிடம் திரும்பத் திரும்பச் சொன்னார் என்று, இப்போதல்லவா தெரிகிறது? ஆனால், புலி இருந்த இடத்தில் பூனை போல, நான் என்னதான் செய்யப் போகிறேனோ என்று, எனக்கே பயமாக இருக்கிறது, கண்ணு!" என்று கண்களில் நீர் மல்க, வேதவல்லி கூறியபோது, மஞ்சரிக்கு நெஞ்சு விண்டுவிடும்போல வலித்தது.

ஆனால் சிற்றன்னையின் துயரம், அவளதை விடப் பல மடங்கு பெரியதல்லவா? கவலையை ஒதுக்கி, அவளே கடமையைச் செய்ய முன்வரும்போது, தான் அழுது, அவளைப் பலவீனப்படுத்தக் கூடாது என்று, சின்னவள் தன்னை அடக்கிக்கொண்டு, பெரியவளைத் தோளோடு அணைத்து ஆறுதல் கூறினாள் "புலி இருந்த இடத்தில் பூனையென்ன? நீங்கள் சிங்கமாகவே செயல்படுவீர்கள் சித்தி!"



என்று தென்பூட்டிப் பேசிப் பெரியவளைத் தேற்றினாள்.

"புலி, பூனை, சிங்கம்! அப்படியானால், நம் வீட்டில் மூன்று மிருகங்கள்!" என்று அருகில் இருந்த அபி கூறவும், பெரிய இரு பெண்களும் தன்னை மறந்து முறுவலித்தனர்!

ஊர் நிலம், தொழிற்சாலை வருமானங்களில் வீடு எப்போதும் போல நடக்கப் போகிறது. அப்படி இருக்க, அப்பா இல்லாத வேதனையைத் தூண்டி விடுவது போல, எதற்கு இந்த உயிலும், அதைப் படிப்பதும் என்று, மஞ்சரிக்குப் பிடிக்கவே இல்லை.

ஆனால், உயில் படிக்கும் நேரத்தில் ஊர்ச் சித்தப்பாவோடு உள்ளே வந்து அமர்ந்த சசாங்கனைப் பார்த்ததும், அவளுக்கு ஒரு மாதிரி இருந்தது.

உயில், அவளுடைய குடும்ப விஷயம். அவளுடைய அப்பா எழுதியது. அதில், இவன் என்ன கலந்து கொள்வது? அதிலும், தந்தையின் மரணத்துக்குப் பெரும்பாலும், இவனே காரணம் எனும்போது!

அன்னியர் யாரும் வரக்கூடாது. வெளியே போங்கள் என்று சொல்லவும், அவளுக்கு தைரியமில்லை. ஒருவேளை, வக்கீலே, அழைத்து, அவன் வந்திருந்தால்?

அப்படி இருந்தால், விஷயம் என்னவாக இருக்கும் என்று, மனம் கலங்கினாள்.

வேதவல்லிக்கும் சசாங்கனின் வரவு சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது.

ஏதோ சுகவனம் செத்த சமயத்தில் வந்து நின்று, சில பல வேலைகளை அவன் பொறுப்பில் ஏற்றுச் செய்தது, வசதியாகத்தான் இருந்தது. கூடவே, செலவுப் பணத்துக்காக, அவளிடம் வந்து நிற்காதது, அவனே பணம் கொடுத்தது எல்லாமேதான்!

ஆனால், இப்போதும் வந்திருக்கிறான் என்றால்? அதுவும் திருமணத்தை மஞ்சரி மறுத்த பிறகு, ஏன் வந்தான்?

சரியான நேரத்தில் வக்கீலும் வந்துவிட, சுகவனத்தின் உயில் படிக்கப்பட்டது.

முதலில் ஊரில் உள்ள நிலம், எப்போதும் போல அதை அவருடைய ஒன்றுவிட்ட தம்பி சுந்தரமூர்த்தியே கவனித்து வர வேண்டும். விளைச்சலில் பாதி அவருக்கு எடுத்துக்கொண்டு மீதிப் பாதியை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று குறித்திருந்தது.

அன்று வரையிலான வழக்கமும் அதுவே! பரம்பரை நிலம், வழிவழியாக அப்படியே இருக்கட்டும், விற்கக் கூடாது என்று சுகவனம் எழுதியிருந்தார்.

ஒரே ஒரு மாற்றம், இனிமேல் நிலத்து வருமானம் பற்றிய வரவு செலவுக் கணக்குகளை, அவர் மஞ்சரியிடம் கொடுக்க வேண்டும். வருமானத்தையும் அவள் கணக்கில்தான் போட வேண்டும்.

இந்த பகுதி படித்து முடித்ததும், சுந்தரமூர்த்தி எழுந்தார்.

"என் விஷயம் இவ்வளவுதான், என்றால், நான் கிளம்புகிறேன். வக்கீல் சார். மஞ்சம்மா, உன் பாங்க், அதில் உன் அக்கவுன்ட் எண் எல்லாம் எனக்கு அனுப்பிவிடும்மா. இப்போது நான் அவசரமாகப் போக வேண்டும். நாளைக் காலையில் வயலுக்கு உரமடிக்க வந்து விடுவார்கள். நேரில் பார்க்காவிட்டால், ஒரு வண்டி உரத்தைப் பக்கத்து வயல்காரனிடம், கைக்காசுக்கு விற்று விடுவார்கள்" என்று கிளம்பிப் போனார்.

"இப்படித் தனக்கும் எதுவும் கிடைக்காதா என்று, நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு, உட்கார்ந்திருக்கிறான் பார்" என்று சசாங்கனைக் காட்டி, வேதவல்லி சொன்னதைக் கேட்டு அவன் புறமாக மஞ்சரி திரும்பிப் பார்த்தது தப்பாகிப் போயிற்று.

நாக்கைத் தொங்கப்போட்டுக் கொண்டோ, ஆசையில் எச்சில் வழியவோ, சசாங்கன் அமர்ந்திருக்கவில்லை.

முகத்தில் சிறு இறுக்கத்துடன், மார்பின் குறுக்கே கட்டிய கைகளுடன், லேசாகக் கால்மேல் கால்போட்டு, நிமிர்வோடு அவன் உட்கார்ந்திருந்த தோற்றம், அவள் மனதில் கனமாக விழுந்தது!

இவன் ஏன் நல்லவனாக இருக்கவில்லை என்று, அவளது மனது, ஏங்கித் தவித்தது!

தொண்டையை லேசாகக் கமறிக்கொண்டு, வக்கீல் மறுபடியும் உயிலைப் படிக்கத் தொடங்கினார்.

முதலில் வீடு பற்றிய விவரங்கள் எழுதியிருந்தன. ஆறு மனையளவு பரப்பளவில் அமைந்திருக்கும் வீட்டின் எல்லைகளைக் குறிப்பிட்டு, அந்த வீடு அவருடைய மூன்று பெண்களுக்கும் மட்டிலுமே உரிமையானது என்றும், அவர்களுக்குமே, அதை விற்கும் ஒத்தி வைக்கும் உரிமை கிடையாது என்று சுகவனம் எழுதியிருந்தார்.

"இந்த வீட்டின் மேல், அப்பாவுக்கு எவ்வளவு ஆசை!" என்று மஞ்சரி உருக, "அப்படியானால், இந்த வீட்டை ஒப்புக் காட்டி, நான்



வெளிநாடு செல்ல முடியாதா?" என்று கேட்டாள் ரஞ்சனி.

"முடியாதம்மா" என்று விட்டுத் தொடர்ந்த வக்கீலை உணர்ச்சி துடைத்த முகத்துடன் வெறித்தாள் வேதவல்லி.

தொழிற்சாலை பற்றியும், அதன் இருப்பிடம், அளவு முதலானவைகளைச் சொன்ன பிறகு, தொழிலின் முழு உரிமையும் மூத்த மகளுக்கே உரியது என்று சுகவனம் எழுதியிருந்தார்.

வேதவல்லி அசைவற்றுப் பார்த்திருக்க, மஞ்சரி திகைத்து நிமிர்ந்தாள்.

தொழில் நடத்த, அவளுக்கு என்ன தெரியும்? தொழில் விவரங்களை எல்லாம் சித்திக்குக் கற்றுக் கொடுத்துவிட்டு, உரிமை அவளுக்கு என்றால்?

ஒருவேளை அவளோடு கலந்துபேசி, சித்தி நடத்த வேண்டும் என்று எதுவும் எழுதியிருப்பாரோ என்று கவனித்தால் வேதவல்லி பற்றி, எதுவுமே இல்லை.

மாறாக, தொழில் நிறுவனத்தையும், விற்பதோ, யாருக்கும் இனாமாகக் கொடுப்பதோ, ஒத்தி வைப்பதோ, நிறுவனத்தின் பேரில் பெரும் தொகை கடன் வாங்குவதோ கூடாது என்று உயிலில் எழுதப்பட்டிருந்தது.

மொத்தத்தில், தொழிலை நல்லபடி நடத்தித்தான் வருமானம் காண வேண்டும் என்றவர், முதல் முறையாக, சசாங்கன் அங்கே இருப்பதன் காரணத்தைத் தெரிவிக்கலானார்.

சுகவனத்தின் தொழிற்சாலையின் உரிமையையும் பொறுப்பையும் மூத்த மகளுக்கே கொடுத்த சுகவனம், மற்றபடி அதை என்ன செய்வதானாலும், சசாங்கனின் அனுமதியைப் பெற்றே செய்ய வேண்டும் என்று, உயிலில் எழுதியிருந்தார்.

அதாவது தொழிற்சாலையை விற்பதோ, ஒத்தி வைப்பதோ, அதன் பேரில் கடன் வாங்குவதோ, எல்லாம் சசாங்கனின் ஒப்புதலின் பேரில்தான் செய்ய முடியும்!

சில கணங்கள் மஞ்சரிக்கு ஒன்றுமே புரியவில்லை.

தேவகி இன்டஸ்ட்ரீஸ் முழுக்க முழுக்க சுகவனம் உருவாக்கி வளர்த்தது. அதை என்ன செய்யவும், யார் பேரில் எழுதி வைக்கவும், அவருக்கு உரிமை உண்டு. எதிர்காலத்தில் அதை எப்படியெப்படி நடத்த வேண்டும் என்று சொல்லவும், அவருக்கு அதிகாரம் இருந்தது.

ஆனால், இந்த சசாங்கனுக்கு ஓர் அதிகாரத்தைக் கொடுத்ததுதான் அவளுக்குப் புரியவில்லை.

அதுவும் அவன் எப்படிப்பட்டவன் என்று அவள் தெரிவித்த பிறகும், ஏன் இப்படிச் செய்தார்?

தினசரி அலுவலில் அவன் தலையிட இடம் இல்லை என்றாலும், தொழிலை விரிவாக்கம் செய்வதோ, அல்லது வருமானம் குறைகிற காலத்தில், ஏதாவது கடன் வாங்குவது என்றாலோ, அவனது அனுமதியின்றிச் செய்ய முடியாது என்றால், அவனுக்குத்தான் பெரிய அதிகாரம் என்பது போல அல்லவா இருக்கிறது? ஏன் இப்படி?

புரியாத திகைப்புடன் சசாங்கனைப் பார்த்தால், அவனும் அப்போது அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான், உணர்ச்சியற்ற பார்வையால்!

அல்லது அந்தப் பார்வை, கண் வழியே அவளது எண்ணங்களைக் கொக்கிப் போட்டு இழுத்து தெரிந்து கொள்கிறதோ?

சட்டெனப் பார்வையைத் திருப்பியபோது, வக்கீல் மேலே கூறுவது கேட்டது.

தங்கைமாரின் கல்வி, திருமணம், எல்லாம் மஞ்சரியின் பொறுப்பு. கொடுத்த பொறுப்பை, சிறு குறைவுமின்றி, சிறப்பாக நிறைவேற்றுவாள் என்ற நம்பிக்கை இருப்பதாலேயே, இந்த சுமைகளை மூத்த மகள் மீது சுமத்துவதாக ஒரு விளக்கத்தையும் பெற்றவர் கொடுத்திருந்தார்.

ஆனால், மஞ்சரிக்கு இன்னும் ஒன்றும் புரியவில்லை.

சுகவனத்தின் பெரிய சொத்துக்கள் மூன்று, ஊரில் உள்ள நிலங்கள், இந்த வீடு, தொழில்! இந்த மூன்றிலுமே வேதவல்லி என்ற பெயரையே காணோமே! அவளுக்கு வேறு எதைக் கொடுக்கப் போகிறார்?

கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவருடைய மனைவி, அவருடைய மூத்த தாரத்துடைய மக்களை தன் பிள்ளைகளாகவே வளர்த்த அன்னை! அவள் வயிற்றில் பிறந்த மகளுக்கும் மற்றவர்களுக்கும் எந்த வேறுபாடும் காட்டாதவள். தனக்கென்று எந்த ஆசையும் இல்லாதவள், உயிலில், அவளைப் பற்றித் தந்தை குறிப்பிடவே இல்லையே!

இதென்ன விசித்திரம் என்று மஞ்சரி யோசிக்கும்போதே, வக்கீல் வேதவல்லியின் பேரைச் சொன்னார். ஆவலாக அவள்



கவனிக்கையில், வக்கீல் சொன்னார்.

மனைவி வேதவல்லி பற்றி, சுகவனம் உயர்வாகவே சொல்லியிருந்தார். வேதவல்லிக்கு குடும்பம்தான் எல்லாம். கணவனான தனக்காகவும், மகள்களுக்காகவுமே வாழ்கிறவள். ஆடம்பரமாக ஆடைகள், ஆபரணங்களில் ஆசை இல்லாதவள், இப்படிப்பட்டவளுக்கு அவர் எதையென்று கொடுப்பது? அவளுக்குப் பிடித்தமானதை, அதாவது, இன்றுவரை நடந்தது போலவே, இந்த வீட்டிலேயே முன்போலவே இருந்து, குடும்பத்தை நடத்துமாறு அவளிடம் சுகவனம் கேட்டிருந்தார். அந்த வீட்டில் எப்போதும் போலவே, அவள் மகாராணியாகவே வாழலாம்!

கண்ணீருடன் சிற்றன்னையின் கையைப் பற்றி அழுத்தினாள் மஞ்சரி "அப்பா, உங்களை எப்படித் தெரிந்து வைத்திருக்கிறார், பாருங்கள்! அப்பா இல்லாதது வேதனைதான், என்றாலும் இந்த வீட்டில் நீங்கள் எப்போதும் போலவே இருக்க வேண்டும், சித்தி!" என்றாள் உணர்ச்சியோடு.

"இனி, உன் சொல்லுக்கு அப்பீல் ஏது தங்கம்?" என்றாள் வேதவல்லி.

உணவை மறுத்துக் கிளம்பிய வக்கீலுடனேயே, சசாங்கனும் சென்றுவிட்டான்.

குழம்பிய குட்டையில் மீன் பிடிப்பது போல, எல்லோரும் மனம் கலங்கியிருக்கும் நிலையில் எதைப் பேசவும், அவனுக்கு விருப்பம் இல்லை! வீட்டுத் தலைவரின் இழப்பு, இந்த உயில், எல்லா பாதிப்புகளும் சற்றே அடங்கும்வரை, பொறுத்திருப்பதுதான் நாகரீகம் என்று அவன் நினைத்தான்.

ஆனால் "எதையோ சொல்லி, உன் அப்பாவை சமாளித்து விட்டான் பார்!" என்றாள் வேதவல்லி மகளிடம்.

"முன்பே சொன்னேனே, அவன் மோசமானவன், ஏதவது கதை சொல்லி, அவரை உன்னை ஏமாற்றி விடுவான் என்றேனே, நினைவிருக்கிறதா? நான் அஞ்சியது போலவே, ஏதோ சொல்லி, அப்பாவை நம்ப வைத்து, ஆமை மாதிரி உள்ளே புகுந்து விட்டானே! என்ன ஆகப் போகிறதோ?" என்று கவலைப்பட்டாள்.

சித்தி சொன்னாள்தான்! ஏதாவது கதை சொல்லி, சமாளித்து விடுவான் என்றாள். ஆனால் அப்பாவோடு மகளும் ஏமாறக் கூடும் என்றதுதான் நடக்கவில்லை. நடக்கவும் நடக்காது! இந்த மஞ்சரி,

ஒருநாளும் சசாங்கனிடம் ஏமாற மாட்டாள்!

சித்தி கெட்டிக்காரிதான். அவள் சொன்னபடியே கழுகு போல வந்துவிட்டானே! ஆனால் என்ன வட்டமிட்டாலும், அந்தக் கழுகு கொத்திக்கொண்டு போவதற்குத்தான், இங்கே எந்த இரையும் அவனுக்குக் கிடைக்கப் போவது இல்லை!

சில நாட்களாகச் சரியாகச் சாப்பிடாமல், தூங்காமல் இருந்ததில், உடம்பு அசதியாக இருக்கிறது. சீக்கிரமே படுத்துத் தூங்கப் போகிறேன் என்று சொல்லிக் கிளம்பினாலும் மஞ்சரி ஓடிப்போய் சூடு பண்ணிக் கொணர்ந்த பாலை குடித்த பிறகே, வேதவல்லி தனியாகத் தன் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக் கொள்ள முடிந்தது.

கதவை உள்ளே தாழிட்டுக் கொண்ட பிறகே, அவளால் தன் உணர்ச்சிகளை முழுதாக முகத்தில் காட்டவும் முடிந்தது!

அப்படிக் காட்டிய முகத்தில் கோபம் கொந்தளித்தது. கண்களில் கனல் வீசியது.

ஆக, இந்த வீட்டில் குடும்பத் தொழிலில் ஊர் நிலத்தில், அவளுக்கு ஒன்றுமே இல்லை! என்ன அநியாயம்!

பதினைந்து ஆண்டுகளாக, இந்த வீட்டின் தலைவியாக, அவள் கோலோச்சியிருக்கிறாள்! ஆனால் இந்த வீட்டில் அவளுக்கு உரிமை கிடையாது!

கணவன் எதையோ கண்டுபிடித்திருக்கிறான்! எதை...யோ, சரியாக மோப்பம் பிடித்துவிட்டான். என்னவோ உண்மை, அவனுக்குத் தெரிந்து போயிற்று! அதனால் உனக்கு ஒன்றும் கிடையாது என்று. உயில் மூலமாக அவளது நெஞ்சிலேயே குத்திவிட்டான்.

இப்படி ஆகும் என்று தெரிந்திருந்தால், இன்னும் வேகமாக, இன்னும் எவ்வளவோ அதிகமாகச் சுருட்டியிருக்கலாம்! சிறு சந்தேகம் கூட வந்துவிடக்கூடாது என்று கவனமாகவும், எங்கே போய்விடப் போகிறது என்று மெத்தனமாகவும் இருந்தது தப்பாகிப் போயிற்று!

ஆனால் இப்போது விட முடியாது! எதையுமே, அவள் விடுவதாக இல்லை!

சுமார் பதினைந்து ஆண்டுகளாக, சுகவனத்துக்கு மனைவியாக, ஒரு குறை சொல்ல முடியாத அளவு உழைத்திருக்கிறாள்.

அதற்கு முன்பும் நல்ல சாப்பாடு துணிமணிக்காக, அக்கா, அக்கா என்று அந்தத் தேவகிக்கு ஊழியம் பார்த்திருக்கிறாள்.



அது மட்டுமின்றி, தேவகிக்குத் திருமணமான பின்னர், அவள் பெற்றதுகளுக்கும் இன்றுவரை ஆயா வேலை பார்த்துவிட்டு, ஒன்றுமில்லாமல் சும்மா போக முடியாது!

இப்போதைக்கு அவள் கையில் ஒரு துருப்புச் சீட்டு, மஞ்சரியின் வடிவில் இருக்கிறது. அது அவளைப் பெற்ற தாயாகவே அவளை எண்ணிக்கொண்டு இருக்கிறது. அந்தத் துருப்பை, அவள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

அவளது நல்ல காலம், தன் கண்டுபிடிப்பை, சுகவனம் மகளிடம் தெரிவிக்கவில்லை. ஒருவேளை, அவருக்கே வெறும் சந்தேகம்தானோ, என்னவோ?

சான்று காட்டினாலும் கூட, சிற்றன்னையைப் பற்றிய எந்தக் குற்றச்சாட்டையும் மஞ்சரி நம்பமாட்டாள் என்றும் எண்ணியிருக்கலாம்!

அல்லது சசாங்கனிடம் மயக்கம் தலைக்கேறி, அவனை மஞ்சரி நிச்சயம் மணப்பாள். அதன்பிறகு மற்றதை அவன் பார்த்துக் கொள்வான் என்றும் சுகவனம் நினைத்திருக்கலாம்.

யோசித்துப் பார்த்தால், அதுதான் எல்லாவற்றுக்கும் ஒத்து வருகிறது!

எனவே, தான் எண்ணியது தொடர்ந்து நடக்க வேண்டும் என்றால், இப்போது, சசாங்கனை உள்ளே வர விடாமல் தடுப்பதுதான் தனது முதல் வேலை என்று, வேதவல்லி முடிவு செய்தாள். அதற்கான அடித்தளத்தைக் கவனத்துடன் திட்டமிடலானாள்.



## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 7

எப்போதுமே, மஞ்சரிக்கு மற்றவர்களிடம் பாசம் அதிகம் உண்டு.

ரஞ்சனியும் அன்பானவள்தான் என்றாலும், அவளுக்குத் தன் விருப்பங்கள்தான் முக்கியம். இப்போதைக்கு வெளிநாட்டு மேல் படிப்புதான் அவளது குறிக்கோள். அதற்கு உதவ மறுத்தால் மட்டுமே. யாருடனுடம் வேறுபாடு வரும். மற்றபடி சொத்துரிமை, அக்காவுக்கு என்பது பற்றி, அவள் அலட்டிக் கொள்ள மாட்டாள். தமக்கை தனக்கென்று ஒதுக்கமாட்டாள் என்பதையும் அறிந்தவள்.

அவளுடைய தந்தை அறிந்திருப்பதைப் போலவே!

வேதவல்லியின் வயிற்றில் பிறந்த சின்னவள் அபாஞ்சியோ, எப்போதும் அக்காச் செல்லம். அவளும் அக்கா அக்கா என்று மஞ்சரியைத்தான் ஒட்டிக் கொண்டு அலைவாள்.

அவள் பிறந்ததில் இருந்தே, வேதவல்லியும் அதை ஊக்குவித்தே வந்திருக்கிறாள். என்றேனும் பிறந்த வயிறு வேறு என்ற எண்ணம், தமப்பன், தமக்கைகள் யாருக்கும் வந்துவிடக் கூடாது என்ற நோக்கத்தில் நடத்தியது. அது பலித்தும் இருந்தது.

என்ன, அபிக்கு அம்மாவை விட, அக்காதான் வேண்டும்.

ஆனால், வேதவல்லிக்கு அதில் பிரச்சினை எதுவும் இல்லை. பொதுவாக யாரிடமும் உண்மையான பாசம் வைத்துப் பழக்கம் இல்லை என்பதால், மகள் தன்னிடம் வந்து கொஞ்சவில்லையே என்றெல்லாம் அவள் வருந்தியதில்லை.

மூவரில் ஒருத்தி என்ற ஆகிவிட்டது. அது போதும் என்ற திருப்திதான்.

இந்த மூவரில் வேதவல்லி விரும்பியது போலக் குறுக்குக்கேள்வி கேளாமல், சொன்ன பேச்சுக்கு வளையக் கூடியவள், மஞ்சரி மட்டுமே. அவளையும் முட்டாள் என்று கூற முடியாது. ஆனால், பாசத்தால் அவளது கண்களை மூடிவிட முடியும்.

எனவே, வேதவல்லி மஞ்சரியிடம் தன் வேலைகளைத் தொடங்கினாள்.

சுகவனத்தின் இறப்புக்கான காரணத்தையே முதலாக வைத்துப் பெண்ணிடம் பேசினாள்.

"அவருக்கு இதயம் பலவீனமாக இருப்பது தெரிந்ததுமே, தொழில் நடத்துவது பற்றி, அடிக்கடி என்னிடம் விவரமாகப் பேசுவார் உன் படிப்பு முடிந்த பிற்பாடு, உன்னை எம்டியாகப் போட்டு, நம் இருவரிடமும் தொழிலை ஒப்படைத்து, அவர் ஓய்வாக இருந்து மேல்பார்வை பார்ப்பதாக இருந்தார். ஆனால் கொஞ்சமும் எதிர்பாராத விதமாக, உன் படிப்பு முடியுமுன்பே, இப்படியாகி விட்டதே..." என்று அழுதாள்.

"ஆமாம் சித்தி. இப்போது என்ன செய்வது என்றே, எனக்குப் புரியவில்லை" என்று மகளும் கண் கலங்கினாள்.

"அழாதே, கண்ணு!" என்று பரிவுடன் மஞ்சரியின் கண்களைத் துடைத்துவிட்டாள் வேதவல்லி. "குருவி தலையில் பனங்காயை வைத்த மாதிரி, படித்துக் கொண்டிருக்கும் பெண்ணைப் பிடித்துத்



தொழிலைப் பார் என்றால், எப்படி முடியும்? தொழிற்சாலையை நடத்துவது பற்றி பாவம், உனக்கு ஏபிசிடி கூடத் தெரியாதே! விடுடாம்மா! கடைசிக் காலத்தில், மரண பயத்தில் முதலில் திட்டமிட்டதை மறந்து, அப்பா என்னென்னவோ எழுதி வைத்து விட்டார் பரவாயில்லை! சித்தி இருக்கிறேனில்லையா? கவலைப்படாமல், நீ படித்து முடிம்மா. உனக்கு ஒரு கவலையும் இல்லாமல், தொழிலை நான் பார்த்துக் கொள்கிறேன்" என்று மஞ்சரியைத் தன் தோள் மேல் சாய்த்து அணைத்துத் தேற்றினாள்.

தேற்றும்போதே "அந்த அருள்வாக்குக்காரன் கூட, அப்படித்தான் சொன்னான். பெரிய படிப்பு படிக்க வேண்டிய பெண். சில ஆண்டுகளுக்கே, உனக்கு திருமணப் பேச்சை எடுப்பதே கூடாது. மீறி, அந்தப் பேச்சு பேசினால், பேசுகிறவரையே அடித்துவிடும் என்றானே, பாவி! அவன் சொன்னதைப் போலவே ஆகிவிட்டதே! சொல்லச் சொல்லக் கேளாமல், மகளுக்குக் கல்யாணம் என்று மேலே திட்டம் போட்டு, இப்படி உயிரையே விட்டுவிட்டாரே!" என்று தானும் சேர்ந்து அழுதாள் வேதவல்லி.

பொதுவாக இந்த மாதிரி அருள்வாக்கு, சாமி வருவது பேய்பிசாசு போன்ற விஷயங்களில் மஞ்சரிக்கு நம்பிக்கை கிடையாது. என்றாலும், சங்கிலிப் போல தொடர்ந்து நடந்த சம்பவங்களை நினைக்கையில், தனக்குத் திருமணம் செய்ய விரும்பியதால்தான் தந்தை இறந்தாரோ என்று தோன்றிவிட, மறுபடியும் அவளுக்கு அழுகை பொங்கிக்கொண்டு வந்தது.

மடியில் சாத்தி, சற்று நேரம், அவளை அழவிட்டுவிட்டு மெல்லத் தட்டிக் கொடுத்து சமாதானம் செய்தாள் பெரியவள்.

மடியில் கிடந்தவளின் முதுகை மெல்ல வருடியபடியே "என்னவோ, அந்த ஆள், சசாங்கனும் நம் குடும்பத்துக்கு ஆகாதவன் என்று எனக்குத் தோன்றுகிறது, கண்ணம்மா. அவன் ராசியே சரியில்லை. அல்லது, அவன் இந்த வீட்டுக்குள் காலடி எடுத்து வைத்து இருபத்து நாலு மணி நேரத்துக்குள் இப்படி ஆகுமா? இருந்திருந்து, அவனிடம் போய் அனுமதி கேள், அது, இது என்று, அவனுக்குக் கொம்பு சீவி விட்டுவிட்டாரே! அவன் வேறு என்ன ஆட்டம் ஆடப் போகிறானோ, தெரியவில்லையே?" என்று மெல்லிய குரலில் கூறி வருத்தப்பட்டாள்.

புருவம் சுருக்கி யோசித்தபடி, மஞ்சரி எழுந்து அமர்ந்தாள்.

மறுப்பாகத் தலையசைத்து "அவரால் ஒன்றும் செய்ய முடியாது, சித்தி. நாம் ஒன்றும் தொழிலை விற்கப் போவதில்லையே. எப்போதும் போல, லாபகரமாகத் தொழிலை நடத்தப் போகிறோம் என்பதால், கடன், ஒத்தி என்றும் எதுவும் தேவையுமில்லை. அந்த மாதிரி எதுவும் பிரச்சினை என்றால்தானே, அந்த சசாங்கன் இங்கே மூக்கை நீட்ட முடியும்? அந்த ஆளை விட்டுத் தள்ளுங்கள், சித்தி. ஆனால் ஒரு விஷயம் சித்தி. நீங்கள் தொழிற்சாலையை நடத்தும்போது, ரஞ்சியின் வெளிநாட்டுப் படிப்புக்குத் தனியாக பணம் சேர்த்துக்கொண்டே வாருங்கள். இல்லாவிட்டால், அவளால் தாங்க முடியாது! இப்போது எதையும் காட்டியும் நம்மால் கடன் வாங்க முடியாது என்பதால், தொழிற்சாலை வருமானத்தில் மட்டும்தான், அவளுக்கு நாம் சேர்க்க முடியும். அதை மட்டும் மறக்கவே மறக்காதீர்கள்!"என்று நினைவூட்டினாள்.

ஆக. தொழிற்சாலையை நடத்தப் போவது, இந்த வேதவல்லிதான்! இன்னோரன்ன வார்த்தைகளால் மஞ்சரி, அதை ஒத்துக் கொண்டு விட்டாள்!

இந்தப் பெண், இவ்வளவு முட்டாளாக இருக்கிறாளே!

இலகுவாகக் கிட்டிவிட்ட வெற்றி, வேதவல்லியை உற்சாகத்தில் ஆழ்த்தியது. மகிழ்ச்சியில் உரக்க சிரிக்க வேண்டும் போல இருந்ததை, அவள் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டாள்.

கஷ்டப்பட்டு முகத்தைச் சோகமாகவே வைத்துக்கொண்டு "ஆனாலும், அந்தப் பையன் சசாங்கன், ஏற்கனவே பணத்துக்காக நிச்சயமான திருமணத்தை முறித்தவன். எளிதாக ஒரு தொழிற்சாலையையே கைக்குள் கொண்டுவர முடியுமானால், அதை லேசில் விட்டுவிடுவானா? அதற்கு ஏதாவது ஒரு வழி தேடத்தானே, செய்வான்? எனக்கு யோசனையாகத்தான் இருக்கிறது?" என்று பெண்ணை நன்றாகச் சீண்டிவிட்டாள்.

இனி அவன் என்ன சொன்னாலும், இவளுக்கு எதிர்க்கத்தான் தோன்றும்.

அப்போதும் மஞ்சரியிடம் முழு நம்பிக்கை வராமல், சசாங்கனிடம் முதலில் வேதவல்லியே பேச விரும்பினாள்.

வேதவல்லி அறிந்த அளவில், சசாங்கன் நல்லவன் அல்ல.

அவளுடைய விழுப்புரத் தோழி மூலமாகத் தெரிந்துகொண்ட அவனது கதை, அவனைக் கொஞ்சமும் உயர்த்தி காட்டவில்லை.



கூடவே, சகவனத்தின் தொழிலை நடத்தி, அதிலிருந்து எப்படி சுரண்டுவது என்று, இன்னும் அவளுக்குச் சரியான தெளிவில்லை. அலுவலகம் போய், அங்கே இருக்கும் ஆட்களைக் கொண்டு தொழிலை நடத்தும்போதுதான், அது பற்றித் திட்டமிடவே இயலும். அப்போதும், மஞ்சரி எப்போது மனம் மாறுவாளோ, எப்போது அவளும் உள்ளே வந்து நிற்பாளோ என்று கவலைப்பட்டுக் கொண்டேதானே இருக்க வேண்டும்.?

படிப்பைக் காரணம் காட்டி விலக்கி வைத்தாலும், அதுவும் ஒரு நாள் முடிந்துதானே போகும்? அந்த ஒரு நாள், அவள் தொழிற்சாலைக்குள் காலடி எடுத்து வைப்பாளே! அன்றைக்கு என்ன செய்வது?

அதைவிட, பணத்தாசை கொண்டவன் என்று பேரெடுத்துவிட்ட, சசாங்கனுடன் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டு, மொத்தமாக ஒரு பெரிய தொகையை அடித்துவிட்டால்?

அப்படிச் சில கோடிகள் கைக்கு வந்துவிட்டால், மஞ்சரியோ, அவளுடைய தங்கையோ, அருமைச் சிற்றன்னையைப் பற்றி என்ன நினைத்தால், அவளுக்கென்ன? சின்னதை மட்டும் கையில் பிடித்துக் கொண்டு, கிளம்பிவிட வேண்டியதுதான்.

அது, அக்கா, அக்கா என்று ஞைஞை பண்ணினால், அதையும் விட்டுவிடலாம். அதன் செலவும் மிச்சம்! எப்படியும் மஞ்சரி தங்கையை ஒதுக்க மாட்டாள்!

இந்த எண்ணத்தில்தான், சசாங்கனைக் குடும்பத்தில் முதல் ஆளாக அவள் தனியே சந்திக்க முடிவு செய்தது.

"எந்த அளவுக்கு, சசாங்களிடம் நாம் கட்டுப்பட்டிருக்கிறோம் என்று தெளிவாகத் தெரிந்து கொள்ள வேண்டும், செல்லம்" என்ற சொல்லி உயில் பற்றி சற்று விளக்கம் தேவைப்படுவதால் வீட்டுக்கு வருமாறு மஞ்சரியையே மெயில் அனுப்பச் செய்தாள்.

மஞ்சரி தயங்கியபோது, "நான்தானே பேசப் போகிறேன்? நீ அந்தப் பக்கமே வர வேண்டாம். வீட்டிலேயே இல்லாமல் கல்லூரிக்குப் போய்விடு. அவனிடம், நான் கறாராகக் கேட்டு தெரிந்து கொள்கிறேன். முடிந்தால், ஒரு தொகை தருகிறேன் என்று ஆசை காட்டி, இந்த குடும்பத்துக்குள்ளோ தொழிலுக்குள்ளோ வர விருப்பம் இல்லை. அதனால், உயிலில் என் பெயர் வரும் ஷரத்தை நான் ஏற்கவில்லை என்று எழுதித் தருமாறு கேட்கலாம் என்று

இருக்கிறேன். அப்படி அவன் தந்துவிட்டால், ஒரு பெரிய தொல்லை ஒழியும் அல்லவா, கண்ணு? அதற்காகத்தான்" என்று காரணம் சொன்னாள்.

அப்போதும் அவள் யோசிக்கவும், "இப்போதும் நாம் ரஞ்சிக்குத் தேவைப்பட்ட பணம் சேர்க்க முடியாது போனாலும், அதற்காக இவன் காலைப் பிடித்துத் தொங்க வேண்டியிராதே!" என்று வேதவல்லி சொன்ன காரணம் சரியாகத் தோன்றவே, மஞ்சரியும் சிற்றன்னை சொன்னதைச் செய்தாள்.

செய்தாலும் தன் சந்தேகத்தை தெரிவித்தாள் "ஆனாலும், சசாங்கன் இந்தத் திட்டத்துக்கு ஒத்துக் கொள்வாரா, சித்தி?" என்று கேட்டாள்.

"கட்டாயம் ஒத்துக் கொள்வான், கண்ணம்மா நீயே, அவனை முதலில் பார்த்ததை எண்ணிப்பார்! அதுபோல, எத்தனை பேருக்கு வாங்கிக் கொடுப்பானோ? நகைகள் கூடப் பரிசளிப்பானாயிருக்கும்! இவன்களுக்கெல்லாம் எவ்வளவு வந்தாலும் போதாது. பணமுடை நிரந்தரமாக இருக்கும். அதனால் உடனே ஒத்துக் கொள்வான், பார்" என்று உறுதியாக கூறினாள் வேதவல்லி.

சசாங்கனை வரச் சொன்ன நேரத்தையும், வேதவல்லி, மிகுந்த கவனத்துடனேயே தெரிவு செய்திருந்தாள்.

பெண்களைக் கல்லூரிக்கும் பள்ளிக்கும் அனுப்பிவிட்டு, கொஞ்சம் மூக்கை நுழைக்கக் கூடிய பணியாட்களையும் ஏதோ வேலை சொல்லி வெளியே வேலை சொல்லித் துரத்திவிட்டுக் காத்திருந்தாள், சொன்ன நேரத்துக்குச் சரியாக சசாங்கன் வந்து சேர்ந்தான்.

மஞ்சரிக்காக அவனது விழிகள் அலைவதை ஓரப் பார்வையால் கவனித்த வேதவல்லிக்கு உள்ளூரச் சிரிப்பு வந்தது.

ஆமாம், உனக்கு சிவப்பு கம்பளம் விரித்து, பூத்தூவி வரவேற்கப் பெண் காத்திருப்பாள் என்று நினைத்தாயாக்கும் என்று எக்களிப்புடன் அவள் நினைக்கும்போதே, அவனது பார்வையில் கடினம் கூடிவிட "எதற்காக அழைத்தீர்கள்?" என்று நிதானித்த குரலில் கேட்டான் சசாங்கன்.

அதாவது மஞ்சரி பெயரைப் பயன்படுத்திக் கூப்பிட்டது அவள்தான் என்று புரிந்து கொண்டானாம்!

அவளும் சுற்றி வளைக்கவில்லை, தண்ணீர் குடிக்கிறாயா என்று



கூடக் கேளாமல், நேராக விஷயத்துக்கு வந்தாள்.

"இதோ பாரப்பா, இது நமக்குள்ளே மட்டுமான ஒரு டீல் நான் பதினைந்து ஆண்டுகளாக இந்த வீட்டுக்காக உழைத்திருக்கிறேன். பழைய உயிலை மாற்றி, எனக்கு எழுதி வைப்பதாக இருந்தார். ஆனால் அதைச் செய்து முடிக்குமுன், என் கணவர் இறந்துவிட்டார். இப்போது நீ எனக்கு உதவி செய்தால், அது உனக்கும் லாபமாக இருக்க வழி சொல்லுகிறேன்" என்றாள்.

"எப்படி?"

"தலைவர் போய்விட்டார், நிறுவனத்தை ஒழுங்காக நடத்த ஆளில்லை என்று விற்பதற்கு அனுமதி கொடு. விற்கும் தொகையில் பாதி எனக்கு. உனக்கும் ஒரு பெரிய தொகையை எடுத்துக் கொண்டு, மீதியை பெண்களிடம் கொடு! அப்படித்தான் என்று நான் அடித்துச் சொன்னால், மஞ்சரி கேள்வி கேட்காமல், ஒத்துக் கொள்வாள். அவ்வளவுதான். விஷயம் முடிந்துபோகும் என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டாள் வேதவல்லி.

முகத்தில் மிகுந்த அருவருப்புடன் அவளைப் பார்த்தான் சசாங்கன் "நீயெல்லாம் சுகவனம் சாருக்கு மனைவி! சே! இப்படி பேச, உனக்கு வெட்கமாயில்லை? ஆனால் இதுபோல நம்பிக்கை மோசடிக்கு கூட்டு போகிற ஆள், நானல்ல. முதலில் அதைத் தெரிந்துகொள்!" என்றான் கடுமையான குரலில், ஏக வசனம் வேறு!

"ஓஹோ! மஞ்சரியை மணந்து விள்ளாமல் விரியாமல் எல்லாவற்றையும் நீயே அடிக்கலாம் என்று பார்க்கிறாயா? நடக்கவே நடக்காது. ஒரு நாளும் அப்படி நடக்க விடமாட்டேன். தெரிந்துகொள்! அத்தோடு நீ எப்படிப்பட்டவன் என்றும் எனக்குத் தெரியும்ப்பா! அதிகப் பணம் கேட்டு ஒரு திருமணத்தையே நிறுத்தினாயே! அந்தக் கல்யாண அழைப்புப் பத்திரிகையைக் கூட நான், பார்த்திருக்கிறேன். அப்படிப்பட்ட பேராசைக்காரன், இப்போது ஏதோ சாது சாமியார் போலப் பேசாதே! சொல்லு, கடைசியாக என்ன கேட்கிறாய்? முப்பது சதவீதம் உனக்கு சரிதானா?" என்று பேரம் பேச முன்வந்தாள் வேதவல்லி.

ஆனால், அவளை மதித்து ஒரு பதில் சொல்லக் கூட, அவன் தயாரில்லை.

வேதவல்லியை வெறுப்பாகப் பார்த்துவிட்டு, திரும்பி நடக்கலானான்.

"என்ன? பதில் சொல்லாமல் போகிறாய்? ஓஹோ, மஞ்சரியையே கணக்குப் பண்ணி விடலாம், மொத்தமாக கிடைக்கும் என்ற எண்ணமா? என்னை மீறி, மஞ்சு ஒருநாளும் உன்னை மணக்க மாட்டாள். அதேபோல, தங்கைகளுக்கு உரிய பங்கைக் கொடுக்காமலும் விடமாட்டாள். உனக்கு எவ்வளவு குறையும் என்று பார்த்தாயா?"

ஆத்திரத்துடன் திரும்பி நின்று சசாங்கன் அவளை வெறித்தான். பிறகும், ஒன்றும் பேசாமலேயே வெளியேறிப் போய்விட்டான்.

அவனது பார்வையில் இருந்த வெறுப்பு அவளை வாய் மூட வைத்தது! ஆனால் அவளது மூளையை வேகமாக வேலை செய்ய வைத்தது. அந்த மூளை மஞ்சரியின் மனதில், சசாங்கன் மீது வெறுப்பை வளரச் செய்தது!

கிட்டத்தட்ட நடந்தது முழுவதையுமே, உல்டா பண்ணி, மஞ்சரியிடம் தெரிவித்தாள்.

"அந்த சசாங்கன் பெரிய திட்டம் போட்டிருக்கிறான் மஞ்சம்மா. நமக்கு ஒரு டீல் போட்டு, தொழிற்சாலையை விற்று, பேருக்கு கொஞ்சத்தைப் பெண்களுக்குக் கொடுத்து, மற்றதைப் பங்கு போட்டுக் கொள்ளலாம் என்று இந்த வீட்டுக்கு வந்து, என்னிடம். என்...னிடமே கேட்கிறான் கண்ணு! வேறு பேசவே விடாமல், வந்ததுமே கேட்கிறான்! பாவி! இதே நினைப்பாக இருந்திருப்பான் போல! மனிதர்கள் எவ்வளவு மோசமாக இருக்கிறார்கள், பார்!" என்று விழிகளை விரித்துக் கதை சொன்னாள்.

உண்மைதான், மனிதர்கள், அதிலும் சசாங்கன் இவ்வளவு மோசமாக இருந்திருக்க வேண்டியதில்லை! ஆனால், இருந்துவிட்டானே என்று வருந்தும்போதே, மஞ்சரிக்கு ஏதோ உறுத்தியது.

அவன் ஒன்றும், பணத்துக்காக அவசரப்பட்டுத் தானாக வரவில்லையே! அவள் ஈமெயில் அனுப்பிய பிறகுதானே வந்தான்?

அவள் அதைச் சொன்னபோது "ஆ ஆமாமில்லை..." என்று யோசனையோடு இழுத்த வேதவல்லி, உடனே காரணத்தைக் கண்டுபிடித்தாள் "தங்கம், உனக்கு புரியவில்லையா? அவனுக்கு தானாக வரப் பயம்! உள்ளத்தில் கள்ளம் இருக்கிறதில்லையா? எப்போதடா கூப்பிடுவோம் என்று காத்துக் கிடந்திருக்கிறான்! அவனை அழைப்பதே, நமக்கு ஏதாவது வேலை



நடப்பதற்காகத்தனே, இருக்கும்? வந்து பார்த்தால் நானும் தனியாக இருந்தேனா, பெற்றவளா? மாற்றாந்தாய்தானே என்று எண்ணிக் கேட்டுவிட்டான். உன்னையாவது, கல்லூரிக்குப் போக வேண்டாம் என்று நிறுத்தியிருக்க வேண்டும். தன்னந்தனியே இருக்கையில், திடுமென அவன் அப்படிக் கேட்கவும், எனக்கு ஒரே படபடப்பாகி விட்டது... இன்னும் கூட, முழுசாக, இயல்புக்கு வரவில்லை!"

நெஞ்சின் மேல் கை வைத்து, வேதவல்லி இப்படிச் சொல்லவும் தந்தையின் நினைவில், மஞ்சரி சட்டென பயந்து போனாள் "என்னது? படபடப்பா? என்ன சித்தி, குண்டைத் தூக்கிப் போடுகிறீர்கள்? வாருங்கள், முதலில் டாக்டரிடம் போவோம்?" என்று பரபரத்தாள்.

படபடப்பு என்ற ஒரு வார்த்தை மஞ்சரிக்கு மற்ற எல்லாமே மறந்து விட்டதே! சசாங்கன் உட்பட.

திருப்தியோடு முறுவலித்து, "போடீ, பைத்தியம்! ஒரு சின்ன படபடப்புக்குப் போய், டாக்டரா? சற்று நேரம் அமைதியாக உட்கார்ந்திருந்தாலே சரியாகிப் போகும்! முக்கியமாக அந்த சசாங்கன் இந்தப் பக்கம் வர மாட்டான் என்று ஆனாலே, எனக்கு ஒரு படபடப்பும் வராது!" என்று அவன் மீது மஞ்சரிக்கு, இன்னும் அதிகமாக வெறுப்பேற்றி வைத்தாள்.

ஏனெனில், சசாங்கனின் பார்வை, மஞ்சரியைத் தேடி அலைந்ததை, வேதவல்லி கண்டுவிட்டிருந்தாள்.

மஞ்சரியும் அழகான பெண்தானே? அப்படியே தேவகியின் அச்சு! அதனாலேயும் அந்தப் பாவி மனிதருக்கு மூத்த மகள் மீது, தனிப் பிரியம்! எப்போதுமே, வேதவல்லிக்கு எரிச்சலூட்டும் விஷயம் இது! என்றாலும் மஞ்சரி அழகி என்பதை ஒத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்!

சசாங்கனுக்குப் பணம், பெண் இரண்டு ஆசைகளுமே உண்டு என்பது, வேதவல்லியின் கணிப்பு! அதிலும் பணத்துக்காக திருமணத்தையே நிறுத்தியதில் இருந்து, பணத்தாசைதான் மிக அதிகம் என்பது, அவளது அனுமானம்.

அதனால்தான், அவன் மஞ்சரியைத் தேடியதை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல், அவள் பணக்கணக்கு பேசியதே.

ஆனால், அவளை மட்டமாகப் பேசிவிட்டு, அவன் சென்ற விதத்தில் இருந்து, இந்த இடத்தில் அவனுக்குப் பெண்ணாசைதான்

அதிகமாக இருப்பதைப் புரிந்து கொண்டாள்.

ஏதோ ஒரு வகையில், அவன் மஞ்சரியை சந்தித்துத் தன் வலைக்குள் இழுக்க முயற்சிப்பான் என்பது, வேதவல்லிக்கு, ரொம்பவும் நிச்சயம்! அவளை மணந்தால், பணம் பெண் இரண்டுமே கிடைக்குமே!

எனவே அவன் மஞ்சரியை எப்படி விடுவான்? விடவே மாட்டான்!

அவன் உள்ளே வந்துவிட்டால், அப்புறம், வேதவல்லிக்கு தந்தனாதான்!

எனவேதான், அவர்களது இணைப்பைத் தடுத்தே தீருவது என்று வேதவல்லி தீர்மானித்தாள்.

வேதவல்லி நினைத்ததில் ஒரு பகுதி சரியே. மஞ்சரியைச் சந்தித்துப் பேசுவதில், சசாங்கன் உறுதியாக இருந்தான்.

சுகவனத்தின் வேண்டுகோள், சொந்த உறுதிமொழி என்று சில வகையில், அவனுக்கும் பலமான கட்டுகள் இருந்தன.

ஆனாலும் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையும் இருக்கவே, அவர்களுடைய வக்கீலின் மூலம் அவளைத் தனியாகச் சந்தித்து, அவளுடைய தந்தையின் விருப்பம் பற்றிப் பேசினான்.

சரியாக என்று, சித்தி சொன்னது போலவே கேட்டுவிட்டானே என்று மனம் கசந்தது, மஞ்சரிக்கு. ஆனால் இதை என்ன மாதிரி எதிர்கொள்வது என்று சிற்றன்னையின் உதவியோடு, ஏற்கனவே தனக்குள் ஒரு முடிவும் செய்து வைத்திருந்தாள்.

அதன்படி, "அப்பா ஒருதரம் அதுபோல ஏதோ சொன்னார்தான். ஆனால், நான் அதைப் பற்றி பெரிதாக எதுவும் நினைக்கவில்லை" என்றாள் எங்கோ பார்த்தபடி.

"ஏன்?" என்று காரணம் கேட்டான் அவன்.

ஏன்? ஏன் என்றால், இதற்கு என்ன சொல்வது? நினைக்கவில்லை என்றால், பேசாமல் விட்டுவிடாமல், இது என்ன கேள்வி? மூளை இருந்த இடம் காலியாகிப் போனது போல, சொல்வதறியாமல் சற்றுத் திணறியவளுக்கு, சொல்ல வேண்டியது என்ன என்று, ஒருவாறு நினைவு வந்தது. "வந்து, படிப்பு முடியவில்லை. இன்னும் மேல்படிப்பு முடிக்க வேண்டும்" என்று திக்கித் திணறி சொல்லி முடித்தாள்.

அப்பாடி என்று மூச்சு விடும்போதே "கல்யாணம் செய்துகொண்டும் படிக்கலாமே!" என்று மென் குரலில் கூறி,



இனிமையாகப் புன்னகை செய்தான் அவன்.

மறுபடியும் மூளை மரத்து, பேச்சிழந்து, மஞ்சரி மலங்க விழித்தாள்.



## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 8

செதுக்கினாற்போன்ற உதடுகள் லேசாகப் பிரிய, வரிசையான வெண்பற்கள் பளீரிட, சசாங்கனின் இன்முறுவல் மஞ்சரியைத் திக்பிரமிக்க வைத்தது.

சும்மாவே, அவனுக்கு பதில் சொல்ல முடியாமல் திக்கித் திணறிய மூளை, இப்போது அடியோடு செயலிழந்தது.

அவன் சிரித்து, அவள் பார்த்ததே இல்லை என்று சொல்ல முடியாது. முதல் முறை வீட்டுக்கு வந்தபோது, தந்தையின் அந்தக் கடைசி நாளன்றும் கலகலப்பாகப் பேசிச் சிரித்தான்தான். அது எல்லோருமாக உரையாடியபோது, பேச்சோடு பேச்சாக நடந்தது.

ஆனால், இது அப்படியல்ல. அவளுக்காக மட்டுமான, தனிப்பட்ட புன்னகை!

பிரமிப்புடன் பார்க்கையிலேயே, மெல்ல விரிந்த முறுவலில் அவளுக்கு சற்று சுரணை வந்தது. மூளையும் சுய உணர்வு பெற்று யோசிக்கத் தொடங்கியது.

என்னமாகச் சிரிக்கிறான்! இப்படிச் சிரித்துதான் எல்லோரையும் ஏமாற்றுவானோ?

இந்த மாதிரி ஆட்களுக்கு மட்டும், ஆயிரம் தப்பு செய்தாலும் எதிராளியைப் பிரமிக்க வைக்கும்படி, அழகாகச் சிரிக்கவும் முடியும் போல, அதிலும் ஒரு பெண்ணை! இதே நோக்கமாக, இந்தச் சிரிப்பையும் பயின்று வைத்திருப்பார்களோ என்று எண்ணம் ஓடியது.

ஆனால், இப்போது அவனுக்கு பதில் என்ன சொல்வது? இது பற்றி கூட சித்தி ஏதோ எச்சரித்தாளே! என்ன சொன்னாள்? மஞ்சரி அவசரமாக யோசித்தாள்.

சிரித்து, உன்னை மயக்கி... சித்தியின் சொற்கள் மெதுவாக நினைவு வர, மஞ்சரி மெல்ல நிமிர்ந்தாள்.

அவன் சொல்லிக் கொண்டிருந்தான். "உன் அப்பாவுக்கு இதில் ரொம்ப ஆசை..."

தெரியும், தெரியும்! தந்தை ஆசைப்பட்டதும், இவனைப் பற்றிய

உண்மை தெரிந்ததும், அந்த அதிர்ச்சியில் உயிரையே விட்டதும், சித்தி எவ்வளவு தெளிவாக எடுத்துச் சொன்னாள்!

மனது திடப்பட, சசாங்கனை நேராக நிமிர்ந்து பார்த்தாள் "போதும், நிறுத்துங்கள். உங்களுக்கு ஒன்றை நாலுக்காய் சொன்னால் புரியாதா? ஒருபோதும் நான் உங்களை திருமணம் செய்து கொள்ள மாட்டேன். மாட்டவே மாட்டேன்! நிச்சயமாக மாட்டேன்!" என்றாள் குரலை உயர்த்தி.

அவளது குரலுக்கு நேர்மாறாக, தன் அமர்ந்த குரலிலேயே மறுபடியும் "ஏன்மா?" என்று கேட்டான் சசாங்கன்.

கத்தி முடித்துவிட்டு மூச்சு வாங்கிக் கொண்டிருந்தவளுக்கு, இந்தக் கேள்வியில் அதை அவன் கேட்ட விதத்தில் கோபம் பொங்கியது.

அவனோடு அதிகம் பேசாதே. அவன் பேச்சில் வல்லவன், பொய் சொல்ல அஞ்சாதவன். எந்தப் பேச்சையும், ஏதாவது சொல்லி தனக்கு சாதகமாக மாற்றி விடுவான். வெறுமனே படிப்பு முடியும்வரை, கல்யாணம் முடியாது என்று அதிலேயே நில் என்று பல முறை எச்சரித்துதான் வேதவல்லி, மஞ்சரியை அனுப்பினாள்.

ஆனால், பொங்கிய சீற்றத்தில் சிற்றன்னையின் அறிவுரைகள் காற்றில் பறந்தன.

அவனை நேரடியாகவே குற்றம் சாட்டிப் பேசினாள் "என்ன, ஏன்? இருந்திருந்து, உங்களைப் போய் ஒருத்தி மணப்பாளா? மீண்டும் ஏன் மாட்டாள் என்று கேளாதீர்கள். ஏனென்றால், உங்களைப் பற்றி, எனக்கு எல்லாம் தெரியும். உங்கள் மகா மட்டமான குணங்கள் எல்லாமே, நன்றாகத் தெரியும். அதெல்லாம் உண்மை என்றும் தெரியும், பணத்தாசை! பெண்ணாசை!" என்றும் என்று அவள் பொரிந்து கொட்டிக் கொண்டிருக்கும்போதே "ஏய்!" என்று சீறி எழுந்துவிட்டான் அவன்.

ஏயா? அடித்தே விடுவானோ என்று, ஒருகணம் கலங்கிப் போனாள் அவள்.

ஆனால் அப்படி ஏதும் நடக்கவில்லை. ஒருகணம் இறுகிப் போய் நின்றவன், உடனே இலகுவாகி "யார், என்ன சொன்னாலும், அப்படியே நம்புவாயா?" என்று அமைதியாகவே கேட்டான்.

சில வினாடிகளுக்குள் முழுதாக மாறுகிறானே! அந்தக் கோபமும், இந்த அமைதியும்!



இரண்டில் ஒன்று கட்டாயமாக நடிப்புதானே?

இன்னும் சொல்லப் போனால், சசாங்கன், அவளது குற்றச்சாட்டுகளுக்கு எந்தப் பதிலும் சொல்லவில்லை. மாறாக, அவளைக் குறை கூறுகிறான்.

அதாவது சித்தி, சொன்னது போல தட்டைத் திருப்புகிறான். அவள் முட்டாள், அதனால் யாரோ சொன்ன பொய்யை நம்பிப் பேசுகிறாளாம்!

"அது என் அப்பா செய்த தப்பு!" என்றாள் சுருக்கென.

"அதாவது?"

"அவர், உங்களை நம்பினாரே! அந்தத் தப்பை நான் செய்ய மாட்டேன். எனவே, ஒருபோதும் நான் உங்களைத் திருமணம் செய்யப் போவதில்லை. இந்த முடிவு மாறாது என்பதால், இன்னொரு தரம், நீங்கள் என்னைச் சந்திக்க வரவே வராதீர்கள்!" என்றாள் அழுத்தம் திருத்தமாக.

ஆனால் "கட்...டாயம் வருவேன்" என்றான் சசாங்கனும் அழுத்தமாகவே.

"அதுவும் உன் அழைப்பின் பேரிலேயே வருவேன். ஆனால், அன்று நிலைமை அடியோடு மாறியிருக்கும். பற்றி நிற்க, உனக்கு ஆதாரமாக ஒன்றும் இராது. ஏனெனில் நீ நம்புகிற ஆள் சரியில்லை. உன் சித்தியாலேயே எல்லாம் அழியப் போகிறது!" என்று அவனும் நேரடியாகவே குற்றம் சாட்டினான்.

மஞ்சரி கொதித்துப் போனாள்.

என்ன தைரியம் இருந்தால், அவளுடைய தாய்க்கு நிகரான சித்தியை கேவலமாகப் பேசுவான்? அவனிடம் அத்தனை தப்புகளை வைத்துக்கொண்டு! இதைத்தான் சைத்தான் வேதம் ஓதுகிறது என்று சொல்வார்கள் போல!

அண்ணாந்து பார்த்து, அதட்டிப் பேச முடியாது.

தானும் எழுந்து நின்று "நான் ஒன்றும் பச்சைக் குழந்தை இல்லை! யாரை நம்புவது என்று எனக்கு நன்றாகத் தெரியும். தெரிந்ததினாலேயே சொல்லுகிறேன். உங்கள் முகத்தில் விழிக்கக் கூட எனக்கு விருப்பம் இல்லை! எங்கள் வீடு, தொழில எதிலும் உங்களை உள்ளே விடவும் போவதில்லை! எங்கள் சித்தியின் தலைமையில், நாங்கள் எவ்வளவோ சிறப்பாக வாழ்ந்து காட்டுவோம்! வெகு நிச்சயமாக!" என்று உறுதியான குரலில் அறிவித்தாள்.

"கிழிப்பீர்கள்!" என்றான் அவன் ஏளனமாக. "தொழில் பற்றிய அரிச்சுவடி கூடத் தெரியாதவள், உன் சிற்றன்னை, கள்ள மனம் வேறு! இப்போது சொல்லுகிறேன், கேட்டுக்கொள்! எந்தத் தொழிலுக்குள் என்னை 'விட மாட்டேன் என்று, இன்று நீ சொல்கிறாயோ, அதே தொழிலை நீயாகவே என்னிடம் கொடுப்பாய். அது தவிர, அப்போது உனக்கு வேறு வழியிராது" என்றான் சூளுரைப்பது போல.

அவனை முறைத்துப் பார்த்துவிட்டு "அதுபோல ஒரு காலம், வரவே போவது இல்லை என்பதால் நீங்கள் காணும் பகல்கனவு ஒருநாளும் பலிக்காது! இதை நீங்களும் தெரிந்து கொள்ளுங்கள்!" என்றாள் அவளும் ஏளனம் விரவிய குரலில்.

"பார்க்கலாம்!" என்றான் அவன் அலட்சியமாக.

தலையை சிலுப்பி "பார்க்கத்தானே, போகிறீர்கள்!" என்றாள் அவள் பதிலுக்கு!

வக்கீல் வீட்டிலிருந்து திரும்பி வந்து மஞ்சரிக்கு ஒரே வேகம், நேராக, வேதவல்லியைத் தேடிச் சென்றாள்.

ரஞ்சனியின் அறையில், அலமாரியுள், துவைத்து மடித்த துணிகளை வைத்துக் கொண்டிருந்தாள் அவள்.

அவளைப் பார்த்ததுமே தொடங்கிவிட்டாள்.

"சித்தி, எப்பாடு பட்டாவது தலை கீழாக நின்றேனும், அப்பாவின் தொழிற்சாலையை, நாம் வெற்றிகரமாக நடத்தியாக வேண்டும், சித்தி! நடத்தி, அந்த சசாங்கனுக்கு காட்ட வேண்டும்! தொழிலைப் பற்றி உங்களுக்கு அரிச்சுவடி கூடத் தெரியாதாம். சொல்கிறான். மட சாம்பிராணி! அப்பா மாதிரி இல்லாமல், அவன் வீட்டில் பெண்களுக்கு, விஷயம் ஒன்றுமே தெரியாமல் முட்டாளாகவே வைத்திருப்பார்கள் போல! அது மாதிரி, நம வீட்டையும் எண்ணி விட்டான்! அப்பா உங்களுக்கு கற்றுத் தந்திருக்கிறார்கள்தானே, சித்தி? எதற்கும் சித்தி, தொழிற்சாலை நிர்வாகி, அப்புறம் ஃபோ... ஃபோர்மன்... தானேசித்தி? போன ஆயுதபூஜையன்று பார்த்தோமே, ஃபோர்மன் என்றுதானே சொன்னார்கள்? அந்த ஆளையும் வரச் சொல்லிப் பேசுங்கள்!சித்தி, எல்லாம்... வந்து, முன்னைவிட வேலை பிரமாதமாக நடக்க வேண்டும் என்று சொல்லுங்கள்... அல்லது, தொழிற்சாலைக்கு நானும் வரட்டுமா? இந்தக் கடைசி செமஸ்டரை வேண்டுமானால், அடுத்த முறை எழுதிக் கொள்கிறேன். இரண்டு



பேரும், சேர்ந்து, வேலை பார்ப்போம்! நாம் ஜெயித்துக் காட்ட வேண்டும், சித்தி!" என்று வேக வேகமாகப் பொரிந்து கொட்டினாள்.

ஆஹா... அந்தப் பாவி சசாங்கன், தன்னாலான மட்டும் ஏதோ பூதம் கிளப்பி விட்டிருக்கிறானே! இதை எப்படி சமாளிக்கலாம் என்று வேதவல்லி யோசிக்கும்போதே, அதே அறையில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்த ரஞ்சனி தலை நிமிர்ந்து, தமக்கையைப் பார்த்தாள்.

"கொஞ்சம் மூச்சு விட்டுக்கொண்டு பேசுக்கா. இப்போது யாரை ஜெயிக்கக் கோதாவில் இறங்கி இருக்கிறாய்? சசாங்கனையா? வாய்ப்பே கிடையாது. நல்லதற்கு சொல்லுகிறேன். கேட்டுக்கொள், பேசாமல் போட்டியிலிருந்து வெற்றிகரமாகப் பின் வாங்கிவிடு, வீணான முயற்சியேனும் மிச்சமாகும்!" என்றாள் கேலியாக.

"ஏய், உன்னை யாருடீ, ஐடியாக் கேட்டது? வாயை மூடிக்கொண்டு, உன் படிப்பை மட்டும் பார்!" என்று தங்கையிடம் சீறினாள் மஞ்சரி.

"படிக்கிற இடத்தில் வந்து, நீ வாய் கிழியக் கத்துவாய்! நான் மட்டும் ஒன்றும் சொல்லக் கூடாதோ? அப்படித்தான் சொல்லுவேன்!" என்று வேண்டும் என்றே ரஞ்சனி கூற "பாருங்கள் சித்தி! முக்கியமான விஷயம் பேசும்போது, சும்மா இடைஞ்சல் பண்ணுகிறாள்?" என்று சிற்றன்னையிடம் புகார் சொன்னாள் மூத்தவள்.

பெரியவளுக்குச் சாதகம் போல "ஷ் ரஞ்சி, அக்காவோடு சண்டை போடாதே" என்று சின்னவளை அதட்டியபோதும், தொடர்ந்து "ஆனால் நீயும்தான் என்ன மஞ்சு இப்படி மூச்சு விடாமலா கத்துவது? அதுவும், அவள் படிப்பையும் கெடுத்துக்கொண்டு, முதலில் கொஞ்சம் மனதை அமைதிப்படுத்திக்கொள். அப்புறமாக இது பற்றிப் பேசலாம்" என்று மஞ்சரியின் பேச்சையும், வேதவல்லி நிறுத்தினாள்.

பெண்ணை அமைதியாக இருக்கச் சொன்னபோதும், அவளுக்கே நெஞ்சுக்குள் பந்தயக் குதிரைதான் ஓடிக்கொண்டிருந்தது. அதை சமனப்படுத்த, அவளுக்கும் அவகாசம் தேவைப்பட்டது.

அந்த சசாங்கன் தன்னால் ஆன மட்டுக்கும், மஞ்சரியை சீண்டி விட்டிருக்கிறான்.

இப்போது வேலையை நானும் பார்க்கிறேன் என்று மஞ்சரியும் தொழிற்சாலைக்குள் வந்தவிட்டால், அதனால் எத்தனை சங்கடங்கள் நேரும்!

முதல் பிரச்சினை, அவளும் கூட இருக்கும்போது பணம் ஒரு பைசாக் கூட சுருட்ட முடியாது!

அடுத்த கஷ்டம், நிஜமாகவே சித்திக்குத் தொழிலில் அ, ஆ கூடத் தெரியாது என்று மஞ்சரிக்குத் தெரிந்து போகும்! அதாவது, தொழில் பற்றி அரிச்சுவடி கூடத் தெரியாது என்று சசாங்கன் சொன்னது மெய்யாகும்!

வெறுமனே தொழில் தெரியாது என்பதோடு, அது முடிவுக்கு வராது.

இதிலே பொய் சொன்ன வேதவல்லி, இன்னும் எதேதில் ஏமாற்றினாளோ என்று ஆராயத் தொடங்கினால், பதினைந்து ஆண்டுகால உழைப்பு, ஒன்றுமில்லாமல் போய்விடும்!

இப்போது முதல் வேலை, மஞ்சரி, தொழிற்சாலைக்கு வராமல் தடுப்பது!

எப்படி?

வேக வேகமாகச் சிந்தித்து, ஒரு வழியைக் கண்டுபிடித்தாள் வேதவல்லி.

ரஞ்சனியின் அறைக்குள் இருந்து பேசி, அவளது படிப்பைக் கெடுக்கக் கூடாது என்று மஞ்சரியை வெளியே அழைத்துச் சென்றாள்.

முக்கியமான காரணம், ரஞ்சனியின் பார்வை சில சமயங்களில் ரொம்பக் கூர்மையாக இருக்கும். பொதுவாக அடுத்தவர் விஷயங்களில் அதிக அக்கறை கிடையாது என்றாலும், ஏதாவது சொன்னாள் என்றால், மறுக்க இயலாததாக இருக்கும். மஞ்சரியைப் போல அவளை, விருப்பத்துக்கு வளைக்க முடியாது. எனவே, எப்போதும் அவள் விஷயத்தில் வேதவல்லி சற்று ஒதுங்கிப் போய்விடுவது வழக்கம்.

இப்போதும், ரஞ்சனி சரியாகத்தானே சொன்னாள்! சசாங்கனிடம் மஞ்சரி தோற்கப் போவது நிச்சயமான உண்மை!

ஆனால் வேதவல்லி முடிந்தவரை பிராய்ந்த பிறகு, அவன் காலில் விழுவதோ, கையைப் பிடிப்பதோ, எப்படியோ போகட்டும். அது நடக்கும்வரை, சசாங்கனைத் தூர நிறுத்துவதுதான் முக்கியம்!

எனவே மஞ்சரியைத் தனியே அழைத்து சென்று ஓதலானாள்.

மஞ்சரி, இப்போது தொழிலை கவனிக்க வந்தால், அது சசாங்கனுக்கு இரட்டை வெற்றியாகும் என்றாள்.



அது எப்படி என்றும் விளக்கினாள்.

ஒன்று சிற்றன்னையை நம்பாமல், அவளைக் கண்காணிப்பதற்காகக் கூட செல்வது போல ஆகும், அப்படித்தான் அவன் பரப்புவான்.

"அப்படி இல்லை என்று உங்களுக்கும் தெரியும் எனக்கும் தெரியும். பிறகென்ன, சித்தி?" என்று கேட்டாள் மஞ்சரி.

தானும் சேர்ந்து தொழிலைப் பார்ப்பது என்று, இவள் முடிவே செய்துவிட்டாளா என்று வேதவல்லி ஒரு கணம் கலங்கினாள். விடக்கூடாது என்ற உறுதியோடு மகளிடம் பேசினாள்.

"கரெக்ட்! நீ சொல்வது போல, உனக்கும் எனக்கும் மட்டும்தானேம்மா, தெரியும்? அப்படியில்லை, தாய்க்கும் மகளுக்கும் தகராறு, மாற்றாந்தாய் என்பதால், நம்பாமல் கூடவே வருகிறாள் என்று அவன் பரப்பினால், நம் அருமையான குடும்பத்துக்கு எவ்வளவு கேவலம்! கறுப்பான வாந்தி, காக்காய் வாந்தி ஆனது போல, நம் சின்டைப் பிடித்துக் கொண்டு நிற்பதாக அல்லவா, வதந்தி பரவும்! அது தொழிலுக்கு எவ்வளவு கெடுதல் தெரியுமா? தலைமைக்குள்ளேயே தகராறா என்று உன் அப்பா சேர்த்து வைத்த நல்ல பெயர் எல்லாம் கெட்டு, வாடிக்கையாளர்கள் எல்லாம், துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று பறந்து விடுவார்கள். வாடிக்கையாளர்கள் இல்லாமல், தொழில் எப்படி நடக்கும்? அவன் விரும்புவது போலத் தோற்றுப் போவோம், கண்ணு! அப்புறம் வேறு வழியில்லாமல், அவனிடம்தான் போய் நிற்க நேரும்!"

"ஐயோ சித்தி!"

"அது மட்டுமா? உன் படிப்பும் கெட்டுவிடும். பெரிய படிப்பு படித்து, ஒரு முதுநிலைப் பட்டத்தோடு நீ தொழிலுக்குள் வந்தாய் என்றால், படித்த பெண் தொழிலதிபர்களுக்கு, அரசாங்க உதவிகளே நிறைய கிடைக்குமாம். அப்பா சொல்லியிருக்கிறார். இவன் வந்து, இடையில் கெடுக்குமுன், அப்பாவின் திட்டமே, அதுதான், தெரியுமா? நீ படித்து முடித்ததும், உன்னை எம்டி. ஆக்கி, நம் இருவரிடமும் தொழிலைக் கொடுத்து, தொழிற்சாலையை விரிவுபடுத்தி, இந்தியாவிலேயே முதல் இடத்துக்கு வர வேண்டும் என்பார். ஒரு அயோக்கியனால், எல்லாம் நாசமாகிவிடக் கூடாதும்மா. அப்பாவின் ஆசை நனவாக வேண்டும்! இந்த வயதில், எனக்கு வேறென்ன வேண்டும்?" என்று கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

அவ்வளவுதான் மஞ்சரியின் உள்ளம் பாகாய் உருகி, சிற்றன்னையின் சொல்லுக்குத் தலையாட்டலாயிற்று.

"தொழிற்சாலையைப் பற்றி அடியோடு மறந்துவிட்டு, நிம்மதியாகப் படி கண்ணு" என்று கூறி, தனக்குப் பதிலாகத் தொழிலை நடத்தும் உரிமையை, முதல் வேலையாகப் பெண்ணிடம் எழுதி வாங்கிக் கொண்டாள் வேதவல்லி.

முதல் ஆறு மாதங்கள், தொழிலில் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை.

சொல்லப் போனால், எல்லாச் செலவும் போக, சில லட்சங்கள் லாபம் கூட கிடைத்திருப்பதாக வேதவல்லி கூறவும், மஞ்சரிக்குத் தரையில் கால் பாவவில்லை!

ஆகாயத்திலே மிதப்பது போல, அவ்வளவு சந்தோஷம்! அந்த சசாங்கனிடம் ஜெயித்துக் காட்டப் போகிறாள்!

ஆனால், சுகவனம் இருந்து நடத்தியபோது கிடைத்த லாபத்தில் இது பாதிகூடக் கிடையாது என்று, மஞ்சரிக்குத் தெரியாது.

அந்தக் கணக்குப் பற்றி, அவள் கேட்டுவிடக் கூடாதே என்று "இதுவே அந்த சசாங்கன், அவனுடைய சசி ப்ராடக்ட்ஸ் ஒப்பந்தத்தை ரத்து செய்யாமல் இருந்திருந்தால், இன்னும் நிறைய கிடைத்திருக்கும் தங்கம்!" என்று சமயம் பார்த்து, வாழைப்பழத்தில் ஊசி இறக்கினாள் சிற்றன்னை.

தலையை சிலுப்பி "போகட்டும் சித்தி, அவனுடைய ஒப்பந்தத்தால் லாபம் கிடைப்பதை விட, அதில்லாமல் நஷ்டப்படுவதே மேல். அந்த ஒப்பந்தத்தை சாக்கிட்டு இங்கே மோப்பம் பிடிக்க வந்தாலும் வருவான். அந்தத் தலைவலி, இப்போது நமக்கு இல்லையல்லவா? நிம்மதியாக இருப்போம்" என்றாள் மஞ்சரி.

அப்பாடி என்று வேதவல்லி மூச்சு விடும்போதே "என்னக்கா, உளறுகிறாய்? நாய் விற்ற காசு குரைக்குமா? என்று ஒரு பழமொழியே இருக்கிறது, தெரியுமா? தனக்குப் பிடித்தவர்களோடு மட்டும் பிசினஸ் பண்ணுவது என்றால், எல்லோரும் தொழிலை இழுத்து மூடிக்கொண்டு போக வேண்டியதுதான்!" என்றாள் ரஞ்சனி, கண்டனக் குரலில்.

இனி, இவள் முன்னிலையில் தொழிற்சாலைப் பற்றி பேசக் கூடாது என்று மனதில் குறித்துக்கொண்டு, "இது அப்படி ஆகாது, ரஞ்சனி.



இந்த சசாங்கன் தொழில் விஷயத்தில் சன்னை பிடித்த பார்ட்டி! ஆர்டர் கொடுத்தால், வேலை முடியுமுன், பத்துத் தடவை சரிபார்க்க என்று உள்ளே வருகிறான். செய்யும்போதே, வடிவை மாற்றச் சொல்லுகிறான். என்னதான் பார்த்துப் பார்த்துச் செய்து கொடுத்தாலும், வேண்டும் என்றே, பாதியை திருப்பி வேறு அனுப்புவானாம்! கூட்டிக் கழித்துப் பார்த்தால், அவனால் இழப்புதான் என்பதால், அவன் ஒப்பந்தத்தை ரத்து செய்ததே மேல் என்று தொழிற்சாலையில் சொல்லுகிறார்கள்!" என்று பொறுமையாக விளக்கினாள் வேதவல்லி.

"வேலை செய்கிறவர்களே சொன்னால், அப்புறம் என்ன சித்தி? விட்டுத் தள்ளுங்கள்!" என்று ஒப்புதல் வழங்கினாள் மஞ்சரி.

புருவங்களைச் சுளித்து பார்த்தபோதும், தோளைக் குலுக்கிவிட்டு, "எப்படியோ என் வெளிநாட்டுப் படிப்புக்கு பணமில்லை என்று சொல்லி விடாதீர்கள். அவ்வளவுதான் எனக்கு வேண்டும்" என்றதோடு நிறுத்திக்கொண்டு, மீண்டும் தட்டில் இருந்ததை உண்ணத் தொடங்கினாள் சின்னவள்.

அடுத்த ஆறு மாதங்களில் சில சில்லறைக் கடன்களுக்காக, மஞ்சரியைக் கையெழுத்திடச் சொன்னாள் வேதவல்லி.

கவலையுடன் நோக்கி "சசாங்கனிடம் அனுமதி பெறாமல், கடன் வாங்கக் கூடாதே, சித்தி" என்றாள் பெண்.

"அதெல்லாம் பெரிய கடன்கள், மஞ்சு. இது சும்மா கைமாற்று. அவசரமாகச் சில ஆர்டர்களுக்கு மூலப்பொருள் வாங்க வேண்டும். அவனிடம் போனால், ஏதாவது திரிசமன் செய்து, ஆர்டரே கைவிட்டுப் போகும்படி செய்து விடுவான். ஆர்டர் படி வேலை செய்துவிட்டால், வாடிக்கையாளர் தரும் பணத்தில் உடனே அடைத்துவிடலாம். ஒன்றிரண்டு மாதங்களில் வேலை, கடன் எல்லாம் முடிந்து போகும் விஷயம் வெளியே தெரியவே போவதில்லை" என்றாள் வேதவல்லி.

"ஏன் சித்தி, தொழிலை நடத்தும் உரிமையை எழுதிக் கொடுத்திருப்பதால், நீங்களே கடனை வாங்கியிருக்கலாமே!" என்று கேட்டதற்கு, "மாற்றாந்தாயாக இருப்பதன் பெரிய கொடுமை, வேண்டுமென்று உனக்குத் தெரியாமலே கடனை ஏற்றி வைத்ததாகச் சொல்லுவார்கள். நீயே கையெழுத்திட்டால், அந்தப் பிரச்சினை வராதில்லையா?" என்று பெரியவள் கொடுத்த விளக்கம் சரியானதாகத் தோன்ற, அவன் கேட்டபடி கையெழுத்திட்டுக்

கொடுத்தாள் மகள்.

இதன் விளைவு அடுத்த ஆறு மாதங்களில் அவளுக்குத் தெரிய வந்தது!



## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 9

இந்த ப்ராஜெக்ட் இந்த வாரம் முடித்து கொடுக்க வேண்டியது. ஆனால் மஞ்சரியின் மனம் அதில் நிலைக்க மறுத்தது.

அவளது பார்வை, அருகில் ஒரு சிறு தட்டில் இருந்த பால் ஸ்வீட்டில் படிந்து படிந்து மீண்டது.

இந்த இனிப்பு, கடைசித் தங்கை அபரஞ்சி கொண்டு வந்து தந்தது. "இது, சித்தி அறையில் இருந்ததுக்கா. நேற்று ராத்திரி எனக்கு தந்தபோது நீ தின்னாமல் எனக்குத் தின்னவே பிடிக்கலை. அதனாலே ஒளித்து வைத்துக் கொணர்ந்தேன்" என்று தன் பாசத்தைக் காட்டி கொடுத்துவிட்டுப் போனாள்.

"ஒளித்து எல்லாம், கொண்டு வராதே அபிம்மா. சித்தி தர மறந்திருப்பார்கள்" என்று சமாளிக்க முயன்றாள் மஞ்சரி.

"கிடையவே கிடையாதுக்கா. நேற்று மாலாடு ஐந்து வாங்கி, சித்தி மூன்று தின்றுவிட்டு, எனக்கு இரண்டு தந்தார்கள். உனக்கும் சின்னக்காவுக்கும் கேட்டால், தருவதைத் தின்றுவிட்டுப்படு. இல்லாவிட்டால் உனக்கும் கிடையாது என்று, கடைசியில் அவர்களே தின்றுவிட்டார்கள்" என்று புகார் சொன்னாள் சின்னவள்.

"அது... சித்திக்குப் பசித்திருக்கும்" என்று தாங்கிப் பேசும்போதே, மஞ்சரியின் மனம் கலங்கியது. இப்போதெல்லாம் இப்படித்தானே, அடிக்கடி ஏதாவது நடக்கிறது?

சித்தியின் போக்கிலும், ஒரு வேறுபாடு. முன்போல கண்ணு, செல்லம் என்ற வார்த்தைகளைக் கேட்டு, மாதக்கணக்காகிவிட்டது.

இதைவிடவும் பெரிய அதிர்ச்சி. மறுநாள் ஒரு கடன்காரன், கல்லூரிக்கே வந்து கடனைத் திருப்பிக் கேட்டது.

சென்ற ஆண்டு வாங்கிய பணம், தயாரித்த பொருட்களை விற்றதும், மிஞ்சி மிஞ்சி ஒரு மாதத்தில் திருப்பி விடுவதாகச் சொன்ன பணம், பைசா கூட திருப்பிக் கொடுக்கப்படவில்லை! இதற்கு மேல் நாலு வட்டி, என்று அவன் சொன்னது, அவளது மூளையை



குழப்பியது. வட்டியும் முதலுமாக எவ்வளவு ஆகியிருக்கும்?

அடுத்தநாள் இன்னும் இரண்டு பேர் இதே போல வந்தார்கள். அவர்கள் சும்மாக் கடனைத் திருப்பி மட்டும் கேட்கவில்லை. பத்து நாட்களுக்குள் பணம் வராவிட்டால், தொழிற்சாலைக்குள் புகுந்து இருக்கிற மிஷின்களை எடுத்துப் போய் ஏலம் விடப் போவதாகச் சொன்னார்கள்!

நெஞ்சுக்குள் ஏதோ பிசைய, வேதவல்லிக்கு ஃபோன் போட்டால் அவள் ஸ்விட்ச் ஆப் செய்து வைத்திருந்தாள்.

உடன் பயிலும் மற்ற மாணவர்கள் என்ன என்பது போல, நின்று பார்க்கத் தொடங்கவும் மஞ்சரி குன்றிப் போனாள்.

கலக்கத்துடன் என்றாலும், நகராமல் துணை போல அருகில் நின்ற பார்க்கவியிடம், "நான் நேரில் போய்ப் பார்க்கப் போகிறேன் வகுப்புக்கு வரவில்லை. உடம்பு சரியில்லை என்று ஆசிரியரிடம் சொல்லிவிடு" என்று முணுமுணுத்துவிட்டு வேகமாகக் கிளம்பிப் போனாள்.

நேராகத் தொழிற்சாலைக்குச் சென்று பார்த்தால், அங்கே வேதவல்லி இல்லை. நிர்வாகத்துறை இருந்த பகுதி, திறக்கப்படவே இல்லை.!

சுற்றுமுற்றும் பார்த்தால், ஒரு மூலையில் பேருக்கு வேலை நடந்து கொண்டிருந்தது.

தந்தையோடு ஆயுதபூஜையின்போது வந்து சுற்றிப் பார்த்த தொழிற்சாலைக்கும், இதற்கும் சம்பந்தமே இல்லை.

வேலை செய்து கொண்டிருந்த ஆள்தான் ஃபோர்மன் என்று அவளுக்கு ஞாபகம். அவரிடம், ஏன் இப்படி என்று கேட்டால் 'ஒரு லாட்' செய்து விற்றால் அடுத்த பொருள் செய்வதற்கான முதலீட்டுக் காசைத் தொழிலில் போட வேண்டும்மா. விற்க விற்க அப்படியே என்றார் அள்ளிக்கொண்டு போனால், தொழில் எப்படி நடக்கும்?" அரை கசந்த குரலில் "அந்த மகராசா உங்கள் அப்பாவுக்காக, செய்து சம்பளத்தில் நாங்கள் நாலைந்து பேர் வேலை போய்ட்டாங்கம்மா!" கொண்டிருக்கிறோம். மற்றபடி எல்லோரும் தராவிட்டால்

போய்விட்டால்? பத்து நாட்களுக்குள் பணம் எப்படி மிஷின்களை எடுத்துப் போய்விடுவேன் என்றவர்களுக்கு பணம் கொடுப்பது?

கொடுக்காவிட்டால் ஏலம் என்றார்களே! எவ்வளவு கேவலம்?

அது மட்டுமல்லாமல், மஞ்சரியைப் பார்த்தது, அந்த உண்மையான வேலையாட்களுக்கு ஏதோ நம்பிக்கை வந்திருக்கும் போல! "அப்பாவுக்கு அப்புறம், மொதல் தரமா வந்திருக்கிறீங்கம்மா. நீங்களாச்சும், ஏத்து நடத்தி, அல்லாத்தையும் சரி பண்ணுங்கம்மா" என்று கேட்கவும், தொண்டை அடைக்கத் தலையாட்டி வைத்தாள்.

ஆனால் இதற்கெல்லாம் தேவைப்படும் பணம்?

'அப்படியே தூக்கிக்கொண்டு போனால்'

பொறுப்பில் இருக்கும் சித்திதான் அதைச் செய்ய முடியும்!

ஆனால், பணியாட்களின் சொல்லை அப்படியே நம்பி கேட்பதும் கூடாது. எப்போதாவது திட்டியதை மனதில் வைத்து இப்படிச் சொல்லியிருக்கவும் கூடும்.

வீட்டுக்குச் சென்று பார்த்தால் வேதவல்லி ஜாலியாகப் பாட்டுக் கேட்டுக் கொண்டு படுக்கையில் சாய்ந்திருந்தாள், பக்கத்தில் விலை உயர்ந்த நெறுக்குத் தீனி வேறு!

இந்த முந்திரி வறுவல், ரஞ்சனிக்கு பிடிக்கும், ஆனால் இது சாப்பாட்டு மேஜைக்கு வந்ததே இல்லை.

காதில் ஒலித்த அபிக்குட்டியின் பேச்சை ஒதுக்கி, மனதை அடக்கிக்கொண்டு, சாதாரணமான குரலில் சிறியதாயிடம் மெல்லக் கேட்டாள், கடன்காரர்கள் பற்றிச் சொல்லி, "அப்பா நன்றாக நடத்தியதுதானே, சித்தி? இப்போது ஏன் இப்படி?" என்று வினவினாள்.

கைப்பையிலிருந்து ஒரு முத்திரைக் காகிதத்தை எடுத்து "என்ன செய்வது? பெண் என்றால் வேலையாட்கள் கூடப் பணிவதில்லை! சந்தேகத்துக்கு நீ வேண்டுமானால், நடத்திப் பாரேன்! இதோ நீ கொடுத்த அதிகாரப் பத்திரம்!" என்றவள், சட்டென அதைச் சிறு சிறு துணுக்குகளாகக் கிழித்து எறிந்தாள்.

அதிர்ச்சியுற்று "என்ன சித்தி, இது?" என்று பதறிய பெண்ணை ஒரு பார்வை பார்த்து, "இருபது வயதுச் சின்னவள், மட்டு மரியாதை இல்லாமல் கேள்வி கேட்டால், அதற்கு மேலும் அந்தப் பதவியில் ஒட்டிக் கொண்டு இருப்பது எனக்கு கேவலமில்லை?" என்றாள் அலட்சியமாக.

மஞ்சரிக்கு புரிந்து போயிற்று. நஷ்டத்தில் நடக்கும் தொழிலை தன் பொறுப்பில் தொடர்ந்து நடத்த வேதவல்லிக்கு விருப்பமில்லை. பண உதவி செய்யவும் மனமில்லை! செய்வதாகவே இல்லை!



ஆக, ஃபோர்மன் சொன்னது நிஜமே!

நீ நம்புகிற ஆள் சரியில்லை என்று, அன்றே ஒருவன் சொன்னானே! அதுவும் உண்மையே!

தாயாய் நினைத்தவள், தாயில்லை!

மஞ்சரி மலைத்து நின்றது, சற்று நேரமே!

உடனேயே நினைவு வந்தது. பத்து நாட்களுக்குள் பணம் வரவில்லை என்றால்... என்று மிரட்டினார்களே! ஊகூம், அதற்கு ஒரு போதும் இடம் கொடுக்கக்கூடாது! அப்பா மதிப்பும் மரியாதையுமாக இருந்த இடத்தில், அவரது நினைவுக்கு அவமானம் நேரக்கூடாது.

ரஞ்சனியைப் கூப்பிட்டு விவரம் சொல்லி, அவளுக்கு ஏதாவ யோசனை தோன்றுகிறதா என்று கேட்கலாமா என்ற எண்ணம் தோன்றிய விரைவிலேயே மறைந்தது.

தன் வெளிநாட்டுப் படிப்புக்குத் தடை நேர்ந்துவிடுமோ என்று கத்துவாளே தவிர, அவளால் வேறு பயன் இராது. இப்போதைய தேவை, உடனடியாக பெரிய அளவில் பணம்! வேறு எதுவுமில்லை.

லாக்கரில் இருக்கும் நகைகளின் நினைவு வந்தது. ஆனால் லாக்கர் சாவி வக்கீல் வசம் இருந்தது. பெண்களின் திருமணம் தவிர, வேறு எதற்காகவும், அவர் நகைகளை எடுக்க விடமாட்டார்! அப்படியே தந்தாலும், அது எந்த அளவுக்கு ஈடு கட்டி வரும் என்பது, அவள் அறியாத விஷயம்.

குறுக்கும் நெடுக்குமாக நடந்தபடியே யோசித்தவள், விலுக்கெனக் குலுங்கி நின்றாள்.

இந்த லாக்கர் சாவியைக் கூட, அப்பா சித்தியிடம் ஒப்படைக்கவில்லை! ஏன்?

கடைசி சமயத்தில் சித்தி பற்றி, அப்பாவுக்கு எதுவும் தெரிய வந்திருக்குமோ? அதுதான், அப்பாவின் முடிவுக்கு காரணமாக இருந்திருக்குமோ?

ஆனால், சசாங்கன்தான் காரணம் என்று... அப்படிப் பழி சொன்னதும், சிற்றன்னைதானே? அவள் பேச்சை நம்பி என்ன மடத்தனம் செய்துவிட்டாள்!

நிமிர்ந்து கொண்டிருந்த மஞ்சரியின் உடல் சட்டெனத் தொய்ந்தது. இல்லையே! சிற்றன்னை மட்டும் சொல்லவில்லையே! அவளுமே பார்த்தாளே! ஃபீனிக்ஸ் மாலில் அவன் வாங்கிய துணிமணிகள்!

போகட்டும், இப்போது அவனை நினைப்பானேன்?

உருப்படியாகச் செய்ய, முக்கியமான வேலைகள் எத்தனையோ இருக்கின்றன!

முதலில் இந்தக் கடன்காரர்கள்!

மறுபடியும் தொழிற்சாலைக்குச் சென்று நிர்வாகப் பகுதியில் கணக்குப் புத்தகத்தைத் தேடிக் கண்டுபிடித்து வர வேண்டிய தொகை எதுவும் நிலுவையில் இருக்கிறதா என்று ஆராய்ந்தாள்.

ஒரு சில ஆயிரங்கள், கணக்கில் தவறு இருப்பதாகச் சொல்லி, சரிபார்க்கச் சொல்லியிருந்தது தவிர, எதுவுமே இல்லை!

ஆர்டர் புத்தகம் கிட்டத்தட்ட காலியாக இருந்தது. ஆர்டர்கள் இருந்தால்தானே வேலையும் வருமானமும்?

பொறுப்பெடுத்த ஒரே வருஷத்தில் இந்த சித்தி எந்த நிலைக்குக் கொண்டு வந்துவிட்டாள்.

ஆனால், அது பற்றி வருத்தப்பட்டுக் கொண்டிருக்கவும், இப்போது அவளுக்கு அவகாசமில்லை. இருக்கும் பத்து நாட்களுக்குள் ஏதாவது செய்தாக வேண்டும். கையில் கடனாக வாங்கிய தொகை ஏழு லட்சம். அவர்கள் சொல்லுகிற வட்டி மூன்று லட்சம் சேர்த்து பத்து லட்சம். உடனடியாக வேண்டும்.

சட்டென அவளது மனம் மேலும் கனத்தது. இந்த மூன்றுதானா? சித்தி சொல்லச் சொல்ல, இன்னும் சில கையெழுத்துக்களும் போட்டாளே! அவர்களும் வருவார்களே!

தொழிற்சாலைக்காக சுகவனம் கணக்கு வைத்திருந்த பாங்கில் போய்க் கேட்டுப் பார்த்தாள் "உன் அப்பாவின் உயிலில் ஒரு கட்டுப்பாடு வைத்திருப்பதாகத் தகவல் இருக்கிறது. அதை விடுவிப்பதோடு, கடந்த ஓர் ஆண்டு காலமாக, தொழிற்சாலையில் நடந்த வேலை மற்றும் வரவு செலவு விவரங்களையும் தந்தால், மேற்கொண்டு ஏதாவது செய்ய முடிகிறதா என்று பார்க்கலாம்" என்று அங்கே சொன்னார்கள்.

அதாவது அவர்களும் கையை விரித்தார்கள்! மற்றபடி சசாங்கனின் அனுமதி கிடைத்தாலும் கூட, தொழிற்சாலையின் கடந்த ஆண்டு வேலையாக எதைக் காட்டுவது? அதைத்தான் சித்தி அடியோடு முடக்கிவிட்டாளே! வரவர அள்ளிக் கொண்டு சே...!

வேதவல்லியிடமே போய், அவள் எடுத்த பணத்தைக் கடனாகவேனும் கேட்கலாமா என்று யோசித்தாள். ஆனால், அப்படிக் கடனாகத் தருமுன், பணம் எடுத்ததை அவள் ஒப்புக் கொள்ள



நேருமே! எப்படிச் செய்வாள்?

வெகுவாக யோசித்து, சிற்றன்னை பணம் எடுத்ததைக் குறிப்பாகக் கூடக் காட்டாமல், யாரிடமாவது, இப்போது உடனடியாகத் தேவைப்படும் பத்து லட்சத்தையும் கடனாக வாங்க ஏற்பாடு பண்ண முடியுமா என்று பணிவாகவே கேட்டாள்.

மஞ்சரியை ஏற இறங்கப் பார்த்துவிட்டு "கெட்டிக்காரிதான். ஆனால் இந்த புதுக் கடனை எப்படி அடைப்பதாக உத்தேசம்? வருமானமே இல்லாதபோது, எதை நம்பி, உனக்கு யார் கடன் கொடுப்பார்கள்?" என்று அவளும் மறைமுகமாகவே மறுத்தாள்.

அவளது குரலில் இருந்த ஏளனமும் திமிரும் பொறுக்க மாட்டாமல் "சித்தீ, நீங்கள் செய்வது அநியாயம்?" என்றாள் ஆத்திரத்தில் குரல் நடுங்க.

"அப்படியா? ஆனால் உன் அப்பன் செய்தது? தாலி கட்டின மனைவிக்கு ஒன்றுமில்லை என்று உனக்குத்தானே கொடுத்தார்? எப்படியோ சமாளி! முடியாவிட்டால், அதுதான் 'நீயே கூப்பிடுவாய், அப்போது வருவேன்' என்று சொன்னான் என்றாயே! ஆபத்பாந்தவா' என்று அவன் காலில் போய் விழு! உனக்கென்ன ஆளா இல்லை? அந்த வக்கீல்? இந்த சசாங்கன்! ஹும்" என்று திருப்பிக் கொண்டு போனாள் வேதவல்லி.

இதற்குமேல் முடியாது என்று புரிய, தங்கை ரஞ்சனியிடம் விவரம் முழுதும் தெரிவித்தாள் மஞ்சரி.

கூடச் சேர்ந்து கலங்கியபோதும், "எப்படியாவது சமாளித்து, சரி செய்துவிடு, அக்கா. எனக்கு இரண்டு யூனிவர்சிடியில் இடம் தருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்! எதிலாவது சேர வேண்டும். அதற்கு பணம் இல்லை என்று சொல்லிவிடாதே" என்றாள் சின்னவள்.

கடைக்குட்டி அபிக்கு, இந்த பண விவகாரம் புரியாவிட்டாலும், அக்காவுக்கு ஏதோ துன்பம் என்று புரிந்து, பெரிய தமக்கையின் கூடவே அலைந்தாள். அவ்வப்போது கட்டிப் பிடிப்பாள். ஆயாசமாய் அமர்ந்தால், நெற்றியை வருடுவாள். ஃப்ரிஜ்ஜிலிருந்து பழச்சாறு எடுத்து வந்து தருவாள். அதுவே ஆறுதலாக, அவள் கையை பிடித்துக்கொண்டு, மஞ்சரி அமர்ந்திருப்பதும் உண்டு.

ஆனால் முக்கியமான பிரச்சினை ஒரு முன்னேற்றமும் இல்லாமல், அப்படியே இருந்தது.

மேலும் இரண்டு நாட்கள் கழிந்தபின், இதற்கு மேலும் தாமதித்தால், சசாங்கனாலும் உதவ முடியாது போகலாம் என்று உறைக்கவும், வக்கீலிடம் எண் வாங்கி, சசாங்கனுக்கு ஃபோன் செய்தாள்.

வக்கீல் தெரிவித்திருப்பாரோ, என்னவோ, அவள் பார்க்க வேண்டும் என்றதும் "இனி கிளம்பி வந்தால், இரவாகி விடும். நாளைக் காலையில் உனக்கு பாடம் இருக்கிறதா?" என்று கேட்டான் அவன்.

குரல் ஒன்றும் உருகி வழியவில்லை. ஆனாலும் ஏனோ மஞ்சரிக்குத் தொண்டை அடைத்தது. அவள் முதுநிலைப் பட்டத்துக்குப் படிப்பதையும், அதற்கு ஆசிரியர்கள், அவர்களுக்குக் கிடைத்த வேறு வேறு நேரத்தில் வரச் சொல்வதையும் நினைவு வைத்துக் கேட்கிறானே!

லேசாகச் செருமிக்கொண்டு "மூமூன்று நாட்களுக்கு கல்லூரிக்கு போகவில்லை. இஇது ரொம்ப முக்கியம்" என்றாள் சின்னக் குரலில்.

ஒரு வினாடி மௌனத்தின் பின் "காலை எட்டு மணிக்கு வக்கீலின் வீட்டில் இருப்பேன். காலை உணவை முடித்துக் கொண்டு வா" என்றான் அவன்.

பெரிதாக சசாங்கன் ஒன்றும் உறுதிமொழி கொடுத்து விடவில்லை ஆனால் என்னவோ, நாலு நாட்களுக்குப் பிறகு அன்று இரவு மஞ்சரி நன்கு தூங்கினாள்.

அந்த நாலுநாட்களாகத் தூங்காத களைப்பினாலும் இருக்கலாம். ஆனால் தூங்கி விழித்து அன்று முகம் திருத்தக் கண்ணாடியைப் பார்க்கும்போது, மஞ்சரிக்கு சற்று சந்தோஷமாகக் கூட இருந்தது.

முன் போலவே, இருவரும் தனித்துப் பேச வசதி செய்து கொடுத்துவிட்டு, வக்கீல் வெளியே சென்றுவிட்டார்.

ஒரு பெரிய மூச்சை உள்ளிழுத்துக் கொண்டு "சாரி நீங்கள் சொன்னது போலத் தப்பான ஆளை நம்பிவிட்டேன். அதற்கு தண்டனையும் கிடைத்துவிட்டது" என்றாள் எழும்பாத குரலில்.

"அது இப்போது தேவையற்ற பேச்சு. என்னைக் கூப்பிட்ட காரணம்... இன்றைய பிரச்சினை பற்றிசொல்லு" என்றாள் அவன்.

'கைமாற்று' என்ற பெயரில் வாங்கிய கடன். கடன் கொடுத்தவர்களின் மிரட்டல் பற்றி, மஞ்சரி அவளிடம் தெரிவித்தாள்.

"இப்போது வீட்டின் மீது பெரிய கடன் ஏதாவது கிடைக்குமானால்..."



என்று அவள் சொல்லும்போதே, சசாங்கன் குறுக்கிட்டு, "அது சரி வராது" என்றான்

அவள் கவலையுடன் நோக்கவும், "இப்போதைய உன் தேவை. அந்தக் கடன்காரர்களின் பத்து லட்சம் மட்டுமல்ல. இதுபோல, இன்னும் எத்தனை கிளம்பும் என்று தெரியாது. உன் சித்தி கேட்டபோதெல்லாம் கையெழுத்துப் போட்டதாகச் சொல்கிறாய். மற்றவர்களும் எந்த நேரத்திலும், பணத்துக்காக உன்னைத் தேடி வரலாம். இன்னும் இதே அளவே என்றாலும், அந்தத் தொகையே இருபது லட்சம் ஆகிறது. தொழிற்சாலையில் உற்பத்தி தொடங்காமல், இந்தக் கடனை அடைக்க முடியாது. காலையில் வரும் வழியில் தொழிற்சாலையைப் போய்ப்பார்த்துவிட்டு வந்தேன். அதை தூக்கி நிறுத்த வேண்டும் என்றால், குறைந்தது மூன்று பத்து வேண்டும். இந்த அரைக்கோடியை கடனாகத் தருகிறவர்கள், வீட்டையே முழுங்கும் எண்ணத்தில்தான் தருவார்கள். அதை, நாம் அனுமதிக்க முடியாது. உன் அப்பா விரும்ப மாட்டார். அவர் எல்லாவற்றையும் உன் பெயரில் எழுதிய காரணமே, முக்கியமாக அதுதான். இன்னும் உன் தங்கைகள்! ரஞ்சனியின் வெளிநாடும் கிட்டே வந்திருக்கும். அபரஞ்சி எப்படி இருக்கிறாள்?" என்று பேச்சோடு பேச்சாகக் குடும்ப நலம் விசாரித்தான், அவன்.

சசாங்கனின் பணக் கணக்கு, மஞ்சரியை மருட்டியது. அதிலிருந்து தப்பிய உணர்வுடன், ரஞ்சனிக்கு இரண்டு யூனிவர்சிடிகளில் இடம் கிடைத்திருக்கிறதாம். அதை மறக்க கூடாது என்றாள். அபிக்குட்டிதான். பிரியத்தைக் காட்டும் விதமாக ஏதாவது செய்துகொண்டே இருப்பாள். அவள் மட்டும் இல்லை என்றால், இந்த நாலு நாட்களில் எனக்கு மூளை கலங்கியிருக்கும்?" என்றாள் முழு மனத்தோடு.

அபியின் அன்புச் செயல்களை எண்ணும்போது தன்னையறியாமல், மஞ்சரியின் ரோஜா இதழ்களில் புன்முறுவல் ஒன்று தோன்றி மறைந்தது.

ஆனால் "ஓகே!" என்று சசாங்கன் எழவும், மஞ்சரி பதறிப் போனாள்.

"என்ன?" என்று தானும் எழுந்தபடி தடுமாறிப்போனாள்.

ஒன்றுமில்லை என்பது போலத் தலையை லேசாக அசைத்துவிட்டு "கொஞ்சம் வேலையிருக்கிறது. முடித்துவிட்டு,

வீட்டுக்கு வருகிறேன். மேலே இதைப் பற்றி, அங்கே பேசுவோம். அபிக்கு என்ன இனிப்பு பிடிக்கும்?" என்று சசாங்கன் வினவினான்.

முடியாது என்றால் இனிப்பு பற்றிக் கேட்கமாட்டான் என்று மனதைத் தேற்றிக்கொண்டு, 'ரசகுல்லாவைப் பிளந்து, சான்ட்விட்ச் மாதிரி செய்திருக்குமே, அது ரொம்பப் பிடிக்கும்" என்றாள் அவள் மெதுவாக.

"ரைட்! மலையில் வீட்டுக்கு வருகிறேன். இனி என்ன செய்யலாம் என்று அப்போது முடிவு பண்ணலாம்" என்றான் அவன்.

"ஆனால்... அங்கே சித்தி இருப்பார்களே..."என்று மஞ்சரி தயங்கினாள்.

இன்றைய இக்கட்டுக்குக் காரணமே, சிற்றன்னைதான் என்று, அவனுக்குத் தெரியும். அப்புறமும் வீட்டில் பேசலாம் என்கிறானே என்ற தவிப்பு அவளுக்கு.

ஆனால் "இருக்கட்டும், அந்தம்மாவுக்கு இன்னமும் பயப்படுவாயா? யார் வேண்டுமானாலும் இருக்கட்டும். அங்கே வீட்டிலேயே மாலையில் சந்திப்போம்" என்று பேச்சை முடித்து, வாயிற்புறமாகத் திரும்பினான் சசாங்கன்.

அதற்கு மேல் அங்கே நிற்க மாட்டாமல் கிளம்பிய மஞ்சரிக்கு, மனதில் ஒரே சஞ்சலம் தவிப்பு!

வீட்டில் வந்து பேச என்ன இருக்கிறது? இப்போதைய ஒரே தேவை பெரிய அளவில் பணம்! வீட்டை சசாங்கனே வாங்கிக் கொள்ள எண்ணுகிறானோ? ஆனால் தந்தையின் உயில்படி, வீட்டை விற்க முடியாதே! தொழிலையும் அப்படித்தான்.

பெரிய கடன் வாங்கி, சில்லறை கடன்களை அடைத்துவிட்டுத் தொழிலையும் நடத்துவது ஒன்றுதான் மீள வழி. அதுவே எந்த அளவுக்கு வெற்றியாகும் என்று தெரியாது.

ஆனால் கடன் வாங்குவதையே சசாங்கன் தவிர்க்க விரும்பினால், அவனது மாற்றுத் திட்டம் என்ன? ஒரு... ஒருவேளை... எல்லாவற்றையும் அவனே எடுத்துக் கொள்ள நினைக்கிறானோ?

கலங்கிப் போனாள் மஞ்சரி!

அவளை வெறுமனே ஒரு டம்மி மாதிரி வைத்துக்கொண்டு, எல்லாவற்றையும் அவன் கைப்பற்றிக் கொள்ள முயன்றால், அதைத் தடுப்பதற்கு, இன்றைய நிலையில் அவளால் எப்படி முடியும்?

வாணலிக்குத் தப்பி, அடுப்பு நெருப்பில் விழுவது என்று ஆகப்



போகிறதா?

அச்சத்துடன் அவள் காத்திருந்தால், மாலையில் டீஷர்ட், ஜீன்ஸ் அணிந்து இலகுவாக வந்த சசாங்கன், எல்லோருடனும்கலகலப்பாகப் பழகினான்.

"ஹாய், மரம் ஏற டீச்சர் வைத்து படித்த அங்கிள். வாங்க வாங்க!" என்று குதூகலத்துடன் வரவேற்ற அபியிடம் "ஆஹா, இந்த அடைமொழி இனி என்னை விடவே விடாது போலிருக்கிறதே!" என்று நகைத்து, இனிப்பை கொடுத்தான்.

"வாருங்கள்!" என்று முறுவலித்த ரஞ்சனியிடம் "என்னம்மா வெளிநாடு எவ்வளவு தூரத்தில் இருக்கிறது" என்று சிரித்த முகமாய் விசாரித்தான்.

"அதை நீங்கள்தனே சொல்ல வேண்டும் போல?" என்ற அவளது மறைமுகக் கேள்விக்கு, "என் கையில் என்னம்மா இருக்கிறது? எப்படியும் கடைசி முடிவு உன் அக்காவினதுதான்" என்றான் அவன் இலகுவாகவே.

தங்கையின் பார்வையை உணர்ந்து "யோசனை என்னவென்றே எனக்குத் தெரியாது, ரஞ்சி. நான் எப்படி முடிவெடுப்பது?" என்று முணுமுணுத்துவிட்டு, "வாருங்கள், உட்காருங்கள். என்ன சாப்பிடுகிறீர்கள்?" என்று விருந்தாளியாய் அவனுக்கு உபச்சாரம் செய்ய முனைந்தாள்.

என்ன சொல்லப் போகிறானோ என்ற அச்சத்தில் அதைத் தள்ளிப் போட முயன்றாள் மஞ்சரி.

ஆனால், அவன் கூடவே சென்று, எதிரே அமர்ந்த ரஞ்சனி, "உங்கள் யோசனை என்ன? என் பயணத்துக்குப் பிரச்சினை இராதே? முதலில் அதைச் சொல்லுங்கள்" என்று அவசரப்பட்டாள்.

"சொல்லுகிறேன், ஆனால் இந்தக் குடும்பத்தின் இன்னோர் அங்கத்தின்ரைக் காணோமே!" என்று கேட்டான்.

பெரிய பெண்கள் இருவரும் ஒருவரை ஒருவர் பார்க்க, சசாங்கனின் அருகே அமர்ந்திருந்த அபி, அவன் காதருகே வாயை வைத்து "எங்கள் சித்தியைத்தானே கேட்கிறீங்க? இங்கே வரமாட்டேன் என்று விட்டு பக்கத்து ரூமிலே ஒளிந்து ஒட்டுக் கேட்கிறாங்க" என்று உண்மையைப் போட்டு உடைத்தாள்.

"ஓ! நல்லது. அவர்களுக்கு இன்னொரு முறை சொல்ல வேண்டாம்" என்றவன், தொண்டையை லேசாகச் செருமிக் கொண்டு

"குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் தருகிறாயா, அபி?"என்று கேட்டான்.

"இதோ!" என்று அவள் எழுந்து ஓடியதும், சசாங்கன் தன் யோசனையைத் தெரிவித்தான்.

ஒரு கெட்ட செய்திக்கு, மஞ்சரி தயாராகத்தான் இருந்தாள். ஏதோ ஓர் இழப்புக்கு? ஆனால் அவன் சொன்னது!

திகைப்பு மாறி, பேசும் சக்தி திரும்பியதும் "நினைத்தேன். எங்களை நடுத்தெருவில் நிறுத்துவதுதானே உங்கள் எண்ணம்?" என்று ஆத்திரத்துடன் வினவினாள் அவள்.

குரலில் மாற்றமே இல்லாமல் "அதைப் பிறகு சொல்கிறேன். ஆனால், இதற்கு பதில் சொல்ல, உனக்கு, நாளைக் காலை ஏழு மணி வரை அவகாசம்!" என்று எழுந்தான் சசாங்கன்.

நெஞ்சக் கூடு காலியான உணர்வுடன் அவனைப் பார்த்துக் கொண்டு, நின்றாள் மஞ்சரி.!



## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 10

"தொழிற்சாலையைத் தூக்கி நிறுத்துவதோடு ரஞ்சனி, அபரஞ்சி பொறுப்பையும் ஏற்றுக் கொள்கிறேன்" என்று சசாங்கன் கூறியவரை, எல்லாம் சரியாகத்தான் தெரிந்தது. ஆனால், இதன் பின்னே இருக்கும் கொக்கிக்காக மஞ்சரி கவனத்துடன் காத்திருந்தபோது, அவன் சொன்னான் 'வீடு தொழில் இரண்டையும் சேர்த்தே என் பொறுப்பில் தர வேண்டும் நானும் இங்கேயே தங்குவேன்"

இப்படிச் சொல்ல, இந்த சசாங்கனுக்கு எவ்வளவு திண்ணக்கம் இருக்க வேண்டும்?

அப்பாவுடைய இந்த வீட்டில், இவன் தங்கினால், அப்பாவுடைய பெண்கள், இங்கே எப்படி வசிக்க முடியும்?

வீட்டை விட்டு வெளியேறு என்று, உரிய வார்த்தைகளால் நேரே சொல்லாமல், இப்படி கூறுகிறான்.

இன்றைய இக்கட்டான நிலையில் வேறு வழியின்றி, எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, வெளியே போய்விடுவார்கள் என்ற எண்ணம்!

"நீங்கள் சொல்லி முடித்திட்டீங்களா? நான் உள்ளே வரலாமா?" என்று ஓர் இளம் குரல் கேட்க, பின்னோடு கண்ணாடி தம்ளரில்



தண்ணீருடன் அபி உள்ளே வந்தாள். சசாங்கனிடம் தண்ணீரைக் கொடுத்துவிட்டு, "பிடிக்காட்டி குடிக்காதீங்க, அங்கிள். ஏதோ முக்கியமானப் பேசும்போது நான் இருக்கக்கூடாது என்றுதானே தண்ணீர் கேட்டு அனுப்பினீங்க?" என்று அவள் வினவிய விதத்தில் மற்ற மூவர் முகங்களிலும் இறுக்கம் குறைந்தது.

தண்ணீரை வாங்கிக்கொண்டு, "தப்புதான் செல்லம். இவ்வளவு புத்திசாலியைப் போய், இப்படி அசட்டுத்தனமாக ஏமாற்ற எண்ணினேனே! பெரிய்ய பிசகுதான். இனிமேல், அப்படிச் செய்யவே மாட்டேன் கண்ணு"என்றான் சசாங்கன், கனிவாக.

"ஆனால் பார், எனக்கு தாகமும்தான்!" என்று தண்ணீரைக் குடித்துவிட்டு, டம்ளரை அருகிருந்த மேஜை மேல் வைத்தான்.

வைத்துவிட்டு "பை, பீப்புள்!" என்று எல்லோரிடமும் மொத்தமாக விடை பெற்றுக் கொண்டு கிளம்பிப் போய்விட்டான்.

சசாங்கன் தலை மறையவும், வீடு சந்தைக் கடை ஆயிற்று.

அவனது கார் கிளம்பவுமே, ரஞ்சனி தொடங்கிவிட்டாள். "அக்கா அவர் சொன்னதை அப்படியே ஒத்துக் கொள், அக்கா. என்னை வெளிநாட்டுக்கு அனுப்புவார்! சசாங்கன் சார், சொன்ன சொல் தவற மாட்டார். பார், சென்ற ஆண்டு என்ன சொல்லிவிட்டுப் போனார், நீயாக கூப்பிடுமுன் வர மாட்டேன் என்று சொன்னாரே! வந்தாரா? சொல்லு, நீ வா என்ற பிறகுதானே வந்திருக்கிறார்? அவர் சொன்ன சொல் காப்பாற்றுகிறவர், மஞ்சு! ப்ளீஸ், எனக்காக ஒத்துக் கொள்ளேன்" என்று காலில் விழாத குறையாகத் தமக்கையிடம் கெஞ்சினாள்.

"ஷ் ரஞ்சி. அவர் கடைசியாகச் சொன்னதை நீ கவனிக்கவில்லையா? அவரும் இங்கே வந்து தங்குவாராமே! இளம் பெண்களான நாம் இருக்கும் வீட்டில் வெளி ஆண் ஒருவர் எப்படித் தங்க முடியும்? யோசி!" என்று மஞ்சரி பொறுமையோடு எடுத்துச் சொன்னாள்.

"கேட்டுப் பார்ப்போம்,வெளியே தங்கிக் கொள்ளுங்கள். அதற்கான செலவை, நிறுவனக் கணக்கில் எடுத்துக் கொள்ளுங்கள் என்று கேட்போம்!"

"அதை ஒத்துக்கொள்கிறவர், இந்த மாதிரிக் கேட்பாரா ரஞ்சி? அவருக்கு இந்த வீட்டை விழுங்கிவிட ஆசை! இந்த மாதிரிப் பெரிய இடமும் வீடும் எங்கே கிடைக்கும்?"

"ரொம்பச் சரியாகச் சொன்னாய்! அவன் மனதைப் படித்த மாதிரிச் சொல்கிறாயே! அவ்வப்போது உன் மூளையும் வேலை செய்யும்போல!" என்று வேதவல்லியின் குரல் குறுக்கிடவும், ஆத்திரத்துடன் அவளது குரல் வந்த பக்கம் மஞ்சரி திரும்பினாள்.

எப்போது வந்தாளோ? சசாங்கன் சென்ற பிறகு, சத்தமின்றி, வந்து, சோஃபாவில் அமர்ந்திருக்க வேண்டும்.

ரஞ்சனி அருவருப்புடன் முகத்தைத் திருப்ப, அபரஞ்சி ஓடியே வந்து, இரு தமக்கைகளுக்கும் இடையே நின்று கொண்டாள்.

தன்போக்கில், தங்கையின் தோளைக் கை வருட "நீங்கள் பேசாதீர்கள். இதில் ஒரு வார்த்தை பேச உங்களுக்கு அருகதை கிடையாது! இன்றைய இந்த நிலைமைக்குக்காரணமே நீங்கள் தானே!" என்று மஞ்சரி சீறினாள்.

"நானா? இந்த புத்திசாலித்தனத்தில் பத்தில் ஒரு பங்கை நீ பயன்படுத்தியிருந்தால் கூட, இந்த அளவுக்கு வந்திருக்குமா? நீ ஏமாளியாக அள்ளி அள்ளித் தந்தால், வேண்டாம் என்று விட்டுவிட, நான் என்ன, உன்னை போல முட்டாளா? அனாவசியமாக என்னைத் திட்டிக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு, இப்போது என்ன செய்யலாம் என்று யோசி! இல்லையென்றால், தளதள என்று இரண்டு குட்டி கிடைத்தது என்று, வள்ளி தெய்வானை மாதிரி வைத்துக் கொள்வான்!" என்றாள் வேதவல்லி, நாகரீகமே இல்லாமல்,

"சீ" என்று அருவருப்புடன் மஞ்சரி முகம் திருப், "சித்தீ!" என்று கடித்த பற்களுக்கிடையே ரஞ்சனி கூப்பிட்டாள் "ரொம்பக் கஷ்டப்பட்டு என்னை அடக்கிக் கொண்டிருக்கிறேன், உங்கள் நாற்ற வாயை மூடிக்கொண்டு மரியாதையாக இங்கிருந்து போய் விடுங்கள். இல்லையென்றால், என்ன ஆனாலும் ஆகட்டும் என்று, உங்கள் கழுத்தைப் பிடித்து நெறித்தாலும் நெறித்து விடுவேன்!" என்று கடும் கோபத்துடன் எச்சரித்தாள்.

தமக்கையின் இடையைக் கட்டிக்கொண்டு "ஆமாம் போ!" என்றாள் அபியும்.

மூன்று பெண்களையும் ஒருதரம் பார்த்துவிட்டு, அலட்சியம்போல தோளை குலுக்கினாலும், அதற்குமேல் அங்கிருக்க துணிவின்றி, வேதவல்லி எழுந்து சென்றாள்.

கையில் இருக்கும் பணத்துக்கு, வெளியே போய் ராணி மாதிரி வாழலாம். ஆனால் அந்த சசாங்கனிடமும் ஏதாவது பிடுங்க முடிந்தால்,



அதையும் விடுவானேன் என்று வேதவல்லி எண்ணினாள். அதோடு இந்தச் சின்னதுக்கு ஏதாவது கிடைத்தால், அதையும் கூட்டிப் போய்விடலாம்.

அவள் சென்ற திசைக்கே முதுகு காட்டி நின்று கொண்டு "அக்கா, நாம் வேண்டுமானால், ஏதாவது ஃப்ளாட் பார்த்து போய் விடலாமா? சசாங்கனுக்கு இந்த வீடுதானே வேண்டும்? எடுத்துக் கொள்ளட்டும். நான் படித்துவிட்டு வந்தால், ரொம்பப் பெரிய வேலை கிடைக்கும் இல்லை, அங்கேயே வேலை பார்த்தாலும் நான் அனுப்புகிற பணத்தில் வேறு நல்ல வீடு கட்டிக் கொள்ளலாம்க்கா! அக்கா ப்ளீஸ்க்கா!" என்று கெஞ்சி கேட்டாள் ரஞ்சனி.

நெஞ்சை அடைத்தது மூத்தவளுக்கு.

ரஞ்சனி எப்போதும் நிமிர்ந்து நிற்கிறவள், ரைட்ராயல் என்பார்களே, அதுபோல என் உரிமை என்று, தன் விருப்பத்தில் ஒரே பிடியாக இருப்பவள், இந்த வெளிநாட்டுப் படிப்பு, அவளது பல்லாண்டு கால விருப்பம்!

"பொறும்மா, சசாங்கனிடம் கேட்டுப் பார்ப்போம்!" என்றாள் கம்மிய குரலில்.

சித்தி உள்ளிருந்து கொல்லும் வியாதி என்று அறியாமல், நடந்ததற்கு, இவ்வளவு பெரிய தண்டனையா? ஆனாலும், அவளுக்கு இவ்வளவு கீழ்த்தரமான புத்தியா?

ஆனால், அப்பா எத்தனையோ குறிப்புகள் கொடுத்துதான் இருக்கிறார். லாக்கர் சாவியை வக்கீலிடம் கொடுத்து, தொழிலை, வீட்டை மஞ்சரிக்குக் கொடுத்து, மகளுக்கும் மேல் கையாக சசாங்கனைப் போட்டு... இவை அனைத்துக்கும் அடிப்படை மனைவியை நம்பவில்லை என்பதுதானே?

வேதவல்லிக்கு எதுவும் கிடையாது என்பதோடு, மஞ்சரி அவளிடம் ஏமாந்து எதையும் முழுதாக விட்டுவிடக்கூடாது என்பதற்காகவும்தானே?

தந்தையின் செயலுக்கு உள்ளர்த்தம் இருக்கும் என்று யோசிக்காமல், சித்தியின் விருப்பத்துக்கு ஆடியது முழு முட்டாள்தனம்தான், அந்த பிழைக்கு அவள் அனுபவிக்க வேண்டியதுதான்! நொந்து தவிக்க வேண்டியதுதான். ஆனால் தங்கைகள்?

பிழைப்புக்காக தன்னைத்தானே கசையால் அடித்துக்கொள்ளும்

ஒருவனை, கல்லூரிக்குச் செல்லும் வழியில் மஞ்சரி அவ்வப்போது பார்த்ததுண்டு. தன்னைப் பார்த்துப் பரிதாபப்பட்டு மக்கள் போட்டுவிட்டுப் போகும் சில்லறைக் காசுக்காக, அவன் இன்னமும் ரத்தம் வழிய அடித்துக் கொள்வான். அதுபோல இந்தப் பிரச்சினை நல்லபடியாகத் தீரும் என்றால், இன்னும் அதிகமான வலியை அனுபவிக்கவும் மஞ்சரிதயாராகத்தான் இருந்தாள்.

ஆனால் பிரச்சினை எப்படி தீரும் என்றுதான் அவளுக்குப் புரியவில்லை?

ரஞ்சனியின் உந்துதலில், அன்றிரவே மஞ்சரி, சசாங்கனுக்கு ஃபோன் செய்தாள்.

"பரவாயில்லையே! அதற்குள் முடிவு செய்துவிட்டாயா? என்னவென்று? சம்மதம்தானே?" என்று கேட்டான் அவன்.

"அதில்லை...." என்று தொடங்கி தமக்கையின் யோசனையை அவள்சொல்ல முயன்றால், அவன் அதைக் காது கொடுத்துக் கேட்கவே இல்லை.

"ஒன்று என் நிபந்தனைகளை முழுதாக ஒத்துக்கொள். அல்லது, அடியோடு விட்டுவிடு. இந்த முக்கால் கிணறு தாண்டுகிற கதையெல்லாம் என்னிடம் வேண்டாம். நாளைக் காலை எழு மணி!" என்று கூறி செல்லைக் கட் பண்ணிவிட்டான்.

இனிவேறு வழியில்லை. ஆனால் அவளுக்கு இன்னொரு யோசனை வந்தது.

அவனது தொழில், குடும்பம் இருப்பது விழுப்புரத்தில், எப்போதாவது சென்னைக்கு வரும்போது, ஹோட்டலுக்குப் பதிலாக இந்த வீட்டில் தங்கப் போகிறான் அதைப் பெரிதாக நினைப்பானேன்?

தன்னைத் தானேயும், தங்கைகளையும் சமாதானம் செய்து ஒரு வழியாகத் தூங்கினால், எழும்போதே மணி ஏழாகிவிட்டது.

வாய் கூடக் கொப்புளிக்காமல், விழுந்தடித்துக் கொண்டு ஓடி, மேஜைமேல் இருந்த செல்ஃபோனை எடுத்து, அவன் பெயரை அழுத்தினாள். அவனது குரல் கேட்டதுமே, முதல் வார்த்தையாக "சம்மதம்" என்றாள்.

இந்தப் பதிலை அவன் எதிர்பார்க்கவில்லையோ என்னவோ? அவன் பதில் சொல்ல எடுத்துக் கொண்ட ஒரு வினாடியில் மஞ்சரி செத்துப் பிழைத்தாள்.

ஒருவேளை அவன் மறுப்பான். அதைக் காட்டி கழன்று



கொள்ளலாம் என்று எண்ணித்தான், இந்த ஒவ்வாத நிபந்தனையை விதித்தானோ? பதிலையே காணோமே என்று அவள் கலங்கும்போதே "மிக நல்லது!" என்றான் சசாங்கன் அமைதியாக. "நன்றாக யோசித்து, சரியான முடிவெடுத்திருக்கிறாய்?" என்றான் மெச்சுவது போல்.

உண்மையாகவே, மெச்சுதல்தானா? மெச்சுவதற்கு இதில் என்ன இருக்கிறது?

அவள் ஒன்றும் ஆசைப்பட்டு, அவனது நிபந்தனைக்கு இணங்கவில்லை என்பதைப் புரியவைத்துவிட எண்ணி "அப்பா தொழில் அழியக் கூடாது. அப்பாவின் ஆசை அது" என்றாள் அவசரமாக.

"அப்பாவின் ஆசை அது மட்டும் அல்லவே!" என்றான், அவன் ஒரு மாதிரிக் குரலில்.

"என்ன சொல்லுகிறீர்கள்?"

"அதை நேரில் வந்து சொல்லுகிறேன். இன்னும் அரை மணி நேரத்தில் அங்கே இருப்பேன்" என்று பேச்சை முடித்தான், சசாங்கன்.

மறுபடியும் விழுந்தடித்துப் போய், தங்கைகளை எழுப்பி, பல் துலக்கிக் குளித்து, உடை மாற்றி, தலைகோதி, அபிக்கும் வாரிவிட்டு முடித்தால், சசாங்கனின் சில்வர்கிரேகார், கேட் வழியே உள்ளே வந்துகொண்டு இருந்தது!

சசாங்கன் உள்ளே வந்து அபியிடம் இனிப்புப் பெட்டியைக் கொடுத்துவிட்டு, அமர்ந்ததுமே, "நேரில் சொல்லுகிறேன் என்றீர்களே!" என்று மஞ்சரி கேட்டாள்.

"எதையும் திருச்சபை முன்புதான் அரங்கேற்றி ஆக வேண்டும் போல?"

விழி விரித்து நோக்கிய ரஞ்சனி, சின்னவளைக் கையில் பிடித்துக்கொண்டு வெளியேற, அவன் சொன்னான் "சொல்லாமலே உனக்கு நினைவு இருந்திருக்க வேண்டும். சொல்லு, உன் அப்பாவின் ஆசை நம் திருமணமும்தானே?"என்று கேட்டான் சசாங்கன்.

"அந்த எண்ணம் இல்லாமல் இங்கேயே தங்குவேன் என்று நான் சொல்வேனா?"

அவனது குரலில் இருந்த சிறு அழுத்தத்தில் மஞ்சரியின் முகம் கன்றியது.

தந்தையின் ஆசை அதுதான், தெரியும்.

ஆனால் சசாங்கனைப் பற்றி அவள் அறிந்த சில மோசமான விவரங்களை வாய் விட்டுச் சொல்லும், தைரியம் இப்போது அவளுக்கு வர மறுத்தது.

அவன் முகம் திருப்பிக் கொண்டு போய்விட்டால், அப்பாவின் தொழில், தங்கைகளின் வாழ்வு, ரஞ்சனியின் ஆசை, எல்லாம் பாழாகிப் போகும். எல்லாவற்றையும் விட பயங்கரமாய், அந்தக் கடன்காரர்கள் செய்யப் போவதாகச் சொன்ன கேவலம்!

அவசரமாக யோசித்து, மாற்று வழி தேடியபடி "ஆனால்..."என்று இழுத்தாள்.

"என்ன ஆனால்?"

"அது... வந்து மருமகளாக வரும்போதே இவ்வளவு பணம்... அதாவது, இஇவ்வளவு பணச் செலவை ஏற்படுத்தினால், உங்கள் வீட்டில் என்னை ஏற்பார்களா... என்று யோசித்தேன்" என்று ஒருவாறு கோவையாக கூறி முடித்தாள்.

கூரிய ஒரு பார்வையுடன் பின் "என் திருமண விஷயத்தில் அங்கே யாரும் குறுக்கிட மாட்டார்கள்" என்றான் அவன் சுருக்கமாக. "அத்தோடு உன் அமைதிக்காக ஒரு விவரம், இப்போது இங்கே தேவைப்படும் தொகையை, நான் அங்கிருந்து எடுக்கப் போவது இல்லை. வேறு?"என்று கேட்டான்.

பணத்தாசை, பெண்ணாசை என்று, முன்பு சொன்ன குற்றச்சாட்டுகளை இன்னமும் நினைக்கிறாளா என்று கேட்கிறான்!

அந்தக் குறைகள் இவனிடம் இல்லை என்று மறுப்பதற்கு என்ன ஆதாரம் இருக்கிறது? ஆனால், எதைச் சொல்லியும், இன்று இவனை மறுப்பதற்கு இல்லையே!

தொழிற்சாலை நிர்வாகத்தை எடுத்துக் கொள்வதாலேயே, அவனது பணத்தாசைக்கு திருப்தி ஏற்பட்டு போகலாம்.

பெண்ணாசை... அன்று வாங்கிய ஆடைகளை அணிகிறவள், இன்னமும் அவன் வாழ்வில் இருக்கிறாளா, என்னவோ? இருந்தால், அதைப் பற்றியும்ட அவள் செய்வதற்கு ஒன்றுமில்லை.

கசையடிக்காரன் பற்றிய நினைவு மஞ்சரிக்கு வந்தது.

அதிகத் துன்பம் அனுபவிக்கவும் தயார் என்று எண்ணினாளே! அவள் உயர்வாக மதிக்கும் நல்ல நடத்தை இல்லாத, குணத்தில் இப்படிப்பட்ட குறைகள் உள்ள ஒருவனை மணப்பதுதான், அவள் அனுபவிக்கக்கூடிய அதிக வேதனையோ?

அப்படியானால், மறுக்காமல், ஏற்க வேண்டியதுதான்!

வெறுமனே தலையை அசைத்தாள் அவள்.

"அப்படியானால், உன் தங்கைகளைக் கூப்பிட்டுச் சொல்லி விடலாம்தானே?"

ஆழத்துக்குள் போய்க்கொண்டே இருப்பது போன்ற உணர்வுடன், மஞ்சரி தலையாட்டினாள். ரஞ்சனியும், அபியும் வந்ததும், அவனே தங்கள் திருமண விவரம் வெளியிட்டான்.

ரஞ்சனி முறைப்படி வாழ்த்துத் தெரிவிக்க, அபி மகிழ்ச்சி தாங்காமல் துள்ளிக் குதித்தாள். சசாங்கன் டீச்சர் வைத்துப் படித்த மரமேறும் திறமையை, இங்குள்ள மரங்களில் ஏறி, இறங்குவதில் காட்ட வேண்டுமாம். அக்காவும், அவனும் மதிப்பெண் கொடுப்பார்களாம். ஃபெயிலாகிவிட்டால், இன்னொரு டீச்சர் வைத்துப் படிக்க வேண்டுமாம்!

அவளது கள்ளமற்ற சளசளப்பு, மஞ்சரியின் கற்பனையைத் தூண்டி அவள் முகத்திலும் மலர்ச்சியைக் கொணர்ந்தது!

மூவருமாக கலகலத்துக் கொண்டிருந்தபோது, திடுமென தேவானை வந்து நின்றாள். "போவு மிந்தி, பெரியம்மாவைக் கண்டுகினு போவணுமாம், சொல்லச் சொன்னாங்க" என்று தெரிவித்தாள்.

இப்போது என்ன குண்டு போடப் போகிறாள்? ஏதாவது சொல்லித் திருமணத்தை நிறுத்திவிடுவாளா? அச்சத்தில் மஞ்சரியின் மனம் தவித்தது.

அவள் மிரண்டு விழிக்கும்போதே, அபி அவனது கையைப் பற்றி "வேண்டாம் அங்கிள், போகாதீங்க. இப்பவெல்லாம் சித்தி, கெட்ட சித்தி ஆகிவிட்டாங்க. அவங்ககிட்ட பேசவே போகாதீங்க!" என்று அவளது சிறு வயதிற்கே உரிய விதத்தில் வெளிப்படையாகச் சொன்னாள்.

சசாங்கன் மஞ்சரியைப் பார்த்தான்.

"ரொம்பவும் வேறுபாடாகத்தான் தெரிகிறார்கள்" என்றுஇறங்கிய குரலில் முணுமுணுத்தாள் அவள்.

"அதைச் சத்தமாகத்தான் சொல்லேன். இதோ பாருங்கள் சசாங்கன் சார். அபி சொன்னது போல எங்கள் சித்தி இப்போது மாறுபட்ட சிற்றன்னையாகவே நடந்து கொள்கிறார்கள். அதனால் அவர்கள் சொல்லும் எதை வைத்தும், இப்போதைய முடிவை

மாற்றிவிடாதீர்கள். அவ்வளவுதான். அதைத்தான் அபியும் சொன்னாள். அக்கா வழவழா கொழ கொழாத்ததும் அதையேதான்!" என்று தெளிவாக கூறி முடித்தாள்.

லேசாக முறுவலித்தான் சசாங்கன். "அபி, இனிமேல் உனக்கு நான் அங்கிள் அல்ல. ரஞ்சனி, உனக்கு சாரும் இல்லை. என்ன உறவு என்று, உங்கள் அக்காவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள்" என்று சிறு நகையுடன் இயம்பியவன், அங்கேயே நின்று கொண்டிருந்த தேவானையைப் பார்த்து "இதோ, உடனே வருகிறேன் என்று போய்ச் சொல்லு போ" என்று பணிந்தான்.

அவள் தயங்கி நிற்கவும் "உன்னைப் போகச் சொன்னேன்" என்று உறுத்த நோக்க, அவள் வேகமாகப் பின்னடித்துத் திரும்பிச் சென்றாள்.

"ஐந்தாம்படை!" என்று ரஞ்சனி எரிச்சல் பட, "நாங்க என்ன பேசினாலும், ஒட்டுக் கேட்டிட்டு, சித்தியிடம் போய்ச் சொல்லும், அங்..." என்று தொடங்கிய அபி, பேச்சை நிறுத்தி, "அங்கிள் இல்லைன்னு சொன்னீங்களே, பின்னே என்ன சொல்லட்டும்?" என்று கேட்டாள்.

"அதை, உன் அக்காவிடம் அல்லவா, கேட்கச் சொன்னேன்" என்று சிரித்தான் அவன்.

"என்னதுக்கா?" என்ற தங்கையின் கேள்வியில் மஞ்சரியின் முகம் சிவக்கும்போதே, வினாடிக்குள் சசாங்கன் எப்படி மாறுகிறான் என்றும் அவளுக்குத் தோன்றியது.

சற்றுமுன் தேவானையை உறுத்து விழித்து விரட்டியதும் உடனேயே இப்போது கனிந்து சிரிப்பதும்!

வேண்டாதவர்களை மிரட்டுவதும், வேண்டியவர்களை அணைப்பது என்று, நல்ல விதமாகவும், சொல்லலாம். வினாடிக்குள் தேவையானபடி முகம் மாறும் கைதேர்ந்த நடிகன் என்றும் சொல்லலாமே!

அவள் மனம் குழம்புவது தெரியாமல் "அக்கா சொல்லுக்கா"என்று அவளது கையைப் பிடித்துக் குதித்தாள் அபரஞ்சி.

"சித்தியிடம் பேசிவிட்டு வரட்டும் அப்புறம் சொல்கிறேன்ஞ் என்று தங்கைக்கு பதில் சொல்வதைத் தள்ளிப் போட்டாள், மஞ்சரி.

புரிந்தவன் போல சசாங்கன் மேலும் சிரிக்கையில் "சித்தியிடம் கட்டாயம் பேசித்தான் ஆக வேண்டுமா? அவர்கள் என்ன கதை



சொல்லி, எதைக் கெடுப்பார்களோ என்று பயமாக இருக்கிறதே!" என்று ரஞ்சனி கவலையுடன் கூறினாள்.

"கவலை வேண்டாம். நான்அவர்கள் சொல்வதைக் கேட்பதற்காகப் போகவில்லை. நான் சொல்வதை அவர்களைக் கேட்க வைக்கவே போகிறேன்" என்றவன் மஞ்சரியைப் பார்த்து, "தொழிற்சாலையின் பொறுப்பை ஏற்று நடத்தும்படி வேதவல்லிக்கு எழுதிக்கொடுத்ததின் நகல் உன்னிடம் இருக்கிறதா?" என்று கேட்டான்.

"இல்லையே!" என்றாள் அவள் "சித்தியிடம் இருந்ததைக் கூட சுக்கல் சுக்கலாகக் கிழித்துக் குப்பையில் போட்டுவிட்டார்களே!" என்றாள் யோசனையோடு, சிற்றன்னை ஏன் அப்படிக் கிழிக்க வேண்டும்?

அவசரமாக யோசித்து "வக்கீல் அங்கிள் ஒரு தரம், அது சட்டப்படி சரியாக இருக்கிறதா என்று பார்ப்பதற்கு வாங்கிப் போனார். மறுநாளே திருப்பிக் கொடுத்துவிட்டார். ஏன்? அது தேவைப்படுகிறதா? என்னிடம் இல்லையே!"என்று கவலைப்பட்டாள் அவள்.

முகம் கனிய "கவலைப்படாதே. தாயாய் எண்ணியவள் மாறிப் போனாலும், சுகவனம் சாரிடம்பேரன்பு பூண்ட ஒரு வக்கீல் அவருக்குக் கிடைத்திருக்கிறார். சில உண்மைகளை, உங்கள் தந்தை அவரோடு பகிர்ந்து கொண்டதாலேயே, இதன் நகல் ஒன்று அவரிடம் பத்திரமாக இருக்கிறது. இன்னும் ஒன்று சொல்லுங்கள். உங்கள் சித்தி, இதே வீட்டில்தான் இருக்க வேண்டும் என்று உங்கள் யாருக்கும் ஆசை இருக்கிறதா?" என்று அவன் கேட்டு முடிக்கு முன்னரே "இல்லவே இல்லை! சித்தி இங்கே வேண்டவே வேண்டாம்!" என்றார்கள் சின்னவர்கள் இருவரும் சேர்ந்து.

அவன் கேள்வியாய் மற்றவளை நோக்க "அவர்களைப் பார்க்கவே கசப்பாகத்தான் இருக்கிறது. ஆனால் அவர்களுக்கு வேறு யாரும் இல்லையே! எங்கே போவார்கள்?" என்றாள் மஞ்சரி.

"அது அவர்கள் பிரச்சினை, நமக்கென்ன?" என்றாள் ரஞ்சனி அலட்சியமாக.

"ஆமாம்க்கா. போகட்டும் என்னோரமும் உன்னைத் திட்டி அழ வைக்கிறாங்களே.. அதனாலே எனக்கு சித்தியை பிடிக்கவே இல்லை" என்றாள் அபி.

"அபிக்குட்டி சொன்னால், அதி மாற்றம் ஏது? போகச் சொல்லி வெளியேற்றும் விடுகிறேன். முக்கியமாக மஞ்சரி, அவர்களை

உரிமைக்காகத்தான் வீட்டின் பொறுப்பை கேட்டேன். இப்போது உன் மன நிம்மதிக்காக, அவர்களுக்கு ஒரு தங்குமிடம் ஏற்பாடு பண்ணிக் கொடுக்கிறேன். சரிதானா? இப்போது சொல்லுங்கள், உங்கள் சித்தியை சந்திக்கப் போகட்டுமா?" என்று கேட்டான் சசாங்கன்.

அப்புறம் நடந்தது எல்லாம், ஏதோ நாடகம் பார்ப்பது போல இருந்ததே தவிர, அவளது சொந்த வாழ்வில் நடக்கும் சம்பவங்களாகவே மஞ்சரிக்குத் தோன்றவில்லை.

அவ்வளவு எளிதாக சிற்றன்னை அந்த வீட்டை விட்டு வெளியே போவாள் என்று மஞ்சரி நினைக்கவே இல்லை.

ஆனால் நெட்டி முறித்து ஏதேதோ புலம்பியபடி, பெட்டிகள், பீரோ மற்ற அவளது அறைச் சாமான்களோடு வேதவல்லி வெளியேறத்தான் செய்தாள்! தேவானையும் மூக்கை உறிஞ்சியபடி உடன் சென்றாள்.

அதன்பின் காட்சிகள் வேகவேகமாக மாறின.

வக்கீல் மனைவியோடு வந்தார்.

வீடு விழாக்கோலம் பூண்டது.

பெண் வீட்டாராக வக்கீலின் குடும்பம் நின்றது.

சசாங்கனுடைய பெற்றோர் மற்றும் உறவினர்கள் வந்தார்கள்.

"இப்படி ஒரு ரதி மருமகளாக வேண்டும் என்று இருக்கும்போது, வேறு எதுவும் நடக்குமா?" என்று உச்சி முகர்ந்தாள் சசாங்கனுடைய அன்னை!

'வேறு' என்றால் அந்த... என்று மஞ்சரி யோசிக்குமுன், அவளது சங்கு கழுத்தில் ஒரு வைரமாலை பூட்டப்பட்டது.

ரஞ்சனியும் அபரஞ்சியும் பட்டும் நகைகளும் அணிந்து, தேவதைகளாக உலா வந்தனர். வாத்திய கோஷங்களோடு திருமணம் நடந்தது.

பெரிதாக ஈடுபாடு ஏற்படாதபோதும், எதையும் மறுக்கவும், மஞ்சரிக்கு தோன்றவில்லை.

நெருங்கிய உறவில் மறுநாள் ஒரு திருமணம் என்று சசாங்கனுடைய குடும்பம் விழுப்புரத்துக்கு செல்ல, இந்தக் குடும்பம் வீடு வந்தது.

"புத்திசாலியாக நடந்துகொள்" என்று சொல்லி, அறைக்குள் அனுப்பிவிட்டு, வக்கீலுடைய மனைவி கிளம்பினாள்.

உல்லாசமாக அருகில் வந்த சசாங்கனைப் பார்த்ததும், மஞ்சரிக்கு



உடம்பு கூசியது!

ஃபீனிக்ஸ் மாலில் எவளுக்கோ கண்டபடி உடைகள் வாங்கியவன், அதிகப் பணம் கேட்டு, நடக்க இருந்த திருமணத்தை நிறுத்தி, அந்தக் குடும்பத்தையே குலைத்தவன், அவன், இப்போது அவளுடைய கணவன்!

இப்போது அவள் என்ன செய்ய வேண்டும்? விதியே என்று, அவனுடைய பத்தோடு பதினொன்றாக, அவனோடு வாழ்க்கை நடத்துவதா? சீச்சீ!

அவளது வெறித்த பார்வையில், சசாங்களின் உல்லாச நடை நின்றது "என்ன?" என்று ஒற்றை வார்த்தையில் கேட்டான்.

இதுதான் அவளுக்குக் கிடைத்திருக்கும் ஒரே வாய்ப்பு. ரஞ்சி சொல்வது போல, வழவழா கொழ கொழா என்று விட்டுவிடக் கூடாது.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு நிமிர்ந்து நின்று "பாருங்கள், நமக்குள் நடந்தது, ஒரு ஒரு... வெறும் வசதிக்கான திருமணம். உணர்வு பூர்வமானது அல்ல. அதனால் அதுபோல உறவு வேண்டாம்" என்று சொல்லி முடித்தே விட்டாள்

"அதாவது?"

"நீங்கள் என்னைத் தொடக்கூடாது!" என்றாள் பிடிவாதக் குரலில்.

கணத்தில் அவனது கண்கள் தணலாய் ஜொலித்தன.

தன்னையறியாமல் அவள் பின்னடைகையில் "அப்படி என்னடி நீ பேரழகி? உன்னை விட்டால், பெண்ணே கிடையாது என்றா நினைத்தாய்?" என்று சீறியவன், திரும்பிச் சென்று கதவைத் திறந்து வெளியே சென்று விட்டான்.

முகத்தில் அறை வாங்கிய உணர்வுடன் மலைத்து நின்றாள் மஞ்சரி.



## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 11

சற்று நேரம் மஞ்சரிக்கு ஒன்றும் ஓடவில்லை.

அவள் ஒன்றும் தன்னை பேரழகி என்று சொல்லிக் கொண்டது இல்லையே! தன் அழகுக்கு சசாங்கன் ஏற்றவன் இல்லை என்பதற்காக அவனை மறுக்கவும் இல்லை.

தப்பானவன்அவன், அதைக் கூட குறிப்பிட்டுக் குற்றம்
சுமத்தாமல், ஒரு கண்ணியத்தோடு சொன்னால், சுள்ளென்று இப்படி
மட்டமாகப் பேசிவிட்டு வெளியே...

கேட் திறக்கும் ஓசை கேட்கவும், ஜன்னலுக்கு ஓடிப்போய்ப் பார்த்தாள்.

*சசாங்கனேதான்.*

கடவுளே! வீட்டை விட்டே வெளியே போகிறானே! திரும்பி வருவானா?

ஒருவேளை, வராவிட்டால் மற்றவர்களிடம் என்ன சொல்லுவது?

நிஜத்தைச் சொன்னால்கூட எல்லாம்தெரிந்துதானே கணவனாக ஏற்றுக் கொண்டாய்? அவனது பணம் வேண்டும், அவன் மட்டும் வேண்டாமா என்று அவளைத்தானே தப்பாகப் பேசுவார்கள்?

நாளைக்கு வரவேற்புக்காக, விழுப்புரம் செல்ல வேண்டுமே! அங்கே எல்லோரும் காத்திருக்கும்போது இவன் வரவே இல்லை என்றால்?

போய்க் கூட்டி வரக்கூட முடியாமல், எங்கே போயிருக்கிறான் என்றே தெரியவில்லையே!

அவனுடைய செல்ஃபோன் எண் அவளுக்குத் தெரியும். ஆனால் என்ன சொல்லித் திரும்ப வருமாறு கூப்பிடுவது? தப்பாகப் பேசிவிட்டேன், மன்னித்துவிடு என்றா? அப்போது அந்தப் பேச்சை திருத்திச் சொல்லவும், அதன் விளைவை ஏற்கவும் கூட, அவள் தயாராக இருக்க வேண்டுமே!

அது... ஊகூம், அவளால் முடியவே முடியாது.

ஆனால்'அந்த'ப் பெண்ணிடம் போயிருப்பானோ, என்று ஒரு தரம் எண்ணியபோது மட்டும், அவளுக்கு உடம்பு எரிந்தது. சற்று கலங்கிவிட்டு, அப்படி நினைத்ததற்காகத் தன்னையே கடிந்து கொண்டாள்.

இன்றுதான், சசாங்கனுக்கும் அவளுக்கும் திருமணம் நடந்திருக்கிறது. என்னதான் மனைவியுடன் கருத்து வேறுபாடு என்றாலும், இன்னொருத்தியுடன் சுகிக்கும் அளவு, சசாங்கன் கொடியவன் அல்ல!

ஆனால் அவன் எங்கே?

ஏதேதோ எண்ணி,எதுவும் செய்ய முடியாமல் தவியாய்த் தவித்து, அறைக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து கால் ஓய்ந்து உட்கார்ந்து,



உட்கார்ந்த நிலையிலேயே தூங்கி, காலையில் அவள் விழித்தபோது,
விடிந்து வெகு நேரமாகி இருந்தது.

பழக்கமற்ற நிலையிலிருந்து சோம்பல் முறித்து எழும்போதே மனதில் கலக்கமும் எழுந்துவிட்டது.

இப்போது தங்கைகளிடம் என்ன சொல்வது?

ஆனால், அதற்காக பயந்துகொண்டு, அறைக்குள்ளேயே இருந்துவிட முடியாதே!

பல் துலக்கி முகம் கழுவிக்கொண்டு வெளியே வந்தால், கீழே சமையல் அறையில் கலகலவென்று பேச்சும் சிரிப்பும் கேட்டது.

ஒன்று.. சசாங்கனின் குரல்தான். விரைந்து சென்று பார்த்தால், ரஞ்சனியும் அவனும் சிரித்துப் பேசியபடி, சமையல் அறையில் காஃபி போட்டுக் கொண்டிருந்தார்கள்.

வள்ளித் தெய்வானை என்று சித்தி சொன்னது, சற்றும் நியாயமற்று. அப்போது மஞ்சரிக்கு நினைவு வந்தது.

*சீச்சீ!* சித்தி பொய் சொல்கிறவள்! வருந்தப் பேசுகிறவள், அவன் எப்படி பட்டவன் என்றாலும், அவனுடைய தங்கை நல்லவள்!

ஆனாலும் அவர்களது சிரிப்பில் கலந்து கொள்ள முடியாமல், சுற்றிப் பார்த்தால், சற்றுத் தள்ளி சமையல்காரம்மாவின் தலை தெரிந்தது. அவளும் வாயைப் பொத்திச் சிரித்துக் கொண்டுதான் இருந்தாள்.

மஞ்சரியைக் கண்டுவிட்டு "நான் சொன்னாக் கேட்கலைம்மா. அவங்களே காஃபி போடுகிறாங்களாம்!" என்று சிரித்த முகமாகவே கூறினாள்.

திரும்பிப் பார்த்துவிட்டு "ஆமாம்க்கா! இது புது நாகரீகம். புது
மனைவி, அதிகாலையிலேயே எழுந்து காஃபிபோட்டு எடுத்து வந்து,
கணவனை எழுப்புவது, பழையகாலப் பாடாவதி ஸ்டைலாம்.
அத்தான் சொல்லுகிறார்! இன்றைய நாகரீகம், கணவனும்
மைத்துனியும் காஃபி டோஸ்ட்டுகளுடன் மணப் பெண்ணை...
அச்சோ! டோஸ்ட் கருகுகிற வாசம் வரவில்லை?" என்று ரஞ்சனி
அவசரமாக டோஸ்டரிடம் ஓடி வர, அதற்குள் அருகில் இருந்த
டோஸ்டரை கை நீட்டி ஆஃப் செய்தாள் மஞ்சரி.
"ஆக காலைச் சமையலில் என் மனைவியின் பங்கும் சேர்ந்து
விட்டது"என்றான் சசாங்கன் உற்சாகமாக.
சுற்றும் முற்றும் பார்த்து "அபி எங்கே?" என்று மஞ்சரி

வினவினாள்.

"இன்று விழுப்புரம் செல்கிறோமில்லையா? அதனால் பள்ளிக்குப் போக முடியாதாம். அதனால், படுக்கையை விட்டு எழ மாட்டேன் என்றுவிட்டது. சோம்பேறி!" என்று தங்கையை செல்லமாக வைதாள் ரஞ்சனி.

சிரிப்பும் பேச்சுமாக காலைக் காஃபி முடிந்தது.

சசாங்கன் எழுந்து "விழுப்புரம் பயணம் பற்றி, நானும் மஞ்சரியும் பேச வேண்டியிருக்கிறது. நீ போய் அபியை எழுப்பு, ரஞ்சனி. அல்லது நீயும் கொஞ்ச நேரம் தூங்குவதானாலும் சந்தோஷமாகத் தூங்கு. மதியம் கிளம்ப வேண்டும்" என்றுவிட்டு, மஞ்சரியைப் பார்த்தான்.

மனைவியாய்ச் கூடச் செல்ல வேண்டுமாம்.

தங்கையின் பார்வை தன்மீது இருப்பதை உணர்ந்து, கடமை தவறான மனைவியாக எழுந்து "அபியை எழுப்பி வயிற்றுக்குள்ளதையாவது போட்டு மேலே தூங்க விடு, ரஞ்சி" என்றுவிட்டு கணவன் பின்னே சென்றாள் மஞ்சரி.

"அக்கா நாங்கள் இருவரும் எங்களை கவனித்துக் கொள்வோம். நீ அத்தானுக்கு வேண்டியதை மட்டும் பார்த்தால் போதும்" என்றாள் ரஞ்சனி உரக்க.

இவள் வேறு! சும்மா இராமல் உளறிக் கொட்டிக்கொண்டு.

இப்போது சசாங்கன் என்ன சொல்ல அழைத்துப் போகிறான் என்று அதுவே மண்டையைக் குடையும்போது. பெரிதாக சொல்ல வந்துவிட்டாள்.

இவன் என்ன சொல்லக்கூடும்?

முன்தினம் இரவில் பேசியதை எண்ணிப் பார்த்தால், என்ன வேண்டுமானாலும் பேசலாம்.

உன் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஓர் இளிச்சவாயன் வேண்டும். ஆனால் மகாராணி பதிலுக்கு விரலைக் கூட அசைக்க மாட்டாயா? அப்படி என்ன நீ பெரிய ஆள் என்றும் கேட்கலாமே! என்ன பேரழகி என்று கேட்டவன்தானே? அதுவும் டீ போட்டு! உனக்குப் பணி புரிவதே பாக்கியம் என்று வாழ என்னால் முடியாது என்று, அவன் விட்டுவிட்டுப் போய்விட்டால்!

சொடக்குப் போடும் நேரத்தில் உலகை வலம் வரும் சக்தி படைத்த மனது, என்னென்னவோ எண்ணித் தவிக்கையில், அவளது அறைக்குள் இருவரும் வந்து சேர, கதவைத் தாளிட்டான் அவன்.



அவளது மிரண்ட பார்வையில் என்ன கண்டானோ, பார்வை இளக, மெல்லத் தலையசைத்தான் அவன்.

"இதோ பார் மஞ்சரி. உன் மனநிலை எனக்குப் புரிகிறது. இன்றுவரை என்னை நீ தவறாகவே எண்ணி வந்திருக்கிறாய். எதையும் எடுத்து சொல்லி, உன்னை மாற்ற அவகாசம் இல்லாதபடி மாமாவின் தொழிற்சாலையைத் தூக்கி நிறுத்துவது 'சசி ப்ராடக்ட்ஸ்' கிளை தொடங்குவது என்று அதிகமான வேலைகளுக்கு இடையே அவசரமாக இந்தத் திருமணம்! ஏதோ பதட்டத்தில் நீ ஒன்றும் சொல்ல, நானும் திருப்பிக் கொடுத்து, நோகடித்து விட்டேன். சாரிம்மா. போகட்டும் முடிந்தவரை, அதை நாம் இருவருமே மறந்து விடுவோம். இப்போதைக்கு என்னால் காத்திருக்க முடியும். நீயும் நம் வாழ்க்கை வெற்றிக்கு உதவ வேண்டும். ஆனால் எல்லாமே நமக்குள் இருக்கட்டும் வெளியே காட்டிக் கொள்ள வேண்டாம். என்ன சொல்லுகிறாய்?" என்ற அவளிடம் அபிப்பிராயம் கேட்டான்.

பெரிதாகக் கருத்துச் சுதந்திரம் கொடுக்கிற மாதிரி, காட்டிக் கொள்கிறானே, இதில் எப்படி மாற்றுக் கருத்துச் சொல்லமுடியும்? ஒத்துக்கொண்டுதானே தீர வேண்டும் என்கிற திமிரில் சொல்வதுதானே?

அதெல்லாம் முடியாது. உன்னுடைய எல்லா தப்புகளையும் சகித்து, உன்னோடு நான் ஒரு நாளும் வாழ மாட்டேன் என்று தன் மனதில் இருப்பதை வெளிப்படையாகச் சொன்னால், இவன் முகம் எப்படி மாறும் என்று எண்ணி பார்த்தவளுக்கு உள்ளூர சிரிப்பு வந்தது.

ஆனால், இது நடக்க முடியாத கனவு. சந்தோஷமாகக் கற்பனை பண்ணலாம். அவ்வளவுதான், அவளால் இயன்றது!

அப்படி மஞ்சரி ஏதேனும் சொல்லி, அவன் மட்டும், சரிதான் போடி என்று முகத்தைத் திருப்பிக்கொண்டு போய்விட்டால், அப்புறம் எல்லாம், பழையபடி நாசமாகிப் போகும்! துருப்புச் சீட்டு அவன் கையில்தான் இருக்கிறது! அது அவனிடம் இருக்கும்வரை, அவன் பொறுத்துதான்போக வேண்டும்.

சசாங்கன் பதிலுக்கு காத்திருப்பதைஉணர்ந்து, வெறுமனே தலையை மட்டும் ஆட்டி வைத்தாள்.

நல்லவேளையாக அவனும் அதிலேயே திருப்தி அடைந்து, விழுப்புரத்துக்கு எத்தனை மணிக்கு கிளம்ப வேண்டும் என்னென்ன

வேண்டும் என்று அது பற்றிப் பேசலானான்.
எடுத்துக்கொள்ள வேண்டும் என்று அது பற்றிப் பேசலானான்.
போக்குவரத்து நெரிசலைக் கணக்கிடாமல் கிளம்பியதாலோ
என்னவோ, விழுப்புரத்தில் வரவேற்பு தொடங்க சில நிமிடங்களே
இருக்கும் நேரத்தில்தான் இவர்கள் போய்ச் சேர்ந்தார்கள்.
என்ன வேக வேகமாகச் செய்தாலும், பெண்கள் மூவரும் உடை
மாற்றி, அலங்காரத்தை முடிக்கும்போதே, வரவேற்புக்குரிய
குறித்திருந்த நேரம்தாண்டி மேலே பத்து நிமிஷங்கள் தாமதம்
ஆகிவிட்டிருந்தது. நல்லவேளையாக, மூவருக்கும் அலங்காரம்
செய்வதற்காக, தனித்தனியாகவே, சசாங்கனுடைய தாயார்
ஆட்களை ஏற்பாடு செய்து விட்டிருந்ததால், இந்த அளவுக்குச்
சீக்கிரமாகத் தயாராக முடிந்தது.

அவசரமாக ஓடிப்போய் காரில்ஏறி, வரவேற்பு மண்டபத்துக்கு சென்று, தயாராக இருந்த கணவனோடு மேடையில் ஏறி, ஜோடி சேர்ந்து நின்றபோது, மஞ்சரிக்கு மூச்சு வாங்கியது.

வெளியே தெரியதபடி சிறுசிறு வேக மூச்சுக்களை எடுத்துவிட்டபடி பார்த்தால், அருகில் நின்ற முதல் சுற்று உறவினர் முகங்கள் திருப்தியோடு கூடிய புன்னகையை காட்டின.

அந்தப் பக்கத்தில் சசாங்கன் குடும்பம் செல்வாக்கு உடையது என்பதை, வரவேற்புக்கு வந்த கூட்டம் காட்டியது. நிறைய பேர் என்பதோடு வளமானவர்காளவும் தோன்றினர்.

யார் யார் என்று, எல்லோரையும் அறிமுகம் செய்து வைத்தபோது அது தெரிந்தது. ஆனால் யாருமே நின்று பேசவில்லை

அறிமுகம் முடிந்ததுமே, கச்சேரி கேட்க உணவருந்த என்று, யாராவது அவர்களை அழைத்துச் சென்றவாறு இருந்தனர்.

அதிலும் ஒரு பெரியவர், கம்பூன்றித்தான், வந்ததே. அவரையும் இன்னார் என்று பெயர், தொழில் சொல்லி அறிமுகம் செய்ததுமே 'பசியாற வாருங்கள்' என்று யாரோ இழுக்க அவர்தடுமாறிப் விழப் போனார்.

சட்டெனக் கை நீட்டி, பெரியவரை, விழுந்துவிடாமல் காத்து "என்ன தாத்தா, இவ்வளவு கஷ்டப்பட்டு கொண்டு வர வேண்டுமா? சொல்லியிருந்தால், நானே உங்களை வந்து பார்த்திருப்பேனே!"என்றான் சசாங்கன் பரிவோடு,

"நீ வருவாய். எனக்காகச் செய்வாய். ஆனால், அந்த மரியாதைக்குத்தான் எனக்கு கொடுத்து வைக்கவில்லையே!



அதனால் நானே..."என்று அவர் முடிப்பதற்குள், அருகில் வந்த இளைஞன் சசாங்கனுடைய சித்தப்பா மகன் என்று அடையாளம் காட்டப்பட்டவன் குறுக்கிட்டு "என் கையை பிடித்து கொள்ளுங்கள்மாமா. நான் கூட்டிப் போகிறேன் மேடையில் இருந்த இறங்குவது, உங்களுக்குச் சிரமமாக இருக்கும்" அழைத்தான்.

மஞ்சரியை ஒரு தரம் பார்த்துவிட்டு, "அது சரிதான்" என்று அவனோடு சென்றார் அவர்.

இந்தப் பக்கம் "மாதவியுடைய தாத்தா கம்பை ஊன்றிக்கொண்டு, மேடைக்கு வந்ததை வீடியோவில் பார்த்தேனே, அவர் எங்கே?"என்று கேட்ட ஒரு தாட்டியான பெண்மணியை நிறுத்தி, நேர் எதிர்ப்புறமாக காட்டி "அந்தப் பக்கம் போய்ப் பார், பாமா. சித்தியைக் கூட்டிப்போ, பத்மா" என்று யாரிடமோ மஞ்சரியுடைய மாமியார் சொல்லிக் கொண்டிருந்தாள்.

ஏன் இப்படி மாற்றிச் சொல்ல வேண்டும். ஏதோ கவனத்தில், திசை பற்றிய வார்த்தை மாறிவிட்டதா?

திருத்திக்கொள்ளும்படி சொல்லலாமா என்று மஞ்சரி யோசிக்கும்போதே, அந்தக் குண்டு பாமாவை வேறு பக்கமாகக் கூட்டிப்போன பத்மா, தலையை மட்டும் திருப்பி, தன்னை ஏவியவளைப் பார்த்துக் கண்ணைச் சிமிட்டிவிட்டுப் போனாள்.

ஆக, வார்த்தை மாறவில்லை! வேண்டும் என்றுதான் வேறு புறம் கூட்டிப போகிறார்கள்!

அப்படியானால்... சற்று முன், அந்தப் பெரியவரையும் நிற்க விடாமல் இழுத்துக்கொண்டு போனது, மஞ்சரிக்குப் படம் போல நினைவு வந்தது.

அவர்கள் இருவரும் ஏன் பேசக்கூடாது? அதுவும்,அவள் அருகே? எல்லோருமாக, எதையோ அவளுக்கு மறைத்து நாடகமாடுகிறார்களா?

சந்தேகம் என்று வந்தபின், எல்லாம் ஐயத்தை உறுதிப்படுத்துவது போல, நடந்திருப்பதாகத்தான் தெரிந்தது.

எத்தனையோ முறை, சென்னைக்கும் விழுப்புரத்துக்கும் இடையே பயணம் செய்து பழகியவன் சசாங்கன். இந்தச் சாலையின் போக்குவரத்து, எந்த நேரம் எப்படி இருக்கும் என்ற நிச்சயமாகத் தெரிந்திருக்கும். அதற்குரிய கால அவகாசம் வைத்து, ஏன் முன்னதாகக் கிளம்பவில்லை?

அதாவது, முன்னதாக வந்து, எல்லோருடனும் கலந்து பழக நேரம் இருந்தால், அந்தச் சமயத்தில் அவளிடம் யாரேனும் எதையேனும் கூறிவிடக்கூடும் என்றுதான், அந்த நேரம் கிடைக்காத அளவு தாமதமாகக் கிளம்பியதா? அப்புறம், பெண் அலங்காரம் என்று தனியறையில் அடைத்தாயிற்று! இங்கேயும் யாரையும் அவளிடம் நின்று பேசவிடவில்லை!

சசாங்கன் எப்படிப்பட்ட மதனகாமராஜன், எவ்வளவு பணத்தாசை பிடித்தவன் என்பதை, அவள் தெரிந்து கொண்டுவிடக்கூடாது என்பது காரணமாயிருக்குமோ? அசட்டு முயற்சி! அவளுக்குத்தான் எல்லாமே ஏற்கனவே தெரியுமே!

தெரிந்துதான், வேறு வழியில்லாமல் மஞ்சரி தன்னைத்தானே களப்பலி கொடுத்திருக்கிறாள்!

இது தெரியாமல் மூடி மறைக்கப் பெரிதாக முயற்சி பண்ணுகிறார்களே! அல்லது இது வேறா?

அவளது காதருகே குனிந்து "ரொம்ப அசதியாக இருக்கிறதாம்மா? முகம் வாடி விட்டதே! வேண்டுமானால் உட்கார்ந்து கொள்கிறாயா?" என்று பரிவான குரலில் கேட்டான் சசாங்கன்.

அச்சோ! இது வேறா? அவளையே பார்த்துக்கொண்டா இருக்கிறான்!

தன்னை மீறி உள்ளம் குளிரும்போதே, தனனைத்தானே மானசீகமாக ஓங்கி ஒரு குட்டு குட்டிக் கொண்டாள் மஞ்சரி.

இங்கத்தி திருவிளையாடல் எதுவும் தெரிந்துவிட்டதோ என்ற கவலையில் கேட்கிறான். இதற்குப் போய் சந்தோஷப்படுவதா?

முகத்தைக் கொஞ்சம் சோர்வாக வைத்துக் கொண்டு "கொஞ்சம் அசதிதான். ஆனால் பரவாயில்லை சமாளித்துக் கொள்ள முடியும்" என்றாள் அவள்.

அவன் சொன்ன முகவாட்டத்துக்குக் காரணம் சொல்லவேண்டும் அல்லவா?

கணவன் வீட்டில், அவனோடு தனி அறையில் தங்க நேரும் என்பது, மஞ்சரி எதிர்பார்த்ததுதான்.

ஆனால், ஒரு தலையணை, போர்வையை எடுத்தபோது, அவளது கைகளைப் பற்றி, விழுங்குவது போலப் பார்க்கவும் அவள் திகைத்தாள்.

இவன் என்ன, காலையில் கொடுத்த வாக்கை அதற்குள்



மறப்பானா?

அவளது கைகளை ஒரு தரம் அழுத்திவிட்டு "உன்னைப் பார்த்தால், எனக்குப் பரிதாபமாக இருக்கிறது, மஞ்சு"என்றான் அவன்.

'மஞ்சு'வா என்று உள்ளூர புகைந்தாள் அவள். கையை உருவிக்கொண்டு "ஏனோ?" என்று கேட்டாள் அவள்.

"நீ கெட்டவள் அல்ல. தன் மதிப்பும் அதிகம். என்னளவில் நீ நினைத்தது பேசியது எல்லாம தப்பு என்றுஅறியும்போது, எவ்வளவு வருத்தப்படப் போகிறாய் என்று எண்ணிப் பார்க்கும்போது நீ ரொம்பவே பாவம்தான்" என்றான் அவன் இரங்கிய குரலில்.

"என்னைப் பற்றி இரண்டு சொன்னீர்கள். சரியேதான். நான் முட்டாள் அல்ல என்று புரிந்து கொள்ளவில்லையே. அது தெரியாமல், இது போலப் பேசினால் நம்புவேன் என்று எண்ணினீர்களே! அதுதான் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது!"என்றாள் அவள் ஏளனம் விரவிய குரலில்.

ஒருகணம் அவளை ஆழப் பார்த்தான் சசாங்கன். பிறகு "நீ கெட்டிக்காரிதான். விஷயத்தை உடனே தெரிந்து கொண்டாயே!"என்று விழி விரித்து வியந்துவிட்டு, "போம்மா போய்ப்படு. நாளைக்குக் காலையிலேயே கிளம்பினால்தான், பள்ளி, கல்லூரிக்கெல்லாம்செல்ல, நேரம் இருக்கும்" என்று படுக்கப் போனான்.

எதிலோ தோற்றுவிட்ட எதையோ இழந்துவிட்ட உணர்வு மஞ்சரிக்கு ஏற்பட்டது. அது என்னவாக இருக்கும்?

மறுநாள் சென்னைக்கு கிளம்பும்போது உறவினர் பலரும், "அடிக்கடி விழுப்புரத்துக்கு வரவேண்டும் வரும்போது அவர்கள் வீட்டுக்கு விருந்துக்கு வர வேண்டும்" என்று அவர்களை அழைத்தார்கள்.

பெரும்பாலும் எல்லோரும் நெருங்கிய உறவினர்கள். அத்தை, சித்தப்பா, அவர்களுடைய மக்கள் என்று சற்றுப் பரந்த உறவினர் வட்டம்! எல்லோருக்குமே சசாங்கனிடம் பாசமும், கூடவே மரியாதையும் இருப்பது தெரிந்தது.

இவனது குணக் கேடுகள் தெரியாமல் இராது. அதிலும் பணத்துக்காகத் திருமணத்தை நிறுத்திய விவகாரம் நிச்சயமாகத் தெரிந்திருக்கும். ஆனாலும், இந்தப் பாசமும் மரியாதையும் எப்படி நிலைத்திருக்கிறது என்று, மஞ்சரிக்கு உள்ளூர வியப்பாக இருந்தது.

ஒருவேளை குடும்ப விசுவாசம் இங்கே சற்று அதிகப்படியோ?

அப்படித்தான் இருக்க வேண்டும். அபி, ரஞ்சியிடமும் எல்லோரும் அன்பாகப் பழகுகிறார்களே, மருமகள் மட்டும் போதும் என்று, அவர்களை அலட்சியப்படுத்தி விடவில்லை.

ஆனால், அவர்களது குடும்பத் தொழிலின் சென்னைக் கிளை, முழுக்க முழுக்க அவன் பொறுப்பில் இருந்ததும் காரணமாக இருக்கலாம். வேதவல்லி மாதிரி, சசாங்கன் சுரண்டி விடக்கூடாதல்லவா?

பின்னதுதான், இந்த அன்புக்கு காரணமாக இருக்கும் என்று, மஞ்சரி தனக்குள் எண்ணிக் கொண்டாள்.

சென்னைக்கு வந்து சில தினங்களில் அவளுக்கு வகுப்புகள் இல்லாத ஒரு நாளில், சசாங்கன் மனைவியை தேவகி இன்டஸ்ட்ரீசுக்கு கூட்டிச் சென்றான்.

அவள் கடைசியாக பார்த்ததற்கு தொழிற்சாலையின் தோற்றம், முழுதாக மாறியிருந்தது.

அன்று அவள் கண்ட பாழடைந்த தோற்றம் அடியோடு மாறி, சுகவனம் நடத்திய காலம் போல, பரபரப்பாக வேலை நடந்தது. முன்னை விட அதிகமோ என்று கூட மஞ்சரிக்குத் தோன்றியது.

நிர்வாகி, பழைய நிர்வாகியே திரும்ப வந்திருந்தார். சசாங்கனின் ஏற்பாடு போலும்.. மனிதர் அவனிடம் அப்படி உருகி வழிந்தார்! கார் பார்க்குக்கே வந்து, வரவேற்று அழைத்துச் சென்றார்.

தொழிற்சாலையைப் பார்வையிடச் சென்றபோது, முன்பு நொந்து பேசிய வயதான ஃபோர்மன் வந்து, மகிழ்ச்சியோடு வணக்கம் செலுத்தினான்.

"நொம்ப நன்றிம்மா. அன்னிக்கு நான் வருத்தமாகப் பேசினதைத் தப்பாக எடுக்காம, நல்ல வேலை செய்திருக்கிறீங்க. மாப்பிள்ளை அய்யா பேசுகிறது, நடக்கிறது எல்லாம் பார்க்கிறபோது நம்ம அய்யாவே சின்ன வயசாகி வந்திட்டது போலத் தொழிலை அப்படிக் கவனிக்கிறார்கும்மா. இப்ப ஜேஜேன்னு வேலை நடக்கிறது, ரொம்ப சந்தோஷமா இருக்குதும்மா" என்று தெரிவித்தார்.

உரியவாறு பதிலளித்த மஞ்சரிக்கும் மகிழ்ச்சியாகவே இருந்தது.

ஆனாலும், அப்பா மாதிரி பார்க்கிறானாமே!

அலுவலகத்தில் உட்கார்ந்து, சசாங்கன் தொழில் தொடர்பாக, நிர்வாகியோடு, பேசியபோது, மஞ்சரி 'ஆர்டர்' புத்தகத்தை எடுத்துப்



புரட்டிப் பார்த்தாள்.

முன்பு காலியாக இருந்த பக்கங்களில் இப்போது பல்வேறு வேலைக் குறிப்புகள் இருந்தன. அவற்றில் 'சசி ப்ராடக்ட்சின் ஆர்டர்கள் பல இருந்தது. அவளை உறுத்தியது.

இந்தத் தொழிலில் சசாங்கனுடைய உறவினர் எல்லோருக்கும் பங்கு இருந்தது, அவளுக்குத் தெரியும். இப்போது மனைவிக்காகச் செய்கிறான் என்று அவர்கள், அவனை தவறாக எண்ண மாட்டார்களா? அங்கே அவர்கள் காட்டிய மதிப்பும் மரியாதையும் குறைந்துவிடாதா?

திரும்பிச் செல்லும்போது, மஞ்சரி அது பற்றி கணவனிடம் கேட்டாள்.

அவளைப் ஒரு பார்வை பார்த்துவிட்டு "என்னைப் பற்றி, அவர்களுக்குத் தெரியும். அதனால் அங்கே யாரும் ஒருபோதும் என்னைத் தப்பாக நினைக்கவே மாட்டார்கள். நான் தப்பு பண்ணமாட்டேன் என்று அவர்களுக்குத் தெரியும்" என்றான் தெளிவாக.

பொடி வைத்த பேச்சு! அதாவது, இந்த உத்தம சிகாமணி பற்றித் தெரியாமல்தான், அவள் அவனைத் தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறாளாம்!

அவனைப் பற்றி அவ்வளவு தெரிந்திருந்தும், அவனுக்காக கவலைப்பட்டு யோசித்ததை, என்னவென்று சொல்ல? வடிகட்டின மடத்தனம்தானே?

மீதிப் பயணம் மௌனத்தில் கழிந்தது.



## உண்மை அறிவாயோ வண்ணமலரே? 12

வாய் வார்த்தையாக எதுவும் பேசாதபோதும், மஞ்சரியின் மனம் மட்டும் பயணம் முழுதும் குமுறிக்கொண்டே இருந்தது.

இந்த சசாங்கன் எப்படிப்பட்டவன் என்று அவளுக்கு நன்றாகத் தெரியும். அவனைப் பற்றி யார் தப்பாக நினைத்தாலும், அவனுக்கு என்ன வந்தது? அதற்காக அவன் கவலைப்படுவானேன்?

அதைவிட மோசம், அவனைப் பற்றி உயர்வாக மற்றவர்கள்

பேசியதும், உச்சி குளிர்ந்து போனது! அப்பா போல என்றால்,அப்படி மகிழ்ந்து விடுவதா?

அப்பாவுக்கு அவமானம் என்று ஆத்திரமல்லவா ஏற்பட்டிருக்க வேண்டும்?

மட்டி மடச்சியாக, என்னவோ காதல் கொண்டு மணந்தவள் போல, அவனுக்காகக் கவலைப்பட்டு, பெருமைப்பட்டு ... சீச்சீ!

வீட்டை அடைந்ததுமே அவசரமாகக் காரை விட்டு இறங்கி, அவனை விட்டு விலகி நடந்தால், இரண்டே எட்டில் அவளை அணுகி, அவளது கையைப் பற்றித் தடுத்து நிறுத்தினான் சசாங்கன்.

இது வேறு, என்று எரிச்சல்பட்டாள் மஞ்சரி, மனதிற்குள்ளேயேதான்.

பின்னே என்ன? நில் என்று சொன்னால் முடியாது என்று ஓடிவிடவா போகிறாள்? வாய்ப்பு கிடைத்தால், மிக அருகில் வந்து நிற்பதும், சட்டென கையைப் பற்றுவதும், வெகு இயல்பாகிக் கொண்டு இருந்தது.

வாழ்க்கை வெற்றிக்கு அவளும் உதவ வேணடும் என்றுதான், முதலிலேயே உத்திரவு போட்டாகிவிட்டதே! அதை நடைமுறைப்படுத்தப் பழக்குகிறானாக்கும்!

அவள் பேசாமல் நிற்க, பிடியை விடாமலே, "உன்னிடம் சற்றுப் பேச வேண்டும், மாடிக்கு வா" என்று கூட்டிச் சென்றான்.

அறைக்குள் சென்றதுமே "என்ன பேச வேண்டும்?" என்று உணர்ச்சியற்ற குரலில் கேட்டாள் மஞ்சரி.

அவளது முகத்தைக் கீழ்பார்வையாகப் பார்த்துவிட்டு "தொழிற்சாலையைப் பார்த்ததும் மகிழ்ச்சியாக உணர்வாய் என்று எண்ணினேன்..." என்று நிறுத்தினான். மகிழ்ச்சியை தெரிவிக்கும் விதமாக அவன் காலடியில் விழுவாள் என்று எதிர்பார்த்திருப்பான்!

எண்ணியதை வெளியில் செல்ல முடியாமல் "இப்படி நடக்க வேண்டியது, அழியும் நிலைக்கு போய்விட்டதே என்று தோன்றியது" என்றாள், அவள், பதிலாக,

"அது சரிதான்." என ஒத்துக் கொண்டவன் தொடர்ந்து பேசினான் "இப்போது உன் சித்தியைப் பற்றிய சில உண்மைகளை நீ தெளிவாகத் தெரிந்துகொள்ள வேண்டும் மஞ்சரி"

"தொழிற்சாலையில் ஒழுங்காக வேலை நடத்தத் தெரியாமல்



கெடுத்து, பணத்தைப் பார்த்ததும் ஆசையில் அள்ளி, தொழிலை அழிய விட்டாள் என்று மொத்தமாக நீ எண்ணியிருப்பாய். ஆனால், இந்தத் தொழிற்சாலையில் முடிந்த அளவு திருட வேண்டும் என்று திட்டமிட்டே, அந்த அம்மாள் வேதவல்லி வேலை செய்திருக்கிறாள். கடந்த ஓர் ஆண்டில், அவள் தொழிற்சாலையில் இருந்து, திருடிய தொகை என்ன தெரியுமா? அறுபது லட்சம்?" என்று சசாங்கன் கூறவும் "அம்மாடியோ!" என்று மஞ்சரி அதிர்ந்தாள்.

அறுபது லட்சத்தைச் சுருட்டி வைத்துக் கொண்டு, அந்தக் கடன்காரர்களுக்கு வெறும் பத்து லட்சம் கூடத் தர மாட்டேன் என்றாளே பாவி!

"அறுபது லட்சமா? அவ்வளவு பணம் எடுக்க, எப்படி முடிந்தது?" என்று திகைப்புடன் கேட்டாள் இவள்.

கால்கள் தடுமாற அனிச்சையாக அவள் உட்கார இடம் தேடுவது புரிந்து, அருகில் கிடந்த கட்டிலில் சசாங்கன் அவளை அமர வைத்தான்.

ஒரு நாற்காலியை இழுத்துப்போட்டுக்கொண்டு, அவளுக்கு எதிரே அமர்ந்து "உனக்குத் தெரியுமோ என்னவோ, பொதுவாக சுகவனம் சார்போல ஆர்டர் எடுத்து, பொருட்களைச் செய்து கொடுப்பவர்கள், ஒவ்வொரு ஆர்டருக்கும் முதலில் கொஞ்சம் முன்பணம் வாங்கி மிச்சத்துக்குக் கையிலிருந்து போட்டு, மூலப்பொருட்களை வாங்கி, தொழிலாளர்களுக்கு கூலி கொடுத்து, ஒப்புக் கொண்ட வேலையைச் செய்து முடிப்பார்கள். முடிந்த பொருட்களை சப்ளை பண்ணும்போது, தங்களுக்கு குறிப்பிட்ட சதவீதம் லாபம் வைத்து, ஆர்டர் கொடுத்தவர்களிடம் மொத்தப் பணத்தையும் வசூலிப்பார்கள்.

"அடுத்த ஆர்டர் கிடைக்கும்போது, லாபம் தவிர்த்து மீதிப் பணத்தை மூலப்பொருள் வாங்க மற்ற செலவுகளுக்கு பயன்படுத்துவார்கள். அந்தப் பணம்தான் 'ஒர்க்கிங் கேபிடல்' என்பது.

"ஆனால் வேலை முடிந்த பணம் வரவர, அதை ஒர்க்கிங் கேப்பிடலாகப் பயன்படுத்தாமல், வேதவல்லி, அப்படியே தனக்கு கொண்டு போயிருக்கிறாள். தடுக்க முயன்ற நிர்வாகி, மற்ற அதிகாரிகளை வேலையில் இருந்தே விரட்டிவிட்டாள்.

"நீ வேறு முழு நிர்வாகத்தையும் அவள் கையில் எழுத்து மூலமாகக் கொடுத்துவிட்டாயா? மதுவுண்ட மந்தி என்பார்களே, அதே போலக்குரங்காட்டம்தான்! அதிகாரிகள் யாராலும் அவளை மீறி உன்னை அணுகவும் முடியவில்லை.

"ஆனால் தொழில் பற்றி அடியோடு ஒன்றும் தெரியாததாலேயே, அவள் அந்தப் பணத்தை திருடிச் சேர்த்தாள். கொஞ்சமேனும் தெரிந்திருந்தால்... ஏன் மஞ்சு, இப்படி ஒரு பேராசைக்காரியிடம், தொழில் நடைமுறை தெரியாதவளிடம் கண்ணை மூடிக்கொண்டு எல்லாப் பொறுப்பையும் கொடுத்தாய்?" என்று அவளது கையைப் பற்றி கேட்டான் சசாங்கன்.

"அது... சித்திக்கு எதுவும் தெரியாது என்பதே எனக்குத் தெரியாதே! பொறுப்பை அவர்களிடம் ஒப்படைக்க இருந்ததால், தொழில் பற்றி அப்பா எல்லாம் கற்றுத் தந்ததாகச் சித்தி கூறியதை, நான் முழுதுமாக நம்பிவிட்டேன். பாருங்கள், என் அம்மாவை எனக்குத் தெரியாது. இவர்கள்தான் எல்லாம். பிரியமாகவே வளர்த்தார்கள். அபிக்கும் எங்களுக்கும் வேறுபாடே காட்டியதில்லை. அப்படித் தாயாய் இருந்து வளர்த்தவர்கள், பொய் சொல்லக்கூடும். கெடுதல் செய்வார்கள் என்று, எப்படி எண்ணுவது?" என்று மஞ்சரி கேட்டாள் "அதுவும், உன் விருப்பம் போல மேலே படிம்மா என்று எனக்காகவே பரிவது போலக் கூறவும்... நான் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவே இல்லைப்பா!" என்றாள் அவள் வருத்தத்தோடு.

யோசனையாகப் பார்த்துவிட்டு, உச்சுக் கொட்டினான் சசாங்கன். "உன் சிற்றன்னை சொன்ன பொய்களில் அதுவும் ஒன்று. சுகவனம் சார் அவளுக்கு ஒன்றும் தரவில்லை என்றானதும் இயன்றவரை சுருட்ட வேண்டும் என்று முடிவு செய்துவிட்டாள். தொழிற்சாலைக்குள் போனால்தான் என்ன மாதிரி எடுப்பது என்றே தெரியவரும். நீயும் கூட வந்தால், அது முடியாது.

"முழுக்க பணம் சுருட்டும் நோக்கத்திலேயே காய் நகர்த்தி இருக்கிறாள். அதையே செய்தும் இருக்கிறாள். ஆனால், அவளுக்குத் தெரியாதது. 'ஒர்க்கிங் கேப்பிடலை ஒழுங்காகத் தொழிலில் போட்டு, போட்டு சுழற்சியில் விட்டிருந்தால், உங்கள் தொழிற்சாலையில் லாபமே, ஆண்டுக்கு ஐம்பது லட்சம் வந்திருக்கும். எத்தனையோ ஆண்டுகள், தொடர்ந்து, கோடிக்கணக்கில் சேர்ந்திருக்கலாம்!



ஆனால் பொன் முட்டையிடும் வாத்தின் வயிற்றை அறுத்தது மாதிரி, முன் ஆர்டர்களின் மூலம் வந்த பணத்தையெல்லாம் மறுபடியும் தொழிலில் பயன்படுத்தாமல், அள்ளிக்கொண்டு போயிருக்கிறாள்.

"தொழிற்சாலைக்குள் வந்த தொகைக்கு செக்டிடி என்று ஆதாரம் இருக்கிறது. ஆனால் நீ முழு அதிகாரத்தைக் கொடுத்துவிட்டதால், எடுப்பது அவளுக்கு எளிதாக போயிற்று. உங்கள் நிர்வாகி நல்லவர். அவரையேப் பார்க்கச் சொல்லி, வாரம் ஒருதரம் கணக்குகளை மேற்பார்வை பார்த்திருந்தாலே போதுமானதாக இருந்திருக்கும். உன் அப்பா பார்த்த அளவு லாபம் வந்திராவிட்டாலும் இப்படி ஒன்றுமில்லாமல் போயிராது. ஆனால் இதிலும் நன்மை இருக்கிறது. வேதவல்லி பற்றி முழுதாக அறிந்து கொண்டாயே! ரொம்பவும் விலை உயர்ந்தது என்றாலும், நீங்கள் மூவருமே அறிய வேண்டிய பாடம்தான்!"

அன்றைய பாழடைந்த தோற்றம், மஞ்சரிக்கு நினைவு வந்தது.

இன்றைய நிலைக்கு கொண்டு வருவது என்றால், எளிதல்ல. பெரும் பணம் முதலீடு பண்ணாமல் முடியாது.

சசாங்கனின் குடும்பத் தொழிலில் இருந்து, அறுபது எழுபது லட்சம் என்று அவன் தனிப்பட எடுத்து, மனைவி வீட்டுத் தொழிலுக்காக செலவு செய்ய எல்லோரும் ஒப்ப மாட்டார்கள். குடும்பத்தில்எல்லோரும் ஒப்ப முடியாததை, இவனும் செய்ய மாட்டான் என்று, இன்னோரன்ன வார்த்தைகளில் சசாங்கனே சொல்லியிருக்கிறான், பின்னே?

"எப்படி சமாளித்தீர்கள், சசி?" என்று கம்மிய குரலில் விசாரித்தாள் அவள்.

ஒருகணம் அவனது கைப்பிடி இறுகியது. பிறகு, அவளது கையைத் தட்டி கொடுத்து விவரம் சொன்னான்.

சுகவனத்திடம் பேரன்பு பூண்டவர் அவருடைய வக்கீல் என்பது நூற்றுக்கு நூறு உண்மை. இருபது வயது தாண்டிய பெண், சுய புத்தியோடு எழுதிக் கொடுத்ததை, அவரால் ஒன்றும் செய்ய இயலாது. ஆனால் சட்டப்படி சரிதானா என்று பார்த்துச் சொல்வதாக கூறி, ஒரு நகல் எடுத்து வைத்தார். சரிவுக்கு காரணம் வேதவல்லிதான் என்று காட்டும் அல்லவா?

"எந்த அசல் பத்திரம் தேவகி இன்டஸ்ட்ரீசை அழியச் செய்ததோ,

அதே பத்திரத்தின் நகலைக் கொண்டுதான், அந்த தொழிலை மீட்கவும் முடிந்தது" என்று மேற்கொண்டு விவரம் கூறினான்.

வேதவல்லியைத் தனியே சந்தித்து. அவன் பொறுப்பேற்றதில் இருந்து சுருட்டி, டெப்பாசிட் செய்த முழுப் பணத்தையும் தராவிட்டால், அவளது கணக்கில் இருக்கும் எல்லாப் பணமுமே இங்கிருந்து எடுத்தது என்று கேஸ் போட்டு பைசா எடுக்க முடியாமல் முடக்கி விடுவேன் என்று மிரட்டியது. அவள் பணமே கிடையாது என்று மாய்மாலம் செய்து அழுதது எல்லாம் மஞ்சரியிடம் எடுத்துச் சொன்னான்.

"உன் தந்தை எனக்கு தந்திருந்த ஒரு தகவல், இந்தச் சமயத்தில் எனக்கு மிகவும் உதவியாக இருந்தது. வேதவல்லி பல ஆண்டுகளாக பணம் சுரட்டிப் பதுக்கி வைத்த பாங்கி பற்றிய விவரம்! பணம் நிறையச் சேரச் சேர, அங்கேகிடைத்த மரியாதை ஒரு பக்கம், இந்த இடம் மற்றவருக்குத் தெரியாது என்ற எண்ணமுமாக, பணத்தை வேறு எங்கும் வேதவல்லி கொண்டு செல்லவும் இல்லை.

"வேறோர் அதிகாரி மூலம் தெளிவான விவரத்தைத் தெரிந்து கொண்டு, வேதவல்லியிடம் பேசினான்.

"அந்த பாங்கின் டவுன் கிளையில் நீ பணத்தை பதுக்கியிருப்பது எனக்குத் தெரியும். ஒரு காசு கூட நீ எடுக்க முடியாதபடி ஒரு புகார் கொடுத்திருக்கிறேன். ஒழுங்கு மரியாதையுடன் நடந்துகொண்டால் கௌரவமாக வாழ்வதற்கு மிச்சம் இருக்கும்படி செய்வேன். இல்லாவிட்டால், எல்லாவற்றையும் இழந்து நடுத்தெருவில்தான் நிற்க நேரும் என்று மிரட்டினேன்.

"முதலில் மசியாதபோதும், தொழிற்சாலைப்பொறுப்பை எடுத்த பத்திர நகல், அதன் பிறகாக அவள் பாங்கில்போட்ட தொகை பற்றிய விவரம் எல்லாம் சொல்லி, முழுவதையும் பிடுங்கி விடுவேன் என்று மிரட்டவும், ஆள் பயந்துவிட்டாள்.

"தொழிற்சாலையில் எடுத்ததைத் திருப்பித் தருகிறேன். மற்றது கணவரே எனக்குக் கொடுத்தது என்று நாடகம் போட்டுப் பார்த்தாள்.

"எனக்குத்தான் எல்லாம் தெரியுமே! சுகவனம் சார் கொடுத்ததும், அப்போதே அவள் எடுத்ததும்! பாவம் அவர் இறந்ததே, அவளைப் பற்றி அறிந்த அதிர்ச்சி காரணமாகத்தானே? ஆனால் அவருடைய மனைவியாகப் பல ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறாய். அதற்காக



விடுகிறேன்" என்று அவளது பழைய திருட்டு பணத்தை, அவளே வைத்துக் கொள்ளட்டும் என்று விட்டுவிட்டேன்.... என்னம்மா?"

மஞ்சரி உடல் விறைத்து நிமிர்வதை கண்டு விசாரித்தான் அவன்.

தேர்ந்தெடுத்த மாப்பிள்ளை கெட்டவன் என அறிந்ததுதான், தந்தையின் மறைவுக்குக் காரணம் என்று சித்திசொன்னதை, அவளும் நம்பினாளே! கடைசியில்...

கைகளைப் பற்றியிருந்த வலிய விரல்களைப் பார்த்தவள், தன்னை மீறி அவனது கைகளில் முகம் புதைத்து "ஐயோ அப்பா..." என்று அழுதாள்.

கிடைத்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வதுதான் புத்திசாலித்தனம். ஆனால் வேதனையில் தவித்துக் கொண்டிருந்த மனைவியை, அவளது பலவீனமான மனநிலையில் அணைத்து ஆறுதல் படுத்தி தன் வசப்படுத்திக் கொள்ள சசாங்கனின் மனம் இடம் தரவில்லை.

அவனுடைய மனைவி, அவனோடு காதலில்தான் இணைய வேண்டும்.

மஞ்சரியின் கண்ணீர் சற்று குறையவும், போய்த் தண்ணீர் எடுத்து வந்து குடிக்கச் செய்தான்.

தண்ணீரை மெதுவாக மிடறு விழுங்கியபோதே மஞ்சரியின் மனம் மெல்லத் தேறலாயிற்று. கணவன் கைகளில் முகம் புதைத்து அழுதது குறித்து, கூசவும் செய்தது.

இப்போது என்ன?

தாயாய் நினைத்தவள் பேயாய் மாறியதோடு தந்தையின் மரணத்துக்கும் காரணமாகிவிட்டாள். அதற்காக, சசாங்கன் கையில் விழுந்து அழ வேண்டுமா?

வாணலியும் அடுப்பு நெருப்பும் நினைவு வந்தன.

சித்தி கெட்டவள் என்பதாலேயே, சசாங்கன் நல்லவன் என்று ஆகிவிடுமா? அல்லது அவள் கண்ணால் பார்த்தது இல்லை என்று தான் மாறிவிடுமா? எரிகிற கொள்ளியில் எந்தக் கொள்ளி நல்ல கொள்ளி என்று பேதம் பிரிப்பது.?

முகம் இறுக மஞ்சரி நகர்ந்து அமரவும், சசாங்கனின் புருவ மத்தியில் முடிச்சு விழுந்தது. சற்றி வளைக்காமல், நேரடியாக விஷயத்துக்கு வந்தான்.

"உன் சித்தி எப்படிப்பட்டவள் என்று தெளிவாகத் தெரிந்துவிட்டது உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுகிறவள். திருட்டுத்தனம். தன்னலம்! பிறர் வாழப் பொறுக்காதவள். இவ்வளவு தெரிந்த பிறகும், அவளது பேச்சை நம்பி, என்னை வெறுப்பது சரியில்லை. சரியாக இராது என்று உனக்கு இன்னுமா தோன்றவில்லை?" என்று சற்று கசந்த குரலில் சசாங்கன் கேட்டான்.

மஞ்சரி சட்டென நிமிர்ந்தாள்.

ஓஹோ! பெரிய உதவி செய்தோம். மனைவி ஓடி வந்து காலில் விழுவாள் என்று எண்ணினான் போல!

தலையை சிலுப்பி "அப்படி சித்தி சொன்னதை மட்டும்வைத்து, முடிவெடுக்க நான் என்ன முட்டாளா?" என்று அவனிடமே கேட்டாள் அவள்.

"இப்போதைக்கு அப்படித்தான்தெரிகிறது!"என்றான் அவன் முணுமுணுப்பாக

"என்னது?"

"நீதான் சொல்லேன், வேறு என்ன காரணம்? உன் சித்தி கிளப்பிவிட்ட இந்தச் பிரச்சினை பற்றி, உன் தந்தை என்னிடம் விளக்கம் கேட்டு, நான் கொடுத்த விளக்கத்தை அவர் ஒப்புக் கொள்ளவும் செய்த பிறகு, இன்னும் என்ன?" என்று கேட்டான் அவன்.

"அதற்கெல்லாம் முன்பாகவே நானே என் கண்ணாலேயே பார்த்திருக்கிறேன்" என்று அறிவித்தாள் அவள்.

தோளை குலுக்கி "நீ உன் கண்ணால்தானே பார்க்க முடியும்?" என்றான் அவன்.

"விட்டா?"என்று அவள் முறைக்கவும் "அப்படியில்லை?" என்றான் அவன் சமாதானமாக "ஒருவேளை, அடிக்கோடிட்டு எழுதுவது போல அழுத்தம் கொடுப்பதற்காக, அப்படிச் சொன்னாய் போல! நீ எதை, எப்போது பார்த்தாய்?" என்று விவரம் கேட்டான்.

"ஏன்? மாற்றிச் சொல்ல முயற்சியோ? நான் அப்பா அல்ல. என்னிடம் அதெல்லாம் நடக்காது!" என்றாள் அவள் திடமாக.

"அவ்வளவு நிச்சயம் என்றால், என்னவென்று சொல்வதுதானே? இவ்வளவு தயக்கம் எதற்கு"

கேட்டாயல்லவா? வாங்கிக் கட்டிக்கொள் என்று ஆத்திரத்துடன்



பொரிந்து கொட்டிவிட்டாள் மஞ்சரி.

"ஃபீனிக்ஸ் மாலில் அவன் பெண்களுக்குரிய ஆடைகளை வாங்கிக் குவித்தபோது, நேரிலேயே பார்த்ததை பற்றிக் கூறினாள்.

திகைத்து நின்றவனை ஏளனமாகநோக்கி "அதில் சிலது சற்றே குனிந்தால் கூட, ஆபாசமாகத் தெரியக் கூடியவை. சற்று உயரமான... உங்கள் உயரம் உள்ளவர்கள் சும்மா பார்க்கும்போதும், அப்படித்தான் இருக்கும். அதுமாதிரியான ஆடைகளை ஒரு பெண்ணுக்கு வாங்கிக் கொடுப்பவருக்கு, அவளுடன் என்ன விதமான உறவு, பழக்கம் இருக்கும்? சொல்லுங்கள்?" இகழ்ச்சியாக கேட்டாள்.

அவன் பேசாமல் பார்க்கவும் "என்ன பதிலையே காணோம்? தொண்டையில் எதுவும் அடைத்துக்கொண்டு விட்டதா? அல்லது தேள் கொட்டிய திருடன் என்பார்களே, அந்த மாதிரி நிலைமையோ?" என்று குத்தலாக வினவினாள்.

இறுகக் கண் மூடித் திறந்து, "விதி கொடிது என்பதன் பொருள் இப்போது தெரிகிறது. ஆனால் ஒன்றை யோசியேன். உன் தந்தை என் மீதுவைத்த நம்பிக்கையை எண்ணிப்பார். அது பலித்திருக்கிறதுதானே? அது போல நீபார்ப்பதற்கும் வேறு விளக்கம் இருக்கக் கூடாதா, மஞ்சரி" என்று மெல்லக் கேட்டான் சசாங்கன்.

"மற்றது எப்படியோ? இந்த விஷயத்தில் வாய்ப்பே கிடையாது என்று, உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும்" என்றாள் அவள் தீர்மானமாக "அப்படி நீங்கள் ஏதாவது என் காதில் பூ சுற்றி எண்ணினால் அது நடக்காத காரியம், தெரிந்து கொள்ளுங்கள்"

"ஓ! சரி இப்போதைக்கு விஷயம் இப்படியே இருக்கட்டும். பிறகு பார்ப்போம். ஆனால் ஒன்று இவ்வளவு தெளிவாக நினைவு வைத்திருக்கிறாயே! அதுதான் ஆச்சரியமாக இருக்கிறது" என்று பேச்சை முடித்தான் சசாங்கன்.

அலட்சியமாக தலையைத் திருப்பிய மஞ்சரியின் விழிகளில் நீர் நிரம்பி வழிந்தது!

தோழிகள் 'வாவ்' என்றதும் பல நாட்கள் அவன் நினைவு வந்ததும்!

ஆனால் ஒன்று அவனால் பதில் சொல்ல முடியவில்லை என்றால், சித்தியின் குற்றத்தை ஒப்புக் கொள்கிறான் என்றுதானே அர்த்தம்! எச்சரிக்கை, குறைந்த பட்சமாக இந்த விஷயத்தில் சரியேதானே?

அடுத்த ஒரு வாரம் எப்படியோ கழிந்தது. சசாங்கன், பெரும்பாலும்

வெளியேயே சுற்றினான். வீட்டில் இருக்கும் நேரத்திலும் மனைவியின் அருகே கூட வந்தானில்லை.

சும்மா சும்மா பக்கத்தில் வந்து நெருங்கி நிற்பதும், அருகில் அமர்வதும் ஒரு விதமாகப் பழகிப் போயிருந்தவளுக்கு இந்த விலகல் வேதனையைத் தந்தது. ஆனால் கணவன் குணம் அறிந்தும், அவனுக்காக ஏங்குவதை நினைத்து தன்மீதே வெறுப்பு வந்தது.

சும்மாவே நொந்து கிடந்தவளிடம் ரஞ்சனி வந்து "அக்கா, முதலில் சித்தி மூட்டிய கலகத்தில் என்னவோ அசட்டத்தனம் பண்ணுகிறாய் என்று நினைத்தேன். ஆனால், எல்லாம் சரியாகப் போகிற நேரத்தில், மறுபடியும் கிறுக்குத்தனம் பண்ணாதே" என்று புத்தி சொன்னாள்.

திகைத்துப்போய் "நான் என்னடி செய்தேன்?" என்றாள் தமக்கை.

"எல்லாம் தெரியும். திருமணத்தன்றே அத்தானை வெளியே விரட்டியவள்தானே, நீ! அன்றிரவு நானே பார்த்தேன். மறுபடியும் எதையாவது பண்ணாதே. நாலைந்து நாட்களாக, அத்தான் முகமே சரியில்லை. எப்போதும் ஜோக்கடித்துச் சிரிக்கிறவர், உம்மென்று இருக்கிறாரே என்று அபி கூட வருத்தப்பட்டாள் அக்கா 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை'க்கா. உனக்கு என்ன கோபம் இருந்தாலும் எங்கள் இருவரையும் நினைத்தேனும் அதை ஒதுக்கிவிட்டு, நல்லபடியாக இரு" என்று புத்தி கூறிவிட்டு போனாள்.

இந்தச் சின்ன பிள்ளைகள் கவனிக்கிற அளவுக்கு போய்விட்டதே என்று மஞ்சரி இன்னமும் துடித்துப்போனாள்.

ஆனால், இதில் அவள் என்ன செய்ய முடியும்? அவனாலேயே சமாதானம் சொல்லி சமாளிக்க முடியாத பிழை. அதை ஒதுக்கி அவனோடு வாழ்வது எப்படி முடியும்?

அத்தோடு இப்போது அவனே அல்லவா, விலகிப் போகிறான் என்று எண்ணும்போதே, அவளுக்கு இன்னமும் கஷ்டமாக இருந்தது. ஆனால் அன்றைய பேச்சுக்கு பிறகு, வேறு எதுவும் கேட்கவும் முடியாமல் போயிற்று.

இப்படி மஞ்சரி தவித்துக் கொண்டிருக்கையில், ஒருநாள் சசாங்கன் அவசரம் என்று அவளை விழுப்புரத்துக்கு அழைத்துப் போனான்.

முகமலர்ச்சியோடு கையாட்டிய ரஞ்சனியைப் பார்க்கையில், தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது அவளுக்கு.

அக்கா சமாதானப் பயணம் போவதாக, அவள் எண்ணம். ஆனால்



விழுப்புரத்தில் மஞ்சரிக்கு என்ன காத்திருக்கிறதோ இனி, எங்களுக்கு ஒத்து வராது என்று பெற்றோரிடம் தெரிவிப்பதற்காகக் கூட, சசாங்கன் அவளைக் கூட்டிப் போகலாம்.

புரியாத தவிப்புடன் புகுந்த வீட்டுக்குப் போனால், அங்கேயும் இவர்கள் வரவு யாருக்கும் பிடித்த மாதிரி தெரியவில்லை.

"மஞ்சரியும் உடன் வர வேண்டுமா?" என்று மாமியார் தடுத்தும், மகன் கேட்கவில்லை.

"இல்லையம்மா. இப்போதுஎதையும் பார்க்க முடியாது" என்று சொல்லி சசாங்கன் அவளையும் கூட்டிக்கொண்டே ஒரு வீட்டுக்குச் சென்றான்.

அங்கே படுக்கையில் கிடந்த பெரியவர் அவர்களது திருமண வரவேற்பின்போது கம்பூன்றி நடந்து வந்தவர். நின்று பேச விடாமல், மற்ற உறவினர், அவரைப் கூட்டிச் சென்றது மஞ்சரிக்கு நினைவு வந்தது.

மாமியார் தடுத்தும் கூட்டி வந்திருக்கிறானே, இப்போது என்ன தெரியவரப் போகிறது?

அவளை ஒருதரம் பார்த்துவிட்டு, சசாங்கனை குனியச் சொல்லி, தெளிவற்ற குரலில் மன்னிப்புக் கேட்டார் பெரியவர். "கொடுத்து வைக்காத கழுதை! அந்தக் கழுதையால், உனக்கு கெட்ட பெயர். கண்டால் வெட்டிப் போட்டு விடுவேன்"

குறுக்கிட்டு "இந்த நேரத்தில் இது என்ன பேச்சு தாத்தா? எங்கோ அவள் சந்தோஷமாக இருக்கட்டுமே!" என்றான் சசாங்கன்.

மறுப்பாகத் தலையசைத்து "இல்லை அவளைக் கண்டால் வெட்டிப் போடச் சொல்லி, பையனிடம்" எனும்போதே அவரது குரல் தேய்ந்து மறையவும், அருகில் நின்ற மனிதன், சைகையால் அவர்களை வேறிடம் அழைத்துச் சென்றான்.

"இப்படித்தான் நினைவு வருவதும் போவதுமாக இருக்கிறது. மிஞ்சி மிஞ்சி இரண்டு நாள் தாங்காது என்றார் மருத்துவர். உன்னிடம் மன்னிப்புக் கேட்டே ஆக வேண்டும் என்று தவிப்பு. அதனால்தான் வரச் சொன்னேன்" என்று சொன்னது கூட மன்னிப்புக் கோரும் விதமாகவே இருந்தது.

திரும்பிச் செல்லும்போது "யார் , அவர்?" என்று மஞ்சரி விவரம் கேட்டாள். "அத்தையிடம் கேட்டபோது, உங்களிடமே கேட்டுக்

கொள் என்று விட்டார்கள்"

சிறு மௌனத்தின் பின், சசாங்கன் சொன்னான் "இன்னும் ஒரு பத்து தினங்கள் பொறுத்துக்கொள். எல்லாம் சொல்கிறேன்" என்றான் சாலையில் கவனமாக.

'எல்லாம் என்றால்? எல்ல்...லாமேவா? எப்படி முடியும்? ஒருவேளை முடியுமோ?

பத்து நாட்களும் எப்படிக் கழிந்தனவோ, மஞ்சரிக்குத் தெரியாது.

பத்தாவது நாள் இரவில் அவனுடைய நண்பர்கள் வெளிநாட்டுக்குப் போவதாகவும் அவர்களை வழியனுப்ப, தன்னோடு வருமாறு சசாங்கன் மஞ்சரியை கூப்பிட்டான்.

அவனது முகமோ குரலோ எதையும் காட்டாதுபோதும், அவனது அமைதியே எதையோ உணர்த்த மஞ்சரி உடனே கிளம்பிவிட்டேன்.

விமான நிலையத்தில் போய்ப் பார்த்தால், செக்யூரிடி செக் செய்யக் கிளம்பும்போதுதான் மஞ்சரி அவர்களைப் பார்க்க முடிந்தது. நண்பர்கள் என்றால், இரண்டு ஆண்கள் அல்ல. கணவன் மனைவி ஜோடி.

அவர்கள் அருகே செல்லும்போதே "அந்தப் பெண்ணை நன்றாகப் பார்த்துக்கொள்" என்று அடிக்குரலில் சசாங்கன் கூறினான்.

பயணிகள் இருவருமே மஞ்சரியிடம் பிரியமாகப் புன்னகை செய்தபோதும், சசாங்கனுக்கு உணர்ச்சியோடு நன்றி செலுத்தினர்

பொருத்தமான ஜோடிதான். அந்தப் பெண்ணும் மிக அழகாகவே இருந்தாள். ஆனால் எதற்காக அவளை நன்கு பார்த்துக் கொள்ளச் சொன்னான்?

மீண்டும் பார்த்தால், சிரமப்படாமல் அடையாளம் காண்கிற அளவுக்கு. அந்தப்பெண்ணின் முகத்தை மஞ்சரி மனதில் பதித்து கொள்ளும்போதே, செக்யூரிட்டி செக்குக்காக அவர்கள் சென்றுவிட, உடனே சசாங்கனும் மனைவியை அழைத்துக் கொண்டு வீட்டுக்குக் கிளம்பிவிட்டான்.

வீட்டை அடைந்ததும், முந்தைய வழக்கம் போலக் கைப்பிடியாக அவளை அழைத்துக் கொண்டு அவர்களது அறைக்குள் சென்றான்.

"அந்தப் பண்ணின் முகம் நினைவிருக்கிறதுதானே?" என்று கேட்டவாறுஅவனது பொருட்களை வைக்கும் கபோர்டில் இருந்து



ஒரு ஃபைலை எடுத்து வந்தான்.

அதனுள்ளிருந்து ஒரு திருமண அழைப்பிதழை அவளிடம் எடுத்துக் கொடுத்தான்.

ஆர்வத்துடன் கையில் வாங்கியதுமே, தீயை தொட்டவள் போலக் கையை உதறி, அழைப்பிதழைக் கீழே போட்டுவிட்டாள் மஞ்சரி.

ஏனெனில், அது சசாங்கனின் திருமண அழைப்பிதழ் இன்னொரு பெண்ணோடு.!



## 13 உண்மை அறிவாயோ வண்ணமலரே?

'ஹோப்பிங் எகைன்ஸ்ட் ஹோப் என்பார்கள்.

அதுபோல, ஏதோ நல்லது வரப் போகிறது என்றும் எப்படி வர முடியும் என்றும் ஆசையும் நிராசையுமாக, நம்பிக்கையும் அவநம்பிக்கையுமாக, மாறி மாறி அவளை ஆட்டிப் படைக்க, பத்து நாட்கள் மஞ்சரி தவியாய்த் தவித்த பிறகு, சசாங்கனின் குற்றத்தை உறுதிப்படுத்த சான்றாக, அந்த அழைப்பிதழை அவனே அவளிடம் கொடுக்கிறானே!

சிரித்த முகமாக, அழைப்பில் அவனது படம் வேறு!

இந்த அழகில் அவனோடு ஒத்து வாழுமாறு ரஞ்சனியின் புத்திமதி!

அழைப்பிதழை அவன் முகத்தில் விசிறியடிக்காமல், கீழே போட்டாளே! அதுவே பெரிது.

"அச்சச்சோ!"என்று கீழே கிடந்த அழைப்பிதழை எடுத்து, முகம் திருப்பி நின்ற அவளிடம் நீட்டினான் சசாங்கன். "படத்தைப் பார்த்தாயா?" என்று கேள்வி வேறு!

அழைப்பிதழை வாங்காமலே "ம் பார்த்தேன்! நன்றாக இளிக்கிறீர்கள்!" என்றாள் அவள் எரிச்சலோடு.

"ஓ! என் படத்தை மட்டும்தான் பார்த்தாயா? நான் அந்தப் பெண்ணின் படத்தைப் பார்ப்பதற்கு அல்லவா, கொடுத்தேன்" என்றான் இலகுவான குரலில்.

பெபெண்ணின் படமா?அப்படியானால்...?

சட்டென்று அவன் கையில் இருந்த அழைப்பிதழைப் பிடுங்கிப் பார்த்தால், கூப்பிய கைகளின் அடுத்த ஓரமாக இருந்து சிரித்தவள்...

அவள்! அந்தப் பெண்!

இப்போது இன்னொருவனுடைய மனைவியாக விமானத்தில் எதிப் பறந்து கொண்டிருப்பவள்! இவனோ? மனைவியோடு போய் வழியனுப்புகிறான்!

அரக்கப் பரக்க அவன் முகத்தைப் பார்த்தாள் மஞ்சரி "எனக்கு ஒன்றும்புரியவில்லையே!" என்றாள் ஆர்வமும் பரபரப்புமாக.

லேசாக முறுவலித்தான் கணவன்.

"சொல்லுகிறேன்" என்று கட்டிலில் உட்கார்ந்து அருகே சுட்டிக் காட்டினான்.

ஒருகணம் தயங்கியபோதும் அவன் காட்டிய இடத்திலேயே அமர்ந்து "சொல்லுங்கள்" என்று அவன் முகத்தைப் பார்த்தாள் மஞ்சரி.

முறுவல் விரிய அவன் சொல்லத் தொடங்கினான்

"இந்தக்கதை... ம்கூம். கதைஅல்ல, வரலாறை எங்கிருந்து தொடங்குவது? உன் குழப்பங்களுக்குத் தீர்வு காண, இரண்டு ஆண்டு கால கதை போதும் என்று நினைக்கிறேன். அதிலேயே தொடங்குகிறேன்.

"நானும் வாசுவும் படிக்கிற காலத்திலேயே நண்பர்கள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு நாள் வாசு கையைப் பிசைந்துகொண்டு என்னிடம் வந்து நின்றான். என்ன என்றால், அவனுடைய காதலியை, எனக்குப் பெண் பேசுகிறார்களாம்.

"அப்போது எனக்குத் திருமணம் செய்வது பற்றி, எங்கள் வீட்டில் தீவிர முயற்சி எடுத்துக் கொண்டிருந்தார்கள். சென்னை கிளையைத் தொடங்கும்வரை, வேண்டாம் என்று நான் தடுத்துக் கொண்டிருந்தேன்"

"வாசு விஷயத்தை சொன்னதும், இதில் என்னடா பிரச்சினை இருக்கிறதா? இந்தப் பெண் வேண்டாம் என்று மறுத்து விடுகிறேன் என்றால், அவன் மறுபடியும் கையைப் பிசைந்தான். என்னடா என்றால், ஜாதிப் பிரச்சினை!

"பத்து பதினைந்து ஆண்டுளுக்கு முன் கலப்பு மணம் சாதாரணமாக இருந்த நிலை அடியோடு மாறி, இப்போதுதான் ஜாதிப்பேய் தலை விரித்து ஆடுகிறதே! நான் மறுத்தால், இன்னொரு அதே ஜாதிக்காரனுக்கு மணமுடிப்பார்களே தவிர, இவர்கள் இருவரும் இணைய முடியாது. இன்ன மாதிரி என்று தெரிந்தால், இருவரையுமே



வெட்டி கொன்று விடுவார்கள் என்று, மாதவி நிச்சயமாகச் சொன்னாள், சொல்லி அழுதாள்..."

"ஐயோ! ஆமாம், அந்த தாத்தா... அவர் அந்த மாதவிக்குத் தாத்தாதானே? வெட்டிப் போடச் சொல்லி... என்று ஏதோ சொன்னாரே!" என்றாள் மஞ்சரி.

"ரொம்பக் கரெக்ட்!" என்று மெச்சினான் அவன்.

ஒருகணம் மலர்ந்த மஞ்சரியின் முகம் மறுபடி வாடியது. அவன் வாங்கிய துணிமணிகளுக்கு இன்னும் விளக்கம் வரவில்லையே!

தன் வழக்கம் போல, மனைவியின் முகத்தையே பார்த்திருந்த சசாங்கனின் கண்கள் சிரித்தன. "கவலைப்படாதே. அதுவும் வருகிறது" என்று புன்னகை செய்தான்.

அவள் ஆவலோடு பார்க்க, சசாங்கன் தொடர்ந்தான்.

"இந்தப் பிரச்சினையைத் தீர்க்க, அவர்கள் இருவரும் ஒரு திட்டம் வைத்திருந்தார்கள். கொஞ்சம் அரை வேக்காட்டு திட்டம். சரி சரியென்று ஒப்புவது போலச்சும்மாவே இருப்பது. திருமண வேலைகளின் போது யாரும் அறியாமல் மாதவி, வீட்டை விட்டுக் கிளம்பி, சென்னைக்கு வாசுவிடம் வந்து, இருவரும் மணந்து கொள்வது.

"ஆனால் மணந்த பிறகு என்ன செய்வது? மாதவியுடைய சொந்த பந்தங்கள் சென்னையிலும் இருக்கலாமே! யாரோ தூரத்து உறவு அவளை அடையாளம் கண்டு, ஒரு சின்ன தகவல் கசிந்தாலும் அப்புறம் இருவரும் அதோகதிதான். இந்த நாட்டில் எங்கே இருந்தாலும் ஆபத்துதான். நல்லவேளையாக கல்லூரியில் உடன் பயின்ற மற்றவர்களோடு சேர்ந்து சிங்கப்பூர் சென்றதால் மாதவி பாஸ்போர்ட் எடுத்து வைத்திருந்தாள். அதனால் வெளிநாடு ஒரு சாத்தியம் இருந்தது.

"என் ஏற்பாட்டின்படி திருமணத்துக்கு முந்திய கடைசி நாளன்று மாதவி வீட்டை விட்டுக் கிளம்பி வந்துவிட்டாள்.

"நான் அங்கேயே இருந்து, நடந்த களேபரங்களை சமாளித்துக் கொண்டிருந்தேன். அப்போதுதான், மாதவியுடைய தாத்தா தூக்கு மாட்டிக்கொண்டு சாகப்போனார். அவருடைய பரந்த விரிந்த குடும்பத்தில் ஊர்ப்புறத்தில் நண்டு சிண்டெல்லாம் என்ன பெரிய குடும்பம் வீட்டுப் பெண் படி தாண்டி ஓடிவிட்டாள் என்று அவரைப் பார்த்து சிரிப்பார்களாம். சாவிலேயே குறியாக இருந்தார். அவர்

மனரோஷம் ரொம்பவும் அதிகப்படி.
மட்டுமல்ல. அங்கே மான ரோஷம் ரொம்பவும் அதிகப்படி.
"மாதவி வீட்டை விட்டு கிளம்ப, நானும் ஒரு கருவியாக
இருந்தேன் அல்லவா? ஏதாவது செய்து, அந்தச் சாவுகளைத்
தடுத்தாக வேண்டும் என்று எண்ணினேன். செய்யப் போவதைப்
பெற்றோரிடம் சொன்னேன். அவர்களுக்குப் பிடிக்கவில்லைதான்.
கெடப் போவது என் பெயரல்லவா? ஆனால் பல சாவுகளை
தடுப்பதற்காக ஒப்பினார்கள்.

"என்பொறுப்பில் தொடங்கும் சென்னை கிளைக்காக, நான்
இருபது லட்சம் அதிகப்பணம் கேட்டதால், பெண் வீட்டில்
அவர்களாகத் திருமணத்தை நிறுத்தி, பெண்ணைத் தேற்ற,
வெளியூர் அனுப்பி விட்டதாகக் கதை கட்டும்படி பெரியவரிடம்
சொன்னேன். ஆனால் அதுவே, அந்தக் குடும்பத்தின் உள்
வட்டத்துக்குள் என்னிடம் மரியாதையை ஈட்டி வந்தது.
அவ்வப்போது அங்கே என்ன நடக்கிறது என்றுதெரிந்து, இவர்களைப்
பத்திரப்படுத்தவும், முடிந்தது. ஆனால் சிறு கசிவும் ஆபத்தாகிவிடும்
என்று, என் பெற்றோரிடம் கூட, இவர்களைப் பற்றி, சொல்லவில்லை.
எனக்கும் மாதவிக்கும் ஒருவரை ஒருவர் பிடிக்காததால்... அவள்
வீட்டை விட்டுப் போய்விட்டாள் என்றுதான் எண்ணிக்
கொண்டிருக்கிறார்கள்..."

சித்தியின் சொல்லை கேட்டு, தொழிற்சாலைப் பணத்துக்காக
இவன் வந்தாக எவ்வளவு கேவலமாகப் பேசினாள்! ஆனால்,
இன்னும்...

"முதலில் திருமணத்தை மறுத்தாலோ என்னவோ, மாதவி மேல்
ஓரளவு கண்காணிப்பு எப்போதுமே இருந்ததாம். பேஸ்ட், பிரஷ்,
துணிமணி எடுக்கிறாளா என்பதில் இருந்து கவனம்,புத்தகங்களோடு
கிடந்த பாஸ்போர்ட் மீது இல்லாததால் அதை உடைக்குள் மறைத்து
வைக்க முடிந்ததாம். அது தவிர, அவளால் எதையும் எடுத்து வர
முடியவில்லை. பேஸ்ட், பிரஷ் கூட இல்லாமல், அணிந்து வந்த
துணியோடு இரண்டு நாட்கள் இருந்தாள்.

"அப்போதுதான் மாதவிக்காக, நான், அந்த உடைகளை
வாங்கியது. ப்ளீஸ் புருவத்தை சுளிக்காதே. பெண்களுக்கு வாங்கிப்
பழக்கம் இல்லாததால், கண்ணில்பட்டதை எல்லாம் வாங்கினேன்.
கூடவே வாக அவளுடைய கணவன் கேட்டது போல
கவர்ச்சிகரமாகவும், அந்தக் கடையில் கேட்டே வாங்கினேன். ஆனால்



அதற்காக எங்கள் இரண்டு பேருக்கும் திட்டு விழுந்தது. அது
மட்டுமில்லாமல், நிறைய ஆடைகளை மறுநாளே திருப்பி [illegible]
மாற்றி வரவும் செய்து விட்டாள். சொல்லப் போனால் அப்படி
திருப்பும்போது மாதவி சொன்ன காரணம்தான். உன் வீட்டில்
எல்லோரும் கண்ணியமாக [illegible] உடை அணிந்திருந்தைக்
கண்டுகொள்ளவே வைத்தது..."

ஐயோ! அப்படிக் கண்டுகொண்டதை அவன் வாய்விட்டுச்
சொன்னதுதானே. அவன் கேவலமானவன் மட்டுமல்ல, வேஷதாரி
என்றும் முடிவு கட்[illegible] வைத்தது என்று உள்ளூர வருத்தத்துடன்
எண்ணினாள் மஞ்சரி.

"வெளி நாட்டில் வேலை கிடைத்து, இருவரும் சேர்ந்து கிளம்ப
ஒரு வருஷம் காத்திருக்க நேர்ந்தது கம்ப்யூட்டரில் வீட்டிலிருந்தே
செய்யக் கூடியதாக, அவனுக்கு ஒருவேலை நானே கொடுத்தேன்.
ஏதேனும் தேவைக்காக வெளியே செல்லும்போது தூசிக்காக
மறைப்பது போல முகம் மறைத்து வாழ்ந்திருக்கிறார்கள்.

"மஞ்சரி இவர்களைப் பற்றி, என் பெற்றோரிடம் கூட, நான்
சொன்னதில்லை. பெற்றோர் நம்பக் கூடாதவர்கள் என்று அல்ல.
கவனக் குறைவான ஒரு வார்த்தை, பேரழிவுக்கு காரணமாகி
விடக்கூடாதே என்றுதான்..."

குறுக்கிட்டு "அதேபோலத்தான் என்னிடமும் நீங்கள் எதுவும்
சொல்ல முடியவில்லை. அதுதான் கடவுளே! நீங்கள் பதில்
சொல்லாமல் போகவும், தப்பு செய்தால் விளக்கம் தர முடியவில்லை
என்று எண்ணினேனே, தவிர இப்படி ஒரு விளக்கம் இருக்குமோ
என்று ஒரு வினாடி கூட நினைத்தேனில்லையே! உங்களால்,
என்னை மன்னிக்க முடியுமா சசி?" என்று வேதனையுடன் மஞ்சரி
கணவனிடம் மன்னிப்பை வேண்டினாள்.

"என்னை இப்படி சசி என்று அழைத்து, நீ என்ன கேட்டாலும்
என்னால் செய்ய முடியும். ஆனால், இனியும் இப்படி தள்ளி
உட்கார்ந்து பேச வேண்டிய அவசியம் இல்லைதானே?" என்று அவன்
குறுஞ்சிரிப்புடன் கேட்கவும், எல்லையில்லாத ஆறுதலுடன் அவன்
அருகே நகர்ந்து, அவளது தோளில் சாய்ந்து கொண்டாள் அவள்.
அவளைச் சுற்றிவளைத்த கரங்களின் அணைப்பு இறுகுமுன்னே
மெல்ல தளர்ந்து, அவளது கைகளைப் பற்றி வருடினான்.
அவள் கேள்வியாய் நோக்கவும், "கடைசியாக ஒன்று, இப்போது

கொஞ்சம் வலிக்கும் செய்தி சொல்ல வேண்டியிருக்கிறது" என்றான் சிறு தயக்கத்துடன்.

"பரவாயில்லை; சொல்லுங்கப்பா" என்றாள் மனைவி.

"உன் அப்பாவிடன் கடைசிநாள். அன்றிரவு, ரொம்பத் தாமதமாக, பதினோரு மணிக்கு மேல் மாமா என்னிடம் பேசினார்."

"ஓ!" என்று நிமிர்ந்தாள் அவள்.

"பரவாயில்லை. என்மேல் சாய்ந்திருந்தே கேள்" என்று மீண்டும் அவளைத் தன் மீது சாய்த்துக் கொண்டான் சசாங்கன்.

"அப்போது என்னிடம் முதலில் ஒரு கேள்வி கேட்டார். அது உன்னைப் பற்றி. உன்னை எனக்கு பிடித்திருக்கிறதா என்று கேட்டார். ஆமாம் என்றதும், கடைசிவரை கைவிடாத படிக்கும் பிடித்திருக்கிறதா என்று மறுபடியும் கேட்டார்.

மூடிய இமைகளின் பின்னே அந்த காட்சியை உருவகப்படுத்தியவாறே "அப்புறம்?" என்று வினவினாள் மஞ்சரி.

"வாழ்வின் கடைசி நாள் வரை பிரிய முடியாத அளவுக்கு என்று நான் சொன்னதும்"

அவசரமாக நிமிர்ந்து, முகத்தைத் திருப்பி கணவனைப் பார்த்தாள் மஞ்சரி.

"அஅப்போதேவா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டாள்.

அவளது கையைப் பற்றி உதடுகளில் ஒற்றி "அப்போதிருந்துதான்! மலர்கொத்து மாதிரி மரத்திலிருந்து நீ கீழே வந்த வேகமும், நீ கீழே விழாமல் தடுத்து நிறுத்தியபோது உன்னைத் தொட்ட உணர்வும்... பிறவியில் மறக்குமா, என்ன?" என்றவன், அவளது பிரமிப்பை கண்டு "உனக்கும்தான் பாதிப்பு இருந்தது. மற்றபடி சரியான பக்கவாட்டுத் தோற்றம் கூட இல்லை. அதைக்கூட நீ மறந்து விடவில்லையே! எவனோ, எவளுக்கோ வாங்குகிறான் என்று விட்டுவிடவா செய்தாய்?" என்று கேட்டான்.

"ஓஹோ!" என்றவளுக்கு இந்த விளக்கம் மகிழ்ச்சியாகவே இருந்தது. கோபமாகவே என்றாலும் பலமுறை நினைக்கத்தானே செய்தாள்!

ஒப்புதலாகத் தலையாட்டி "அப்புறம்?" என்று கேட்டாள்.

முறுவலில் மலர்ந்த உதடுகளை விரலால் வருடிவிட்டு, சசாங்கன் மீண்டும் தொடர்ந்தான். "அடுத்து அந்த திருமணப் பத்திரிகை பற்றி கேட்டார். அது மற்றவரது ரகசியம் சொல்வதற்கு இல்லை என்றேன்.



ஆனால் அது தப்பானது அல்ல என்றதை, அப்படியே ஒப்புக்கொண்டார். அதன்பின்னரே உன் சித்தி பற்றிய விவரம் சொன்னார். அவர் அறிந்த முழு விவரத்தையும் அதன்பின் எழுதிய உயில் பற்றி கூறினார்." என்றவன், வேதவல்லி பற்றி சுகவனம் சொன்னதைச் சுருக்கமாக எடுத்துரைத்தான்

வேதவல்லியின் பிடியில் இருந்து, மகள் எப்போது எப்படி விடுபடுவாள் என்று தெரியாது. ஆனால் அதற்காக மகளிடம் அவளைக் காட்டிக் கொடுக்க முடியாது. அதன் காரணம், சின்னவள் கதி அதோகதியாகிவிடும் என்று அவர் அஞ்சியதைச் சொல்லவும், மஞ்சரி திகைத்தாள்.

"ஐயோ, அப்பா அது போல எப்படி நினைத்தார்? அபி எங்கள் தங்கை, சசி! சித்தியை அவளோடு நாங்கள் சம்பந்தப்படுத்தி பார்த்ததே இல்லையே. அவள் பிறந்ததில் இருந்தே! அவளுமே எங்களிடம்தான்... நீங்களே பார்த்தீர்களே, சித்தியோடு போக மறுத்து எங்களோடுதானே தங்கிவிட்டாள்!" என்றாள் பொறுமலாக.

அவளைத் தட்டி கொடுத்து ஆறுதல்படுத்தினான் அவன் "உன் அப்பா இருந்த நிலையில், ரிஸ்க் எடுக்க முடியாதும்மா. இருபது ஆண்டுகளாக அறிந்த பெண், பதினைந்து ஆண்டுகால மனைவி! நினைத்துப் பார்! ஆனால் அவர் கேட்டபடி, நான் வாக்கு கொடுத்தேன். வக்கீலும் மாமாவின் விருப்பப்படி எனக்கு உதவியாக இருந்தார்.

"மாமா எச்சரித்திருந்ததால் உன் சித்தியின் நடமாட்டங்களை, அவள் அறியாமல் கவனித்துக் கொண்டே இருந்தேன்.

"உன்சித்தியை மிரட்டி, அவள் தொழிலில் திருடிய பணத்தை வாங்கி தொழிலிலேயே முதலீடு செய்து கொஞ்சம் ஓடியும் வாங்கிப் போட்டதில், தொழில் தலை தூக்கிவிட்டது.

"வேதவல்லியின் விஷமம்.... அல்லது விஷயம் பலது உனக்கும் தெரிந்ததே. என்றாலும், ஒன்றுடன் ஒன்று தொடர்பாக, நடந்த அனைத்துமே உனக்கு தெரிய வேண்டும் என்று தோன்றியது அவ்வளவுதான்" என்று முடித்தவன் மனைவியின் பக்கம் நன்றாகத் திரும்பி "இனி..." என்று கைகளை விரித்தான்.

ஆனால் மஞ்சரியின் முகம், அவனது மகிழ்ச்சியை பிரதிபலிக்கவில்லை. முகம் வாட, அவனைப் பார்த்து "ஆனால்..." என்று இழுத்தாள் அவள்.

"ஐயோ! ஆனால் என்கிறாயே! என்ன 'ஆனால்?' மறுபடியும் என்னம்மா? இன்னும் என்ன பிரச்சினை சீக்கிரம் சொல்லு! புதிதாக என்ன தப்புக் கண்டுபிடித்திருக்கிறாய்?" என்று பரபரத்தான் அவன்.

"வந்து... தப்பு இல்லை. ஆனால்... இறக்கும் தறுவாயில் அப்பாவுக்கு கொடுத்த வாக்குக்காக ஒன்றும் நீங்கள் என்னை..." என்று இழுத்தாள் அவள்.

"அப்பாடி இதுதானா?" என்று மூச்சு விட்டான் அவன். உடனேயே "ஆனால் கொஞ்சமாவது மூளை இருக்கிறதா உனக்கு? உன்னிடம் அன்பு இல்லாவிட்டால், உன் அப்பாவுக்கு அப்படி ஒருவாக்கை கொடுப்பேனா என்று யோசிக்க வேண்டாமா?" என்று அவன் கேட்க, சிறு விசிப்புடன் கணவனின் மார்பில் சாய்ந்தாள் அவள்.

ஆறுதலாக அணைத்து மென்மையாக வருடிக் கொடுத்தவன், சில வினாடிகளுக்குப் பின், அவளது காதோரமாகக் குனிந்து கிசுகிசுத்தான். "இந்த விசிப்பு கண்ணீர் எல்லாம் என் மூடுக்குக் கொஞ்சமும் ஒத்து வரவில்லை, மஞ்சுராணி இதற்குமேல் காத்திருக்கும் சக்தியும் இல்லை. அதனால் அழுவதை விட்டு, என்னோடு சற்று ஒத்துழைக்கிறாயா?"

ஒத்துழைப்பதா?

ஒரு திகைப்புடன் அவனை அண்ணாந்து பார்த்தவளின் முகம் குங்குமமாகச் சிவந்து போயிற்று.

அப்புறம், கொஞ்சமென்ன ரொம்பவே சசாங்கனோடு ஒத்துழைக்கத் தொடங்கினாள் அவனுடைய அன்பு மனைவி மஞ்சரி!

**முற்றும்**